விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-3397)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 19 ஞாயிற்றுக்கிழமை (03.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197

## மத்திய வங்கியின் புதிய ஆளுநராக தமிழரான குமாரசுவாமி நியமனம்

### நாளை ஜனாதிபதி முன் பதவிப்பிரமாணம்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக தமிழரான பொருளாதார நிபுணர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானத்தினை மேற்கொண்ட அதே வேளை, கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி நாளை திங்கட்கிழமை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படவுள்ளார்.

(15-ம் பக்.)

### வாகனம் மோதி பாலகன் மரணம்

(பனிக்கன்குளம்)

ஆட்டோவில் தவறவிடப்பட்ட பொருள் ஒன்றை எடுப்பதற்காக வீதிக்கு ஓடி வந்த 3வயதுப் பாலகனை வாகனம் ஒன்று மோதித் தள்ளியதில் பாலகன் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை உடையார்கட்டுப் பகுதியில்

15 ஆம் பக்கம் பார்க்க....

### த.தே.கூட்டமைப்பு இன்று சந்திப்பு

(கொழும்பு)

வட மாகாணத்தில் அமைக்கப்படவுள்ள பொருளாதார மையம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை கூடி ஆராயவுள்ளது.

வட மாகாண பொருளாதார மையத்தை எவ்விடத்தில் அமைப்பது என்பது தொடர்பாக ஏற்பட்டுள்ள சர்ச்சைகளுக்கு தீர்வு காணும்

16 ஆம் பக்கம் பார்க்க....

### குமாரபுரம் படுகொலை குறித்து 14பேர் இதுவரையில் சாட்சியம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் 20 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற குமாரபுரம் படுகொலை தொடர்பான நீதிமன்ற விசாரணையில் இதுவரையில் 14 பேர் சாட்சியமளித்துள்ளனர்.

அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் 7 ஜூரிகள் சபை முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை 20 வருடங்களின் பின்னர் இந்த வழக்கு விசாரணை ஆரம்பமானது.

எதிரிகளான 6 இராணுவ வீரர்களில் மூன்று பேரை சாட்சிகள் தனித் தனியாக அடையாளம் காட்டியுள்ளனர்.

20 வருடங்களுக்கு முன்பு யுத்த காலத்தில் 11.02.1996 அன்று இரவு இடம் பெற்ற இந்த படுகொலை சம்ப

15 ஆம் பக்கம் பார்க்க....

### பொறுமை காக்குமாறு முஸ்லிம்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் கடந்தவாரம் ஊடகமொன்றுக்கு தெரிவித்த கருத்தானது, இஸ்லாம் சமயம் மீது மேற்கொண்ட மாபெரும் மத நிந்தனையாகும்.

எனினும் அவ்விடயத்தில் முஸ்லிம்கள் வெகுண்டெழுந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடாது பொறுமை காக்குமாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ் ஷெய்க் எம்.எம்.ஏ. முபாரக் தெரிவித்துள்ளார்.


15 ஆம் பக்கம் பார்க்க....

### ஜே.வி.பிக்கு அழைப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக ஆரம்பிக்கப்படவுள்ள புதிய அரசியல் அமைப்பில் இணைந்து கொள்ளுமாறு ராஜபக்ஷ தரப்பி

16 ஆம் பக்கம் பார்க்க....



இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடந்தது. இதன்போது ஜனாதிபதியும் புதிய ஆளுநரும் சுமுகமாக உரையாடியதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

### "100 ரூபாய்க்கு 4 சிகரெட் கொடு"
## கடை உரிமையாளர் மீது பொலிஸார் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

குறைந்த விலையில் சிகரெட் தருமாறு கோரி கடை உரிமையாளர் மீது பொலிஸாரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். பஸ் நிலையத்தின் பின்புறமாக உள்ள தேநீர் கடை ஒன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்.பொலிஸ் நிலையத்தினைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிதானம் தவறிய நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு குறித்த கடை

16 ஆம் பக்கம் பார்க்க....

### 21 ஆயிரம் பேருக்கு 6 மாதத்தில் டெங்கு

(கொழும்பு)

இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 21ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

11 மாவட்டங்களில் டெங்கு நோய் அதிகம் வியாபித்துள்ளதாக அந்த அமைச்சு கூறுகின்றது.

அதன்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை,

15 ஆம் பக்கம் பார்க்க....

### கிளிநொச்சி நகர அபிவிருத்திக்கு இராணுவ முகாம்களால் இடையூறு
#### சிறிதரன் எம்.பி சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திக்கு இராணுவ முகாம்களினால் இடையூறுகள் காணப்படுவதாக யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கிளிநொச்சி நகர அபிவிருத்தி திட்டம் தொடர்பில் ஆராயும் முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மாவட்டத்தின் வளம் பொருந்திய

16 ஆம் பக்கம் பார்க்க....

## நான் அனைவரது குரல்களுக்கும் செவி சாய்க்கின்ற ஒரு ஜனாதிபதி
### மக்களுக்கு மட்டுமே கட்டுப்படுகிறேன் - மைத்திரி

(கொழும்பு)

இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகள் நடந்துகொண்டதைப் போல் நடந்துகொள்ள தான் தயார் இல்லை என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தான் ஜனநாயகத்தையும் ஒற்றுமையையும் மதிக்கும் அனைவரதும் குரல்களுக்கு செவிசாய்க்கும் ஒரு ஜனாதிபதி எனக் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள ஜனாதிபதி, பிரதமருக்கும் கட்டுப்பட்டவரென முன்னாள் அமைச்சர் ஒருவர் கூறியதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, தான் இந்நாட்டின் பொதுமக்களுக்கு மாத்திரமே கட்டுப்படுவதாகத் தெரிவித்தார்.

அப்போதிருந்த ஏகாதிபத்திய ஆட்சி மக்களினால் நிராகரிக்கப்பட்டதன் காரணமாகவேதான் இந்

16 ஆம் பக்கம் பார்க்க....

தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு
வருகை தந்திருக்கும் T.M.S. சௌந்தரராஜனின்
புதல்வர் செல்வகுமாரையும்,
பின்னணிப் பாடகி விஜயலட்சுமியையும்
உங்கள் இடங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிக்கு
அழைக்க தொடர்பு கொள்ளவும்.

077 7030234

(C-5088)

மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

Dr.P.ஆறுமுகம்

T.P :- 0777 569 205

04.07.2016 முதல் 10.07.2016 வரை
7 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=



மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

(C-5077)

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

நாதன் இன்

(பழைய கமல் லொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் எலற்ரிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.

# 5 ஆயிரம் அபராதம்

(கரணவாய்)

நெல்லியடி நகர்ப் பகுதியில் சுகாதார எச்சரிக்கை குறியீடு பொறிக்கப்படாத சிகரெட்டுக்களை விற்பனை செய்த வியாபார உரிமையாளர் ஒருவரிற்கு 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்துள்ளார்.

நெல்லியடிப் பொலிஸார் மேற கொண்ட சோதனை நடவடிக்கையில்சுகாதார எச்சரிக்கை குறியீடுகள் பொறிக்கப்படாமல் இருந்த சிகரெட்டுக்கள்கைப் பெற்றப்பட்டதுடன் அதன் உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

அவரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தத்துறை நீதிமன்றில முற்படுத்திய போதே 5ஆயிரம் ரூபாய்அபராதம் விதிக்கப்பட்டது. (செ-60)

# ஆசிரியரை தாக்கிய இருவரை நீதிபதி கடுமையாக எச்சரிப்பு

## 10ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கவும் உத்தரவு

(கரணவாய்)

அல்வாய்ப் பகுதியில் ஆசிரியர் ஒருவரை கல்லால் எறிந்து காயப்படுத்திய இருவரே கடும எச்சரிக்கை செய்து விடுவித்ததுடன் பாதிக்கப்பட்டவருக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையப் பகுதியில் வசிக்கும் ஆசிரியர் ஒருவரை அப்பகுதியில் வசிக்கும் இருவர் கல்லால் எறிந்து காயப்படுத்தியதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் இவ் வழக்கை இணக்க சபைக்கு விட்டனர். ஆனால் சந்தேக நபர்கள் இணக்க சபையினை மதிக்காது செயற்பட்டமையினால் இவ் வழக்கு பருத்தித துறை நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டு கடந்த முதலாம் தகதி வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது கருத்துக் கூறிய நதிபதி இணக்க சபையினையும் ஒரு நீதிமன்றுக்கு சமன் அதன் செயற்பாடுகளை குழப்பியதன்காரணமாக உங்களை கடும் எச்ரிக்கை செய்வதுடன பாதிக்கப்பட்ட வருக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு உத்தரவிடுகிறேன் என தீர்ப்பளித்தார். (செ-60)

## சூட்கேஸ் திருட்டு

(கரணவாய்)

கரணவாய் மத்தியில் வசிக்கும் நபர் ஒருவர் தனது வீட்டில் இருந்த சூட்கேஸ் களவாடப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

மேற்படி பகுதியில் வசிக்கும் வேலுப்பிள்ளை சிவபாதசுந்தரம் என்பவரே இம் முறைப்பாட்டை கடந்த 30ஆம் தகதி வியாழக்கிழமை பதிவு செய்துள்ளார்.

சூட்கேசுக்குள் 4 பவுண் தாலிக்கொடியும் பெறுமதியான காணிஉறுதியும் இருந்ததாக அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகள் ஆரம்பித்துள்ளனர். (செ-60)

## குற்றப் பணத்துடன் சீர்திருத்தப் பணி

உடைமையில் அரைபோத்தல சாராயத்தினை வைத்திருந்த நபர் ஒருவரிற்கு 25 ஆயிரம் ரூபாய் குற்றப்பணமும் 50 மணித்தியாலம் சீர்திருத்தப் பணியும் செய்யுமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

நெல்லியடி மாலு சந்தி பகுதியில் விற்பனைக்காக உடைமையில் சாராயத்தினை வைத்திருந்த போது நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட அல்வாய் வடக்கை சேர்ந்த நபரை கடந்த முதலாம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போதே அவரிக்கு குற்றப் பணமும் சீர் திருத்தப் பணியும்செய்யுமாறு நீதிபதி உத் தரவிட்டார். (செ-60)

பழுது பார்த்தல்

அனைத்து விதமான தையல் மிசின்களும் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு :-

சூரி - 077 025 8694

காணி விற்பனைக்கு

நாயன்மார்கட்டு மூத்த விநாயகர் வீதியில் 2 பரப்பு 2 குளி காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :-

077 2238 522

ஜூலை 09,10 வவுனியா நகரில்......

Natural Hair Transplant & Hair Treatment

Proven Results

(Hair restoation )

(C-5084)

தனிப்பயனுடைய சிகிச்சை

வழுக்கை தலை, தலை முடி குறைவு அல்லது அடர்த்தியின்மை, இளநரை, கதிர்சிகிச்சை மற்றும் நோய் சம்பந்தப்பட்ட முடி உதிர்வு, நவீன சிகிச்சை மூலம் முடி வளர வைக்க சிறந்த முறை




ஆண்,பெண் அனைவருக்கும்
கண் புருவம் வளர்ச்சிக்கு நிரந்தரமான தீர்வு.

- ✓ பக்கவிளைவற்றது
- ✓ முடி பரிசோதனை
- ✓ பாதுகாப்பானது
- ✓ சிறந்த பலன்
- ✓ வலி இல்லை
- ✓ குறைந்த கட்டணம்


H CARE CLINIC

OPEN DAILY
No.252,SEASTREET, NEGOMBO.
Tel : 0771556305

e-mail: ozonhosy@yahoo.com
Fb.www.facebook.com/pages/
Hair-Transplant-Treatment-Hcare-clinic-in-srilanka

# மரண அறிவித்தல்

## லட்சுமி ஆறுமுகம்



பலாலி கிழக்கை பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி தெற்கு செல்லப்பிள்ளையார் கோவிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட லட்சுமி ஆறுமுகம் அவர்கள் கடந்த 01.07.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மீனாட்சி, தங்கம் மற்றும் தர்மலிங்கத்தின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு, முருகேசுவின் மைத்துனியும் திலகராணி, மனோன்மணி, குணரத்தினம், சறோஜினி, கமலாதேவி (ஆசிரியை - யா/வயாவிளான் ஸ்ரீவேலுப்பிள்ளை வித்தியாலயம் - உரும்பிராய்), கண்மணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச வைத்தியசாலை - கோப்பாய்) ஆகியோரின் பெரியம்மாவும், சர்வானந்தம், நகுலேந்திரன், சிவபாலசுப்பிரமணியம், சத்தியசீலன், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 03.07.2016 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் பழையவீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயிலுள்ள அவரது பெறாமகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல் :-
குடும்பத்தினர்

(C-5087)

# இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

**போக்குவரத்து நடவடிக்கைக்காக வாடகை அடிப்படையில் வான் வாகனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் (சாரதியுடன்)**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சேவையாற்றும் பொருட்டு, மாதாந்த வாடகை அடிப்படையில் பயணிகளையும் பொருட்களையும் ஏற்றிச்செல்வதற்காக இரட்டை வழிசீராக்கல் வசதிகளுடன் கூடிய 8-10 இருக்கைகளைக் கொண்ட வான் வாகனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முத்திரையிடப்பட்ட கேள்வி மனு இத்தால் கோரப்படுகின்றது.

மீளளிக்கப்படக்கூடிய ரூபா. 1000/- இனை வைப்பிலிட்டு மீளளிக்கப்படாத ரூபா. 500/- பணத்தைச் செலுத்தி 2016.07.15 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திற்கு வருகைதந்து கேள்விமனுப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். (021-2223374)

முத்திரையிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரம் இரண்டு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் கேள்வி மனுப்பத்திரம் அனுப்பப்படக்கூடிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "போக்குவரத்துச் சேவையினை வழங்குவதற்கான கூறுவிலை" என எழுதி முத்திரையிட்டு 2016.07.25 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு 'சிரேஷ்ட உதவி பதிவாளர், பொது நிர்வாகப் பிரிவு, இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்கு கேள்வி மனுப்பத்திரம் திறக்கப்படும்.

பதிவாளர்


இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்,
நாவல,
நுகேகொட.

(C-5085)

# இலங்கையில் தொடரும் சூழ்ச்சி நடவடிக்கைகள்

## ராஜிதவை விசாரணை செய்யுமாறு பிரதமர் பணிப்பு

(கொழும்பு)



**சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உடனடி விசாரணை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.**

உடன் அமுலுக்கு வரும் வகையில் ராஜித சேனாரட்ன, அவரின் தனிப்பட்ட செயலாளர் மற்றும் ராஜிதவின் மனைவி மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரதமர் ரணிலின் ஆலோசனைக்கமைய அமைச்சர் சாகல ரத்நாயக்க, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிற்கு உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அர்ஜுன் மகேந்திரனை நீக்குவதற்காக ஐக்கிய தேசிய கட்சியின் சூழ்ச்சி குழுவான சஜித் தரப்புடன் இணைந்து ராஜித செயற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் ரணில் தரப்பினர் சாட்சிகளுடன் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சியில் கடந்த தேர்தலுக்காக போட்டியிட்ட வேறு கட்சி பிரதிநிதிகள், ரணில் விக்கிரமசிங்க எதிர்ப்பு சஜித் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்கள் மற்றும் தற்போது வரையில் ஜனாதிபதி செயலகத்தில் உயர் பதவியில் செயற்படுகின்றவர்களுடன் இணைந்து மாற்றுக் குழுவாக செயற்படத் தீர்மானித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகி வேறு அரசியல் குழுவாக பாராளுமன்றத்தில் செயற்படுவதற்காக கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட வோட்டர்ஸ் எட்ஜ் டீமின் சூழ்ச்சி வேலைத் திட்டத்தில் ராஜிதவை பிரதிநிதித்துவப்படுத்தி அவரது மகன் சதுர சேனாரத்ன கலந்து கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

அதற்கமைய வெகு விரைவில் ராஜித உட்பட குழுவினருக்கு எதிராக நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நிதி மோசடி விசாரணை பிரிவு பிரதானிகளை நேற்று அலரி மாளிகைக்கு அழைத்து ஆலோசனை வழங்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-10)

## தாயகம் திரும்பும் தமிழர்கள் ராணுவக் கண்காணிப்பிற்குள்

### அனந்தி ஐ.நாவில் சுட்டிக்காட்டு



வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் நாடு திரும்பும் பொழுது இலங்கை இராணுவமும் அதன் புலனாய்வு பிரிவும் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார். மேலும் இறுதி யுத்தத்தில் உயிர் பிழைத்த தான் இன்னும் தனது கணவனை தேடிக்கொண்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 32 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இறுதி யுத்தத்தின் போது எனது கணவர் உட்பட ஆயிரக்கணக்கானவர்களை இராணுவத்தினர் பேருந்தில் ஏற்றிச்சென்றனர். அவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை. அன்று முதல் இன்று வரையில் எனது கணவரை தேடிக்கொண்டு இருக்கின்றேன். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இது வரையில் ஒரு அரசியல் கைதியினை மாத்திரம் விடுதலை செய்துள்ளார். அத்துடன், யுத்தத்தின் போதும், அதற்கு பின்னரும் காணமற் போனவர்கள் குறித்து அவரால் எதுவும் கூற முடியவில்லை.

இவ்வாறான நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பெண்கள் காணாமற் போன தமது கணவன்மார்களை இன்றளவிலும் தேடிக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், முறையான சர்வதேச குற்றவியல் விசாரணையின்றி இலங்கையின் இனப் படுகொலை விவகாரத்தை மாற்றியமைக்க முடியாது. மேலும் சர்வதேச விசாரணையினை தாமதப்படுத்துவதானது, நீதியை மறுப்பதற்கு ஒப்பான ஒன்றாகவே பார்க்க வேண்டியுள்ளது. இதனிடையே, வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள மக்கள் சர்வதேச விசாரணை ஒன்றையே எதிர்ப்பார்த்திருந்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் தனது வாய்மூல அறிக்கையில் இலங்கை அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளை எடுத்து கூறியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் புலம்பெயர்ந்த இளைஞர், யுவதிகள் மீளவும் நாடு திரும்பும்நிலையில், அவர்கள் இராணுவத்தினரால் கண்காணிக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

## பத்தாயிரம் பசுமைக் கிராமங்களை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பம்

### ஜனாதிபதி மைத்திரி பங்கேற்பு

"நீல ஹரித லஸ்ஸன லங்கா" (நீலப் பசுமை அழகிய இலங்கை) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எதிர்வரும் நான்கு வருடங்களில் சூழல் நட்புடைய பத்தாயிரம் பசுமைக் கிராமங்களை நாடு பூராகவும் அமைக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல்கேகாலை பரகம்மன சணச கல்விச் சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

2015 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் பரிஸ் நகரத்தில் நடைபெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் பூகோள வெப்பமாதல் அதிகரிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உலக நாடுகளின் தலைவர்கள் உடன்பட்டிருந்தனர்.

அந்த உடன்படிக்கைக்கேற்ப இலங்கையின் பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்களில் சூழல் நட்புடைய பத்தாயிரம் பசுமைக் கிராமங்களை அமைக்கும் கருத்திட்டம் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி இன்று உலகிலுள்ள எல்லா அரச தலைவர்களுடைய, ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட எல்லா நிறுவனங்களுடைய முக்கிய கவனம் இயற்கை வளங்களைப் பாதுகாத்து பேணுவது தொடர்பாகவே உள்ளதாகத் தெரிவித்தார்.

சூழல் அழிவுறும் அபாயத்திலிருந்து எதிர்காலத் தலைமுறையை மீட்கும்வகையில் பத்தாயிரம் பசுமைக்கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு எல்லோரும் செயற்றிறனான பங்களிப்பை வழங்குவது தேசத்தின் எதிர்காலத்திற்கான பொறுப்பை நிறைவேற்றுவதாக அமையும்என ஜனாதிபதி குறிப்பிட்டார். (இ-10)

### வற்வரி பிரச்சினைக்கு 4ஆம் திகதியுடன் தீர்வு

பெறுமதிசேர் (வற்) வரி தொடர்பான பிரச்சினை எதிர்வரும் 4ஆம் திகதியுடன் முடிந்து விடும் என பல்கலைக்கழக கல்விமற்றும்பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். இது சம்பந்தமான பேச்சுவார்த்தை ஒன்று அன்றைய தினம் நிதியமைச்சில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## 10 ஆயிரம் இராணுவத்தினர் சட்டபூர்வமாக விலகியுள்ளனர்

இலங்கை இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களில் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கடந்த மாதம் அறிவிக்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தில் தாமாக முன்வந்து இராணுவத்தில் இருந்து சட்டரீதியாக விலகியுள்ளனர்.

முப்படைகளில் இருந்தும் தப்பியோடியவர்கள் சட்ட ரீதியாக விலகிக் கொள்வதற்கான பொதுமன்னிப்புக் காலத்தை இலங்கை பாதுகாப்பு அமைச்சு கடந்த மாதம் அறிவித்திருந்தது.

கடந்த ஜூன் 12ஆம் நாள் ஆரம்பமாகிய இந்த பொது மன்னிப்புக் காலம், இம்மாதம் 12 ஆம் நாள் வரை நீடிக்கும் என்று இலங்கை இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பொதுமன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி இலங்கை இராணுவத்தில் இருந்து முறைப்படி விடுமுறை பெறாமல் தப்பியோடிய 10,417 பேர் நேற்று முன்தினம் வரை தமது படைப்பிரிவுகளில் முன்னிலையாகி சட்டரீதியாக இராணுவத்தில் இருந்து விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மேலும் சுமார் 15 ஆயிரம் வரையான தப்பியோடிய படையினர் மறைந்து வாழ்வதாக இலங்கை இராணுவத் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## வேறு கட்சிகள் பற்றிப் பேசித்திரிபவர்கள் தராதரமின்றி கட்சியிலிருந்து நீக்கப்படுவர்

### ஐ.ம.சு.முன்னணி பொதுச் செயலர் எச்சரிக்கை

(கொழும்பு)

வேறு அரசியல் சக்திகள் மற்றும் அரசியல் கட்சி என்பன தொடர்பில் கருத்துத் தெரிவித்து கட்சிக்குள் பேதங்களை உருவாக்குபவர்களை தராதரம் பாராமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றி விடுவதற்கு கடந்த 30 ஆம் திகதி கூடிய கட்சியின் உயர் பீட கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். எதிர்வரும் தேர்தலில் கட்சியின் வெற்றியில்லாமல் வேறு வகையில் சிந்திக்கும் செயற்படும் நபர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவர் எனவும் அவர் மேலும் எச்சரித்தார். (இ-10)

# ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கிய பெரேராவுக்கு இழப்பீடு வழங்க ஐ.சி.சி முடிவு

ஊக்கமருந்து விவாகரத்தில் சிக்கி அதில் இருந்து மீண்ட குசால் பெரேராவிற்கு இழப்பீடு வழங்க ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது.

ஊக்கமருந்து உட்கொண்டதாக குசால் பெரேராவுக்கு ஐ.சி.சி. தடை விதித்தது. இதை எதிர்த்து அவர் அப்பீல் செய்தார்.

அப்போது ஊக்கமருந்து உட்கொள்ளவில்லை எனத் தெரியவந்தது.

இதனால் அவருக்கு இழப்பீடு வழங்க ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது. இலங்கை கிரிக்கெட் அணியின் விக்கெட்காப்பாளரும், முன்னணி துடுப்பாட்டவீரரு மான குசால் பெரேரா ஊக்க மருந்து விவகாரத்தில் சிக்கி தடை பெற்றிருந்தார்.

கடந்த டிசம்பர் மாதம் இலங்கை அணி நியூசிலாந்து சென்றிருக்கும் போது, குசால் பெரேரா ஊக்கமருந்து பயன்படுத்தியதாக ஐ.சி.சி. அவருக்கு தடை விதித்தது.

இந்த முடிவை எதிர்த்து பெரேரா முறையீடு செய்தார். இதை விசாரித்த ஐ.சி.சி. குழு அவர் மீதான தடையை நீக்கியது.

இதனால் கடந்த மே மாதம் 11 ஆம் திகதி முதல் சர்வதேச போட்டியில் விளையாட அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

எந்த தவறும் செய்யாமல் சுமார் ஐந்து மாதங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளதால் பெரேரா பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளார்.

அவர் மீது தவறான முடிவு எடுக்கப்பட்டதற்காக உலக ஊக்கமருந்து தடுப்பு ஏஜென்ஸி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் சபை ஐ.சி.சியை வலியுறுத்தியது.




இந்நிலையில் தற்போது எடின்பர்க்கில் ஐ.சி.சியின் ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அப்போது குசால் பெரேரா விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் பெரேராவிற்கு நஷ்டஈடு வழங்க ஒருமித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. குசால் பெரேரா இந்த வழக்கு தொடர்பாக சுமார் 5 லட்சம் பவுண்டுகள் செல வழிக்க நேரிட்டிருக்கும்.

இந்த பணம் நஷ்டஈடாக வழங்கப்பட இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக, உலக ஊக்க மருந்து தடுப்பு ஏஜென்சியின் அங்கீகாரம் பெற்ற கட்டார் ஆய்வகம் தற்போது சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளது. (க)

# உலக சாதனை படைத்தார் ஆஸி நீச்சல் வீராங்கனை




அவுஸ்திரேலியாவின் நச்சல் வீராங்கனையான கேத கேம்ப்பெல் 0.01 வினாடி வித்தியாசத்தில் உலக சாதனைப படைத்துள்ளார்.

அவுஸ்திரேலியா கிராண்ட் பிரிக்ஸ் நீச்சல் போட்டியின் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது.

இதன் 100 மீட்டர் பிரீஸ்டைல் பிரிவில் அவுஸ்திரேலியா வீராங்கனை கேத் கேம்ப்பெல் பந்தய தூரத்தை 52.06 வினாடிகளில் கடந்தார். இதன் மூலம் உலக சாதனைப்படைத்துள்ளார்.

இதற்கு முன் 2009-ம் ஆண்டு ரோம் நகரில் நடைபெற்ற பிணா உலக சாம்பியன்ஷிப் போட்டியில் ஜெர்மனி வீராங்கனை பிரிட்டா ஸ்டீபன் பந்தய தூரத்தை 52.07 வினாடிகளில் கடந்தார்.

இதுதான் இதுவரை உலக சாதனையாக இருந்தது. தற்போது கேம்ப்பெல் 52.06 வினாடிகளில் கடந்து 7 வருட சாதனையை முறியடித்துள்ளார்.

இருவர்களுக்கிடையில் இருக்கும் வித்தியாசம் 0.01 வினாடிதான் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# விம்பிள்டன் டென்னிஸ் போட்டி வாவ்ரிங்கா அதிர்ச்சி தோல்வி



விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில், முன்னணி வீரர் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரிங்கா (சுவிஸ், 4ஆவது ரேங்க்) அதிர்ச்சி தோல்வியடைந்தார்.


இரண்டாவது சுற்றில் அர்ஜென்டினா வீரர் ஜுவன் மார்டின் டெல் போட்ரோவுடன் நேற்று முன்தினம் மோதிய வாவ்ரிங்கா 6-3 என்றகணக்கில்முதல்செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார.

அடுத்த செட்டில் அதிரடியாக விளையாடிய டெல் போட்ரோ 6-3 என வென்று பதிலடி கொடுத்தார்.

கடும்இழுபறியாக அமைந்த 3ஆவது செட்டில் 7-6 (7-2) என டை பிரேக்கரில் வென்ற டெல்போட்ரோ 3-6, 6-3, 7-6 (7-2), 6-3 என 4 செட்களில் போராடி வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். ஏடிபி ஒற்றையர் பிரிவு உலக தர வரிசையில் 4வது இடத்தில் இருந்த அவர் தற்போது 165 ஆவது இடத்தில் பின்தங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்போது 4ஆவது இடத்தில் உள்ள வாவ்ரிங்கா 2ஆவது சுற்றிலேயே மண்ணைக் கௌவி ஏமாற்றத்துடன் வெளியேறினார். (க)

# ஒலிம்பிக் தகுதிகாண் போட்டியிலிருந்து ஜமைக்காவின் போல்ட் விலகல்




100 மீற்றர் அரையிறுதிப் போட்டிகளைத் தொடர்ந்து, ஜமைக்கா தேசிய ஒலிம்பிக் தகுதிகாண் போட்டிகளிலிருந்து, பின் தொடைத் தசைநார் கிழிவு காரணமாக உசைன் போல்ட் விலகியுள்ளார்.

கிங்ஸ்டனிலுள்ள தேசிய அரங்கில் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில், மெதுவான ஆரம்பத்தைப் பெற்றிருந்தாலும் 10.04 செக்கன்களில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து போல்ட் வென்றிருந்தார்.

முதல் சுற்று முடிவிலும் அரையிறுதிப் போட்டியிலும் பின் தொடைத் தசைநார் காயத்தை உணர்ந்ததாகவும், தேசிய சம்பியன்ஷிப் தலைமை மருத்துவரால் சோதிக்கப்பட்டதாகவும், தரம் ஒன்று வகையான காயத்தை கொண்டிருப்பதாகவும் டுவீட் பதிவொன்றில் போல்ட் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான காயத்திலிருந்து மீள்வதற்கு சில நாட்களிலிருந்து ஒரு வாரம் வரை செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.

தகுதிகாண் போட்டிகளை தவறவிட்டமையால், 100 மீற்றர், 200 மீற்றர், 4X100 மற்றரில் தொடர்ச்சியாக மூனறாவது முறையாக தங்கம் பெறும் கனவு நிறைவுக்கு வராது.

ஏனெனில், தகுதிகாண் போட்டிகளில், காயம் காரணமாக வாய்ப்பு தவறினால், மருத்துவ விதிவிலக்குகளை ஜமைக்கா தடகள அமைப்பு வழங்குகின்றது.

எவ்வாறெனினும் இலண்டனில், இன்னும் மூன்று வாரங்களில் ஆரம்பமாகவுள்ள டயமண்ட் லீக் போட்டிகளில் பங்குபற்ற திட்டமிட்டுள்ள போல்ட், தனது உடறற குதியை நிரூபிக்க வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஐ.சி.சி.கிரிக்கெட் கமிட்டி ரவி சாஸ்திரி ராஜினாமா

ஐ.சி.சி கிரிக்கெட் கமிட்டியின் செய்தித் தொடர்பாளர் பதவியில் இருந்து விலகுவதாக ரவி சாஸ்திரி அறிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் உயர் செயல்பாட்டு இயக்குநராக இருந்த முன்னாள் அணித்தலைவர் ரவி சாஸ் திரி, தலைமை பயிற்சியாளர் பதவி க்கு விண்ணப்பித்திருந்தார்.


மொத்தம் 57 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் சச்சின், லஷ்மண், கங்குலி ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவினர் நேர்காணல் நடத்தி, முன்னாள் சுழற்பந்து நட்சத்திரம் அனில் கும்ப்ளேயை புதிய தலைமை பயிற்சியாளராக தேர்வு செய்தனர். நேர்காணல் நடந்த போது அதில் பங்கேற்காமல் புறக்கணித்து கங்குலி தன்னை அவமதித்து விட்டதாக ரவி சாஸ்திரி குற்றம் சாட்டியிருந்தார். அதற்கு பதிலடி கொடுத்த கங்குலி, முக்கியமான நேர்காணல் நடந்தபோது சாஸ்திரி கொல்கத்தாவுக்கு நேரில வராமல் பாங்காக்கில் இருந்துடிஸ்கைப்மூலமாக ஆன்லைனில் பங்கேற்றது சரியா என்று கேள்வி எழுப்பி இருந்தார்.

பயிற்சியாளர் பதவி தொடர்பாக முன்னாள் அணித் தலைவர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டுள்ள பரபரப்பான சூழலில், அனில் கும்ளே தலைமையிலான ஐ.சி.சி கிரிக்கெட் கமிட்டியின் ஊடக பிரதிநிதி பதவியை ராஜினாமா செய்வதாக சாஸ்திரி நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

அவர் கடந்த 6 ஆண்டுகளாக இந்த பதவியில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. சொந்த காரணங்களுக்காக பதவி விலகுவதாக சாஸ்திரி தெரிவித்திருந்தாலும், கங்குலியுடன் ஏற்பட்ட மோதலை அடுத்தே அவர் இந்த முடிவை எடுத்திருப்பதாக தெரிகிறது. (க)


# மரண அறிவித்தல்

## தம்பு நாகராசா



லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் அதிசயவிநாயகர் வீதி விசுவமடு மேற்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பு நாகராசா 02.07.2016 நேற்று காலமானார்.

அன்னார் தம்பு - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், முத்தையா - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நற்குணராசா, அருள்ராசா, பூலோகராசா (விஸ்வமடு G.V.S College விஞ்ஞானக் கல்வி நிலைய ஆசிரியர் விஸ்வமடு சாளினி புத்தகசாலை உரிமையாளர்), அருங்கலைச்செல்வி, காலஞ்சென்ற கேதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.07.2016 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக 12 ஆம் கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.191/1, விஸ்வமடு மேற்கு, விஸ்வமடு.

தகவல் :- குடும்பத்தினர்

(C-5089)

# நீங்காத நினைவலைகளில் ஏழு ஆண்டுகள்...



**மலர்வு**
**18.07.1930**

**உதிர்வு**
**22.06.2009**

## அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

(Retired MSO Jaffna Post Office)

**திதி:- சதுர்த்தசி 03.07.2016**

நினைவுகளுடன் நீள்கின்ற நாட்களுக்குள் நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து பல்லாண்டு
சென்றிடினும் ஆறவில்லை எம் துயர்
**என்றும் உங்கள் நினைவுடன்**
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின்
வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது
வாழ்வினையும் பிரகாசிக்கச் செய்த
அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது
ஆத்ம சாந்திக்காக 03.07.2016 இன்று ஞாயிற்றுக்கிழமை
தெல்லிப்பழை துர்க்கை அம்மன்
ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள்
இடம்பெற்று தெல்லிப்பழை
மகளிர் இல்லம், கோண்டாவில் சிவபூமி
சிறுவர் இல்லம், சுழிபுரம் முதியோர்
இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள
சிறுவர்கள் முதியோர்களுக்கும்
கீரிமலை அன்னதான மடத்திலும்
உணவு உபசாரமும் 08.07.2016
வெள்ளிக்கிழமை அன்று நல்லூர்
துர்க்கா தேவி மணி மண்டபத்திலும்
அன்னதான நிகழ்வுகள்
இடம்பெறவுள்ளன.

**தகவல்:-குடும்பத்தினர் சார்பாக**
**மகன்- நாகராஜா விஜயகுமார் -சுவிஸ்.**

(5099)





யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபராக அண்மையில் நியமிக்கப்பட்ட சஞ்சீவ தர்மரத்தின நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது வறுமைக் கோட்டிற்குட்பட்ட இரண்டு குடும்பப் பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.
(படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

# தனியார் பேருந்து வேலைநிறுத்தம் வடக்கு மாகாணத்தில் இடம்பெறாது

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**நாடளாவிய ரீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் இடம் பெறவுள்ள தனியார் பேருந்து வேலை நிறுத்தம் வடக்கு மாகாணத்தில் இடம் பெறமாட்டாது என வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.சிவபரன் தெரிவித்துள்ளார்.**

வழமை போன்று இன்றைய தினமும் சேவைகள் இடம்பெறும் எனவும் அவர் கூறியுள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வாவுடன் கொழும்பில் நேற்று முன்தினம்இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியளிக்காததால்இன்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல்நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தனியார் பேருந்து சங்கங்கள் நேற்று முன்தினம் அறிவித்திருந்தன.

இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இலங்கை தனியார் பேருந்து சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரயஞ்சித், கலந்துரையாடல் வெற்றியளிக்காமையினால் நாடளாவிய ரீதியில் இன்று நள்ளிரவு முதல்வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில் குறித்த வேலை நிறுத்தம் தொடர்பில் வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவரிடம் கேட்ட போது,

குறித்த வேலை நிறுத் தம் தொடர்பில் இலங்கை தனியார் பேருந்து சங்கத்திடமிருந்து எந்தவிதமான உத்தியோகபூர்வ அறிவித்தலும் எமக்கு கிடைக்கவில்லை.

மேலும் வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் சில கோரிக்கைகளை வைத்து வடக்கு தழுவிய ரீதியில், பணிப் புறக் கணிப்பு ஒன்றினை அண்மையில்தான மேற்கொண்டிருந்தது.

இதனால் பல்லாயிரக்கணக்கான பயணிகள பெரும் அவதிகளை, கஷ்டங்களை எதிர்நோக்கி யிருந்தனர்.

இந்நிலையில் குறுகிய காலப்பகுதிக்குள் மீண்டும் ஒரு பணிப்புறக்கணிப்பை எம்மால் மேற்கொள்ள முடியாது. ஆகையால் நாடளாவிய ரீதியில் இடம்பெறும் பணிப்புறக்கணிப்பு வடக்கில் இடம்பெறமாட்டாது.

வழமை போன்று சேவைகள் இடம்பெறும் என வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (2-4)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த்தடுப்பூசி

யாழ்ப்பாணம்மாநகரசபை எல்லைக்குள் அமைந்த குருநகர் 1 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி (A.R.V) கீழ் வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் வளர்ப்பு நாய்களுக்கான உரிமக்கட்டணமாக ரூபா 30 செலுத்தப்பட வேண்டும்.

04.07.2016 மு.ப 09.00-மு.ப 11.00 வரை சென்றோக் சனசமூக நிலையம் முன்பாக, மு.ப 11 - பி.ப ஒருமணி வரை றெக்கிளமேசன் சனசமூக நிலையம், பி.ப 2.30-பி.ப 4 வரை புதிய கடற் கரை- தண்ணீர்த் தாங்கிச் சந்தி, 05.07.2016 மு.ப 9-மு.ப 11 மணி வரை தண்ணீர்த்தாங்கி முதலாம் குறுக்குத் தெரு, மு.ப 11 -பி.ப ஒரு வரை தண்ணீர்த் தாங்கி 3ஆம் குறுக் குத் தெரு, பி.ப 2.30-பி.ப 4 வரை தண்ணீர்த் தாங்கி 4 ஆம், 5 ஆம் குறுக்குத் தெரு,

07. 04. 2016 மு.ப 9-மு.ப 11 மணி வரை சென் ஜேம்ஸ்ஆண்கள் பாடசாலை முன்பாக ,மு.ப 11.00-பி.ப 1.00 வரை தண்ணீர்த் தாங்கி 4ஆம் ,5 ஆம் குறுக் குத் தெருக்கள் பி.ப 2.30-பி.ப 4.00 வரை சிப்பித் தரை வீதி,08.07.2016 மு.ப 09.00-மு.ப 11.00 3ஆம் குறுக்குத் தெரு குருநகர், மு.ப11 -பி.ப ஒரு மணி வரை 2ஆம் குறுக்குத்தெரு குருநகர், பி.ப 2.30-பி.ப 4.00 வரை ஜஸ்பிளான்ட் வீதி

12.07.2016 மு.ப 9-மு.ப 11 மணி வரை குருநகர் சனசமூக நிலையம் முன்பாக, மு.ப 11 -பி.ப ஒரு வரை கடற் கரை வீதி 4 ஆம் குறுக்குத் தெருச் சந்தி , பி.ப 2.30-பி.ப 4மணி வரை பாங்சால் வீதி 3ஆம் குறுக்குத் தெருச் சந்தி

13.07.2016 மு.ப 09-மு.ப11மணி வரை யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமை , மு.ப 11 -பி.ப ஒரு மணி வரை புதுமை மாதா ஆலயத்திற்கு முன்பாக , பி.ப 2.30-பி.ப 4.00 ஓடக்கரை வீதி,

14.07.2016 மு.ப 9-மு.ப 11 மணி வரை கொண்டடி வீதிச் சந்தி

மு.ப 11.00-பி.ப 1.00 அடப்பன் வீதி சந்தி பி.ப 2.30-பி.ப 4மணி வரை யூபிலி மகப்பேற்று நிலையம் முன்பாக

15.07.2016 மு.ப 09 - மு.ப 11மணி வரை குருநகர் சின்ன ஆஸ்பத்திரி முன்பாக

மு.ப11 -பி.ப ஒரு மணி வரை செபஸ்ரியார் கோவில் அருகாமை பி.ப 2.30-பி.ப 4 மணி வரை மவுண் கார் மல் வீதிஎன யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதி காரி அறிவித்துள்ளார். (இ)

# யாழில் காணிகள் விடுவிப்பு முல்லையில் காணிகள் அபகரிப்பு

## மனித உரிமை அமைப்பின் பிரதிநிதி சுட்டிக்காட்டு

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் காணிகளை விடுவித்துக்கொண்டி ருக்கும் அரசாங்கம் முல்லைத்தீவு மாவட்டத்தில் வேகமாக காணிகளை அபகரித்துவருவதாக வடக்கு மாகாண மனித உரிமை அமைப்பின் பிரதிநிதி டி.பாலமுரளி குற்றம்சாட்டியுள்ளார். யாழில் காணி விடுவிப்பு என்பது சர்வதேச நெருக்கடி களில் இருந்து தப்பித்து கொள்ளவே எனவும் அவர் சாடியுள்ளார்.

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் நடைபெற்ற உப குழுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில், வடக்கில் இராணுவத்தின் ஆதிக்கம் அதிகரித்துச் செல்கின்றது. புதிய அரசாங்கம் பதவியேற்று 18 மாதங்கள் கடந்து விட்ட போதிலும் அங்கு நல்லாட்சி நிலவவில்லை. அத்துடன் சிவில் நடவடிக்கை களில் இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகரித்தே செலகின்றது எனவும் தெரிவித்தார்.

வடக்கில் இராணுவத்தினர் விடுதிகளை நடத்தி வருகின்றனர். பாலர் பாடசாலைகளை பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களே நடத்தி வருகின்றனர். கண்டி வீதியில் குறிப்பட்ட இடைவெளி களில் இராணுவத்தினர் தமது உணவு விடுதிகளை நடத்தி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் காணிகள் வடுவிக்கப்பட்டாலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வேகமாக காணிகள் அபகரிக்கப்பட்டு வருவதாகவும். போர்க்குற்ற விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என பல நாடுகள் தெரிவித்து வருகின்றபோதும் இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படமாட்டார்கள் என தெரிவித்து வருகின்றனர். அவர் யாழில் காணிகள் விடுவிக்கும் அளவிற்கு மேலதிகமாக முல்லைத்தீவில் காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டும் வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (2-4)


# சித்த ஆயுர்வேத வைத்தியம்

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு ஞாபகசக்தியை உண்டாக்கவும் இளநரை,முடிகொட்டுதல்,பொடுகு ஆகியவற்றை நீக்கி நீண்ட கூந்தலும் கூர்மையான கண்பார்வையும் பெற நேத்திர சிந்தாமணித் தைலமும் ஆண்,பெண் பாலியல் பலவீனத்தை நீக்கி நீண்டநேர இல்லற இன்பத்தை அனுபவிக்க இராஜவஜீகரண லேகியமும் பெண்களுக்கு கர்ப்பப்பையில் உள்ள அழுக்குகளை அகற்றி குழந்தைச் செல்வத்தைப் பெறவும் சித்தர்கள் முறையில் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும். நீண்டகால நோய்கள் எதுவானாலும் சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்.

Dr.த.கிருஷ்ணபகவான்(RIMP NO-10329)
கிருஷ்ணாசித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இல-11,3ம் குறுக்குத்தெரு,
கண்டிறோட்,
வவுனியா
தொ.பே.-0779723369
(5106)


# மூன்று பிரிவுகளாக புதிய யோகா பயிற்சிநெறிகள்

யாழ்.யோகா உலகம் அமைப்பினர் நல்லூர்த் தேரடி அருகே அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் யோகா புதிய பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளனர். இதற்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மருத்துவர் பி.சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் யோகா பயிற்சிகள் காலை 6 மணி தொடக்கம் காலை 7 மணி வரையும் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரையும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணி வரையும் மூன்று பிரிவுகளாக இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.


இந் நிகழ்வில் யாழ்.மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திருமதி.சாவித்திரி ரவிச்சந்திரன் ஆரோக்கியத்திற்கான யோகா எனும் தொனிப்பொருளிலும் யோகாஉலகம்அமைப்பின்இயக்குநர்ஸ்உமாசுதன் யோகாவின் தனித்துவம் எனும் விடயம் பற்றியும் கருத்துரைகளை வழங்குவார்கள்.

பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் அறிமுக நிகழ்வில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்றும் யாழ். யோகஉலகம் அமைப்பினர் அறிவித்துள்ளனர். (2)


# மகாதேவ ஆச்சிரமம் MAHADEVA ASHRAMAM

மகாதேவாய நம

Regd. No: SVP 104/44 of 29.10.1976



## தவத்திரு.ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் 26 ஆவது குருபூசை

அன்புடையீர்!

மகா தேவா ஆச்சிரமத்தின் முதலாவது குருபீடாதிபதி தவத்திரு ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் 26 ஆவது குருபூசை நிகழ்வுகள், மகாதேவ ஆச்சிரம குருபீடாதிபதி தவத்திரு ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் தலைமையில்நடைபெற திருவருள் கை கூடியுள்ளது.

காலம்:- 07.07.2016 வியாழக்கிழமை
நேரம்:-முற்பகல் 10 மணி
இடம்:- மகாதேவ ஆச்சிரம பிரார்த்தனை மண்டபம்

இந் நிகழ்வில் சகல அங்கத்தவர்களையும் சிவனடியார்களையும் பங்குபற்றி குருவருளையும் திருவருளையும் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குருவே பரப்பிரம்மம்

அறங்காவலர்-நிர்வாக சபை
உறுப்பினர்கள்.
(024 324 3443)

(5105)

# மக்கள் வங்கியின் இரத்ததான முகாம்

மக்கள் வங்கியின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வொன்று மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 2 மணி வரை நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வை யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.(இ

## ஏல விற்பனை

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் பாவித்த வாகன உபகரணங்கள் 2016.07.20 புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளது. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலயக்கல்விப் பணிப்பாளர்
யாழ்.கல்வி வலயம்.

(அ/5079)

# நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு போதியளவு தமிழ்ப் பொலிஸார்

## இன்னும் 3 மாதங்களில் நியமிக்கப்படுவார்கள்

நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு போதியளவு தமிழ் பொலிஸார் இன்னும் மூன்று மாதங்களுக்குள் நியமிக்கப்படுவர் என யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்தின தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வடமராட்சிக்கு வருகை தந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு சென்றிருந்தார். அங்கு சிவில் சமூகத்தவர்களின் வேண்டுகோளினை ஏற்றே மேற்படி வாக்குறுதி வழங்கினார்.

சிவில் சமூக பிரதிநிதிகள் தமிழ்ப் பொலிஸார் பற்றாக்குறையினை தெரிவித்தனர். இதற்கு பதிலளித்த அவர் மூன்று மாதங்களில் தேவையான தமிழ்ப் பொலிஸாரை நியமிப்பதாகவும் உடனடியாக இரண்டு தமிழ்ப் பொலிஸாரை நியமிப்பதாகவும் கூறினார்.

மேலும் இங்குள்ள சிறைக்கூடத்தில் போதிய இடவசதி இல்லை எனக் கூறப்பட்டபோது அதனை போதிய இடவசதியுடன் காணக்கூடியதாக அமைக்குமாறும் கூறினார். மேலும் முறைப்பாட்டு பிரிவும் திருத்தியமைக்கப்படும் எனக் கூறினார்.

நெல்லியடி பொலிஸ் நிலையம் தனியார் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜீ
076 725 6024
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்.
(5052)

## பழைய பாரவூர்திகள், மூன்று சில்லு பெட்டி மோட்டார் சைக்கிள் ,பழைய இயந்திரங்கள் விற்பனை செய்வதற்கான மூடிய கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்கு சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் பழைய பாரவூர்திகள், நல்லநிலையிலுள்ள மூன்று சில்லு பெட்டி மோட்டார் சைக்கிள், பழைய இயந்திரங்கள் மூடிய கூறுவிலைக்கோரல் மூலமாக விற்பனை செய்யவுள்ளோம். இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் மூடிய கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| வாகன விபரம் | | ஆகக்குறைந்த கேள்விப் பெறுமதி |
|---|---|---|
| 68-7206 லங்கா அசோக்லேடன் | ரூபா | 150,000.00 |
| 47-7905 லங்கா அசோக்லேடன் | ரூபா | 130,000.00 |
| 42-9325 லங்கா அசோக்லேடன் | ரூபா | 130,000.00 |

QY- 2732 மூன்று சில்லு (அபான்ஸ்)பெட்டி மோட்டார் சைக்கிள் (நல்ல நிலையில் உள்ளது)

**பழைய இயந்திரங்கள் விபரம்:-**
பயன்படுத்தப்பட்ட அரிசி ஆலை இயந்திரங்கள், தேங்காய் எண்ணெய் இயந்திரம், கொங்கிறீற் கலவை இயந்திரம்(இஞ்சின் இல்லை),நெல் சுத்திகரிப்பு இயந்திரம் (இஞ்சின் இல்லை) ஆகியன உள்ளன. இவற்றின் ஆகக்குறைந்த கேள்விப் பெறுமதிகள் சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**நிபந்தனைகள்.**

01) சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று வாகனங்களுக்கான மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா500.00 செலுத்துவதுடன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கடித உறையிலிட்டு சீல் செய்து 15.07.2016 ஆம் திகதி பி.ப.5.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர் ,கரைச்சி தெற்கு ப.நோ. கூ. சங்கம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.
02)கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மூடிய கூறுவிலை விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
03)கேள்விகளை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு .
04)கேள்விச் சபையினால் தெரிவு செய்யப்படும் கேள்வியாளர்கள் பாரவூர்தி மற்றும் இயந்திரங்களை மூன்று வேலை நாட்களுக்குள் முழுமையாக பணத்தினைச் செலுத்தி வெளியேற்றுதல் வேண்டும்.
05)மேற்படி பாரவூர்திகளை அல்லது இயந்திரங்களை பார்வையிட விரும்புவோர் வேலை நாட்களில் (திங்கள்-வெள்ளி வரை) மு.ப.09.00 மணி தொடக்கம் பி.ப. 04.00 மணி வரை சங்கத் தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

டிப்போ வீதி,கனகபுரம்,
கிளிநொச்சி,
01.07.2016.

தொலைபேசி இல:-
021 228 5752

பொது முகாமையாளர்
கரைச்சி தெற்கு ப.நோ. சங்கம்,
கிளிநொச்சி.

(அ/5081)

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி-1
கி.பா:62
உயரம்: 5’7 1/2"
தகைமை/தொழில்:Bsc/கணக்காளர
UK NOT PR
தொ.இ: B/6015

பிறப்பு: 1980 இந்து
நட்ச்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 29.5 செவ் 1 இல்
உயரம்: 6’
தகைமை/தொழில் :A/L/பொறியியலாளர் கனடா PR
தொ.இ: B/6016

பிறப்பு: 1983
நட்சத்திரம்: மகம்
கி.பா: 577 இல் செவ்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்:H.N.D.M/தனியார் நிரந்தரம்
தொ.இ: B/6018

பிறப்பு: 1987
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: 56 1/4
உயரம்: 5’5"
தகைமை/தொழில்:A/L/பொலிஸ்(SI)
தொ.இ: B/6020

**மணமகன் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 37
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: BA/அபிவிருத்தி உத்தியோகத்தர் (அரச)
தொ.இ: G/6039

பிறப்பு: 1989
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 18 8 இல் செவ்
உயரம்: 5’1"
தகைமை/தொழில் :B.Sc Business Management It consaltant(தனியார்)
தொ.இ: G/6041

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா: 38
உயரம்: 160Cm
தகைமை/தொழில்:ஆசிரியர்
தொ.இ: G/6047

பிறப்பு: 1986
நட்சத்திரம்:பூர்ட்டாதி 3
கி.பா: 54 1இல் செவ்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:AL/நூலக உதவியாளர் ,தகவல் தொழில் நுட்ப உதவியாளர்(தனியார்)
தொ.இ: G/6048

**கல்யாண மாலை**
(சர்வதே021 720 1005,021 221 5434
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# இராசி பலன்

03.07.2016
(ஆனி 19, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 7.18 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 8.53 மணிவரை
சுபநேரம் 8.57-10.27 மணிவரை
இராகுகாலம் 4.27-5.57 மணிவரை
போதாயண அமாவாசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி புத சுக் சந் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் விசாகம், அனுசம் காலை 9.19இற்கு மிது-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள்,குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறும், பகையொன்று நட்பாகலாம், போசனசுகமுண்டு.

**இடபம்:** சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்:** இடமாற்றம், ஊர்மாற்றம் என்பன இடம்பெறலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்,சயனசுகச் குறைவான நாள்.

**சிம்மம்:** தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** செயற்பாடுகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்,போசனசுகமுண்டு, சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தந்தைவழி உறவில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் பொறுமையுடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், கௌரவமான நாள், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்:** பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பூர்வபுண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**மீனம்:** உடன் பிறப்புக்களால் உற்சாகம் பெருகும், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.



# காரைநகர்-களபூமி-திக்கரை
# (ஸ்ரீ சிவசுப்பிரமணிய
# தேர்த்திருவிழா சிறப்பு



**வடம் பிடிக்க வாரீர்**

புண்ணிய பூமியென போற்றப்டும்காரைநகரில்எழுந்தருளி அடியவருக்கு வேண்டும் வரம் தரும் திக்கரை முருகப்பெருமானது இர தோற்சவ நிகழ்விற்கு ஆசியுரை வழங்குவதில் உவகையடைகின்றேன்.

தேவர்களுக்குதுன்பம் விளைவித்த சூரனை வதம் செய்து அவனை வேலும் மயிலுமாக்கி தன்னுடனேயே இணைத்து மகாதத்துவத்தை வழங்கும் முருகப்பெருமான் அருள் மழையில் நனைந்து திக்கரை முருகமூர்த்தி பெருமானின் இரதோற்சவத்தில் இணை வோமாக. அறிவின் மூலமாய் விளங்கும் வேலுடன் வள்ளி தெய்வானையோடு வீற்றிருக்கும் முருகப் பெருமான் அடிய வருக்கு வேண்டும் வரம் தருவான்.

திக்கரையில் இரதோற்சவம் காணும் முருகப்பெருமானின் வடம் பிடித்து மாயையை அழித்து அறிவைப்பெற அவன் தாள் பணிவோமாக

**சுபமஸ்து ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்**



தேரேறி வருகின்றாள்
திக்கரை முருகன்
மயூராதி ரூடம்
மஹாவாக்ய கூடம்
மனோஹாரி தேஹம்
மஹச்சித்த கேஹம்
மஹீதேவ தேவம்
மகாவேத பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோகபாலம்

சுப்பிரமணிய புஜங்கத்தில் ஆதி சங்கர் புகன்றவாறு மயிலை வாகனமாகக் கொண்டு அதன் மீதேறி அமர்ந்திருப்பவரும் நான்கு விதமாக வாக்கியங்களுக்குப் பொருளாக இருப்பவரும் காணவரும் பக்தர்களுடைய மனதைக் கொள்ளை கொள்ளும் அழகிய திருமேனியைக் கொண்டவரும் மகான்களின் மனத்தில் குடியிருப்பவரும் பிராமணர்கள் அவசியம் துதிக்கத்தக்கவர் ஆகவும் நான்கு வேதங்களின் சிறப்பிற்குப் பொருளாகவும் எல்லா உலகத்தையும் நிர்வகிக்கும் சக்தி படைத்தவரும், மகாதேவனான பரமேஸ்வரனுடைய மகனான சுப்பிரமணியக் கடவுளும் என்று சொல்லி துதிசெய்யும் பெருமானாரும் திக்கரையில் இருந்து அருளாட்சி செய்பவரும் ஆகிய குமரப் பெரு மான், வள்ளி தேவசேனா சமேதராக தேரேறி வருகின்றான். நம்பித் தொழும் அடியார்க்கு சகல செல்வ யோகமிக்க பெரு வாழ்வை அளிக்கப் பிரார்த்திக்கிறோம்.

**க.கு.க.சிவபாலன்**
**அடியாருக்கு அமுதூட்டும் அன்னையாம்.**




**வாழ்த்துச் செய்தி**
**தேரேறி வரும் முருகப் பெருமான் புகழ் பாடுவோம்.**

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் இரதோற்சவத்திற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகி ழ்ச்சியடைகின்றேன். காரையம்பதி வாழ் மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும் எம்பெருமானின் இரதோற்சவத்தைக் கண்டு களிக்கவும்அருள் பெறவும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கூடுகின்ற இந்நாளில் நம் எல்லோரும் முருகன் திருவருளால் மகிழ்வுடன் வாழ்கின்றோம் என் பதை நினைக்கின்ற பொழுது மனம் நெகிழ்கின்றது. எம்பெருமான் தேரைப் பக்தர்கள் வடம் தொட்டு இழுக்கின்ற பொழுது தேர் அசைவத னைக் காண்கின்ற பாக்கியமே பக்தர்களுக்கு வரப்பிரசாதமாகும்.இதன் காரணமாகவே காரைநகரில் மட்டுமன்றி வடநாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வருகை தருவதுடன் இலங்கையிலும் உலகின் பல நாடுகளிலிருந்தும் அடியவர்கள் வருகை தருவதனைக் காண முடிகின்றது. காரைநகரில் பிரசித்தி பெற்ற பல ஆலயங்கள் இருப்பதுடன் அதில் உயர் பிரசித்தி பெற்ற ஆலயமாகத் திக்கரை முருகமூர்த்தி கோயில் காணப்படுகின்றது. அண்மைக்காலத்தில் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் ஆலய மாக இது காணப்படுவதுடன் பக்தர்கள் குறைதீர்க்கும் பரம்பொருளா கவும் முருகப்பெருமான் காட்சியளிக்கின்றார். அதன் காரணமாக நாளாந்தம் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை அதிக ரித்து வருவதனைக் காணமுடிகின்றது. முருகப்பெருமானின் திருவருளைப் பெறுவதற்காக திருவிழாக்காலங்களில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்தை நோக்கி வருவதன் காரணமாக பக்தர் கூட்டம் நிறைந்து வழிகின்ற ஆலயமாக முருகமூர்த்தி ஆலயம் விளங்குகின்றது. பக்தர்கள் தம் குறைதீர் த்த எம்பெருமானின் பெரும்புகழை உரத்த குரலில் ஒலிக்க முற்படுகின்ற விழாவாகவும் தேர்த்திருவிழா காணப்படுகின்றது.

இந்த ஆலயத்தின் பக்தர்கள் முருகப்பெருமானின் அரு ளைப் பெற வேண்டும் என்ற ஆர்வத்தினால் கொடியேற்றத்திற்கு முன்பதாகவே ஆலயத்திற்கு வருகை தந்து மஹோற்சவத்திற் காக எல்லா வேலைகளையும் ஆரம்பித்துவிடுவது மகிழ்ச்சி தரு கின்றது. எமது குலதெய்வமாகிய முருகப்பெருமானின் அருள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டுமென மனதார எம்பெரு மானை இறைஞ்சுகின்றேன்.

**எம்பெருமான் முருகன் புகழ்பாடும்**
**S.V.M.குணரத்தினம், பிரபல வர்த்தகர்.**



**திக்கரை முருகனின் அருள் திக்கெட்டும் பரவட்டும்...**

காரைநகர் களபூமி திக்கரை பதியிலே வீற்றிருந்து அருளாட்சி புரிந்து கொண்டிரு க்கும் திக்கரை முருகப் பெருமானுக்கு இன்று இரதோற்சவம் சிறப்பாக நடைபெறுவதற்கு திருவருள் கைகூடி உள்ளது. எனவே எம்பெ ருமான் கலியுக வரதன் திக்கரை முருகன் மஹோ ற்சவம் ஆரம்பம் ஆகிவிட்டது என்றால் கள பூமி மக்களுக்கு ஓர் பெரிய அற்புத மானதும் ஆனந்தமானதுமான ஒரு செயல் என்றால் மிகையாகாது. ஏனெனில் இங்குள்ள அடியவர்கள் மாத்திரமன்றி திரு விழாக் காலங்களில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்து வரும் எமது உறவுகளுக்கு ஆலய மஹோற்சவத்துக்கு வருகைதந்து எம்பெருமானை வழிபட்டு அருள் பெறுவது காலம்காலமான ஒரு செயற்பாடாகவே இருந்து வருகின்றது.

திக்கரை முருகன் ஆலய மஹோற்சவ திருவிழாக்களில் எமது இந்து இளை ஞர் மன்றத்தின் ஊடாக தினமும் அன்னதானம் சிறப்பாக நடைபெற்று வரு வது என்பது ஓர் சிறப்பம்சம் ஆகும். எல்லாவற்றுக்கும் மேலாக எம் பெருமான் திக்கரை முருகனின் தேர் உற்சவம் வெகு சிறப்பாக நடை பெறுவதுடன் எல்லா மக்களும் சாந்தியும் சமாதானமும் சகல செல்வங்க ளும் பெற்று வாழ திக்கரை முருகனின் அருள் எட்டுத்திக்கும் பரவ வேண்டுகின்றேன்.

''முருகன் அருள் பரவட்டும்'' **திரு.ச.குகராஜா, தலைவர், திக்கரை இந்து இளைஞர் மன்றம், களபூமி, காரைநகர்.**

**திருத்தல வரலாறு**

ஈழவள நாட்டின் வடபகுதியில் உள்ள சிவ பூமியாகிய காரை வள நாட்டில் பலசைவ ஆலயங்கள் சிறப்புற அமைந்திருக்கின்றன. அவற்றில் களபூமியிலுள்ள திக்கரை எனும் பதியில் வேண்டுவார்க்கு வேண்டு வதை யெல்லாம் ஈந்தருளும் கலியுக வரதனாகிய முருகப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார். பெருமை வாய்ந்த இத் தலத்தின் வரலாறு மிக அற்புதமானது. இற்றைக்கு பல நூற்றாண்டுக்கு முன்னர் (1760 வரையில்) உற்பத்தியாகிய முருகப்பெருமான் காலத்துக் குக் காலம் பல அற்பு தங்களை புரிந்திருக்கின்றார்.

அரிய மானிடப்பிறவி எடுத்த கனகசபை காசிநாதர் எனும் அன் பருக்கு திடீரென கண் பார்வை மறைந்து விட்டது.அதனால் பெரும் அல்லலுக்கு உட்பட்டு முருகன் காப்பான் எனும் உறுதியுடன் இடையறாது அவர் செந்தாள்களை தழுவிப்பிடித்தமையினால் முரு கப் பெருமான் திருவுளம் கொண்டு அந்த அன்பருக்கு கண்ணொளி கொடுத்தார். இதனால் உள்ளம் புளகாங்கிதம் அடைந்த அன்பர் வயல் மேட்டிலிருந்த வேலாயுதத்தை இப்பொழுது புனருத்தாரணம் செய்யப் பட்டிருக்கும் கோயில் இருக்கும் இடத்தில் வைத்து சிறு ஆலயமாக அவரும் ஊரில் உள்ளவர்

களும் ...
கோயில ...
192 ...
ஆலய ...
நடத்தின ...
1960இ ...
கனகர் ...
இல் கு ...
197 ...
பொறுப் ...
இவர் சி ...
ப்பை ஏ ...
பொன் ...
நடத்தி ...
பலம் உ ...
தொடக் ...
இடம்பெ ...

**தேர்த் திருவிழாவின் உபயகாரரும் சூரியகுல வழித்தோன்றலும், த...**
**வாரிசுகளிலொருவருமான தம்பி மு.தம்பிராசா அவர்களின்**

*"கார்விளையும் காரைநகர்க் களபூமித் திக்கரையில் ஊர்விளங்கக் கோவில்கொண்டு உயிர்க்...*
*சீர்பொழியும் மஹோற்சவத்துத் தேரோடும் திருவிழாவில் பார்போற்றப் பணிசெய்த "எம்பர்" ...*
*தேரோட்டத் திருநாளில் வாய்மையின் வெற்றியோடு வணங்கிடுவோம் திக்கரை முருகனை...*

**திருமூலர் கோவில்களை பூட்டி வைத்தால் பெரும் தீங்குகள்**

"முன்னவனார்கோயில் பூசைகள் முட்டிடின் மன்னர்க்குத் தீங்குள வாரி வளம்குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி என்னரு நந்தி எடுத்துரைத் தானே"

எதையுமே பரந்தமனத்தோடு ஆராயவேண்டும். கோவில் வழிபாடு, மக்கள் சேவை என்ற இ... காரணமும் இருக்கிறது. மக்கள் சேவையில் ஒருவன் செல்லும் போது, தனது சேவையால் இ... கடவுளை வணங்கும்போது, தன்னைவிட மேலான சக்தி இருக்கிறது என்ற பணிவு ஏற்படுகிறது.

முருகனைத் தவிர்த்து வேறு ஒரு தெய்வத்தின்பால் மக்கள் ஆற்றுப்படுத்துப்பட்டதாகக் கா... "முருகாற்றுப்படுத்த" என்ற தொடர் அகநானூற்றிலும் காணப்படுகின்றது. முருகன்பால் ஆற்றுப்பட... காணலாம்.

சொந்த நாடின்றி அகதிகளாக சர்வதேசமெங்கும் அல்லல்படுகின்ற எமது மக்களை ஆற்றுப்ப... எல்லாம் வல்ல திக்கரை முருகப்பெருமானை பிரார்த்திப்போமாக!.

தமிழோடும், தமிழர் வாழ்வோடும் ஒன்றிவிட்ட தெய்வமாக முருகன் கருதப்படுகின்றான்.

நாம்.. தமிழர் மொழியை, அதன் தொன்மையை, தெய்வத் தன்மையை, அதன் சக்தியை சிற... வணங்குவதற்கும் துதிப்பதற்கும் பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டுமென்பதை உணர மு...

" என்னை நன்றாக இறைவன் படைத்தனன்" தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே என்பத... களம்பலகண்ட களபூமியின்கண்ணே அமைந்திருக்கும் அருள்பொங்கும் முருகன்ஆலயம் "திக்க... காரைநகரில் வாழ்ந்த "சிவவேதியர்" கார்த்திகேயப் புலவர் அவர்களினால் இயற்றப்பட்ட "திக்கரையந்தாதி" என்னும் நூல் திக்கரை முருகனின் அற்புதங்களையும், சிறப்புக்களையும...

" அறிவாய் அரிய பொருளாகி, ஐவகைத் தத்துவத்தின் பிரிவாய் அரி, அம்புலி அனலாயிப் பெ...
செறிவாய், அரியயனுக்கு மெட்டாத வெந்தேவன் நல்ல செறிவாயரி படர் திக்கையில் மேவி...

எமது வாழ்நாளில் எம்மால் உணரப்பட்ட திக்கரை முருகக் கடவுளின் அற்புதங்கள் ஏராளம். ... வாழ்ந்துகொண்டிருப்பதே ஆறுதிருமுருகக் கடவுளின் அற்புதங்களிலொன்று என்றால் அது மிகை...

உலகெங்கும் அகதிகளாக அல்லல்படுகின்ற எமது மக்களை ஆற்றுப்படுத்த, நிரந்தரமான... வேண்டி எல்லாம் வல்ல திக்கரை முருகப்பெருமானை வழிபடுவோமாக!. " இன்பமே சூழ்க எல்...

"பாண்டியன் இல்லம்" பாலாவோடை, காரைநகர்.தொலைபேசி...


**S.V.MURUGESU**
**இல.154,**
**ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**சண்முகன் ஸ்ரோர்ஸ்**
308,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tel :- 021 222 9500

**RUBA VERSATILE TRADERS**
104 - A, Stanley Road, Jaffna.
Tel :- 021 222 8330

Co...
N...

**சரவணாஸ் ரேடேர்ஸ்**
இல.3. நவீனசந்தை
வெளிப்புறம், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 2742

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6693

Navalar E...



# ...ரை முருகமூர்த்தி கோவில்
# ...ய சுவாமி கோவில்)
# ...பு மலர்- 03.07.2016

களும் 1880 இல் அமைத்து நிர்வாகப் பொறுப்பை ஏற்றனர். அக் கோயிலை மேலும் கற்களால் கட்டி 1902 இல் கும்பாபிஷேகம் செய்தனர்.

1925 இல் இவரது மறைவுக்குப் பின்னர் சிதம்பரப்பிள்ளை கனகசபை ஆலய நிர்வாக பொறுப்பை ஏற்று 1928, 1948களில் கும் பாபிஷேகத்தை நடத்தினார்கள். 35 ஆண்டுகள் இந்த ஆலயத்தை செவ் வனே பரிபாலித்து 1960இல் சிவபதம் அடைந்த பின்னர் அவரது மகன் வைத்தியகலாநிதி கனகர் திருநாவுக் கரசு அவர்கள் கோயில் நிர்வாகப் பொறுப்பை ஏற்று 1974 இல் கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள்.

1979 இல் இவர் சிவபதம் அடைய சிதம்பரப்பிள்ளை கந்தையா நிர்வாகப் பொறுப்பை ஏற்று 1990 இல் கும்பாபிஷேகம் நடத்தினார்கள். 1990 இல் இவர் சிவபதம் அடைய மூத்தமகன் கந்தையா நடராசா நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தி 2000 இல் இவர் சிவபதமடைய இளைய மகன் கந்தையா பொன்னம் பலம் நிர்வாகப் பொறுப்பை ஏற்று 2008 இல் கும்பாபிஷேகத்தை நடத்தினார் கள். 2012 இல் இவர் சிவபத மடைய மூத்தமகன் பொன்னம் பலம் உமா சங்கர் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தி வருகின்றார். அன்று தொடக்கம் இன்று வரை ஆலயத்தில் சிறப்பான முறையில் நித்திய பூசைகள் இடம்பெற்று வருகின் றனமை குறிப்பிடத்தக்கது.

...றலும், தம்பி எம்பெருமாள் வழிவந்த
...வர்களின் ஆசிச் செய்தி



*...டு உயிர்க்கருளும் முருகனருள்*
*...த "எம்பர்" பரம்பரைக்கே உரித்தான*
*...முருகனையே"*
...தீங்குகள் வரும் என்கின்றார்.
...றும்

...வ என்ற இரண்டுமே தேவை என்று திருமூலர் நினைத்திருக்க வேண்டும். இதற்கு ஒரு ...வயால் இன்னொருவன் வாழ்கிறான் என்ற இறுமாப்பும் ஆணவமும் ஏற்படுகிறது. ...ற்படுகிறது. ஆகவே இந்த இரண்டும் தேவை என்று திருமூலர் நினைத்திருக்கலாம். ...டதாகக் காணப்படுகின்ற குறிப்பு எந்தச் சங்க இலக்கியத்திலும் காணப்படவில்லை. ...ஆற்றுப்படுத்துகின்ற நிலை வழக்கில் இருந்துள்ளமையைத் திருமுருகாற்றுப்படையில்

...ஆற்றுப்படுத்தி அவர்களின் நிரந்தரமான, நிம்மதியான, சுதந்திரமான சுகவாழ்விற்காக

...றான்.
...ந்தியை சிறிது ஆராய்ந்து பார்ப்போமானால் நாம் தெய்வத் தமிழால் இறைவனைப் பாடி ...உணரமுடியும்.
...றே என்பது சிவநிலை அடைந்த திருமூலரின் வழக்காகும்.
...யம். "திக்கரை" எனுமிடம் வயல்கள் செறிந்த வனப்பு மிகுந்த செந்நெல் விளையும் பூமி,
...படட
...க்களையும் எடுத்தியம்புகின்றது.
...மாயிப் பெண்ணாணலியாஞ்
...பில் மேவிய வித்தகனே"
...ஏராளம். இன்று இப்புவியில் நாமெல்லாம் உயிருடன் ...அது மிகையாகாது.
...ந்தரமான, நிம்மதியான, சுதந்திரமான சுகவாழ்வை
...சூழ்க எல்லோரும் வாழ்க"
...லைபேசி: 077 738 2343

## பிரதம குருவின் ஆசிச்செய்தி



தெக்ஷண கைலாயம் எனப் போற்றப் படும் ஈழமணித்திருநாட்டின் சைவமும் தமிழும் போற்றும் யாழ்ப்பாணத்து காரைநகரின் உதயன் உதிக்கின்ற கிழக்கு திசையில் திக்கரைப் பதியில் பல அற்புதங்களை நிகழ்த்தி கோவில் கொண்டு அருள்பாலித்துக் கொண்டு விளங்கும் வல்லிதேவ சேனாசமேத சுப்பிரமணியப் பெருமானுக்கு இன்று இரதோற்சவம் நிகழ்கின்றது.

மஹோற்சவ கிரியைகளில் முக்கியமான நிகழ்வாகிய இவ்வுற் சவத்தின் மூலம் எமது பாவ வினைகள் எமக்கு இருக்கின்ற ஆணவம், கன்மம் என்கின்ற இராட்சத குணங்கள் அழிக்கப்ப ட்டு சுத்த ஆத்மாவாக எம்மை மாற்றுகின்ற செயல் அமைகின்றது. எனவே இன்றைய இரதோற் சவ நிகழ்வில் நீங்கள் எல்லோரும் கலந்து கொண்டு எம்பெருமானின் தேர் வடத்தைப்பிடித்து இழுத்து ஆணவ மலத்தைப் போக்கி பரமாத்மாவாகிய சண்முகநாதப் பெருமானின் திருவருளுடன் சகல செல்வங்களும் பெற்று சௌபாக்கியமாக வாழ எமது நல்லாசிகள் கூறி அமைகின்றோம்.

**லோகா சுவஸ்தா சுகினோபவந்து**
**வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை**
**பிரம்மஸ்ரீ கு.சரவணபவானந்தசர்மா**
**(ஆலய பிரதம குரு) காரைநகர்.**

## மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி



தென்கைலாயம் என்னும் இவ்விலங்கா புரியில் புராணகாலம் தொட்டு பல அருள் நிறைந்த பல திருக்கோயில்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு அதனூடாக அடிய வர்களுக்கு ஆன்மா ஈடேற்றம் நல்கி வருகின்றார். அவ்வண்ணம் சீரும் சிறப்பும் பொலிந்து விளங்கும் ஈழதிருநாட்டின் வடமேற்பாகத்தின் காரைநகரின் கிழக்கு திசையில் வேண்டுவோர் வேண்டுவதை தந்தருளும் பொருட்டு களபூமி திக்கரை பதியில் கோயில் கொண்டு வீற்றிருந்து அருள்பாலித்து விளங்கும் கலியுக வரதனாம் வள்ளி தேவ சேனா சமேத சிவசுப்பிரமணிய பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழா கோலாகலமாக நடைபெறுவதை இட்டு நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைகிறோம். தேர் உற்சவமானது பஞ்ச கிருத்தியத்தில் அழித்தலை குறிக்கிறது. உற்சவமானது இவ்வூரில் உள்ள தீமைகளை, பாவங்களை களைந்து ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுப்பதுடன் பக்தர்கள் அனைவருக்கும் கந்தப்பெருமானின் திருவருள் கடாட்சம் கிடைக்கப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ பிரார்த்தித்து எனது நல்லாசிகளை கூறிக்கொள்கிறேன.

**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!**
**மஹோற்சவ குரு**
**சிவஸ்ரீ சிவாச்சார்ய இளஞ்சுடர்**
**ந.கஜநேசக்குருக்கள்.**

## முருகப் பெருமானே தேரேறி வாராய்



திருவருட்செல்வங்கள் பொலிந்து சீரும் சிறப்பும் வாய்ந்த நவ கண்டங்களுள் சிறந்த பூமியாகிய பரத கண்டத் தினை சார்ந்த சிவபூமி எனப் படும் புண்ணிய தேசமாகிய இலங்கா புரியின் வடபால் அமைந்த வீணாகானபுரம் என வியந்து அழைக்கப்படும் யாழ்ப்பாண நன் நகரில் மேற்குத்திசையில் அமைந்திருப்பது காரைநகர். இந் நகரில் சூரியன் உதிக்கும் கிழக்கு திசையில் அமைந் திருப்பது களபூமி எனும் கிராமம். இக்கிராமத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்கி உள்ளன. அதனால் கல்வி, விவசாயம், வர்த்தகம், நீதி என்ற வளங்கள் மேம்பட்டு விளங்குகின்றன.

திக்கரை என்னும் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களுடன் தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு வேண்டும் வரங்களை அருளி, அருளாட்சி புரிந்து கொண்டு விளங்கும் திக்கரை ஸ்ரீ சிவசுப்பிரமணிய பெருமானின் வருடாந்த பிரம்மோற்சவம் நிகழும் மங்கலகரமான மன்மத வருடம் ஆனித்திங்கள் 19 ஆம் நாளாகிய (03.07.2016) இன்றைய நன்நாளில் தாங்கள் விரும் பிக் கேட்கும் வரங்களை ஈந்தருளும் திக்கரை முருகப் பெருமான் தம்மிடம் நாடி வரும் பக்தர்களின் குறைகளை தீர்ப்பவர். அவர் தம் பாதார விந்தங்களை பணிந்து அவர் தேரேறி வரும் இந்நாளில் இவ்வாலய வளர்ச்சிக்கு உதவி புரியும் அனைவருக்கும் மற்றும் இம் மலர் சிறப்பாக வெளிவர ஒத்துழைப்புச் செய்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அவரருளை அனைவரும் பெற்றுய்ய எல்லாம் வல்ல முருகப் பெருமானை வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.

P.உமாசங்கர்
ஆலய அறங்காவலர்


**கிருஷ்ணா நகை மாளிகை**
இல. 09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 021 222 5046

**க.கு.கந்தையாப்பிள்ளை அன் சன்**
318 (124), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**KS KANNAN STORES**
268, Hospital Road,
Jaffna.

**K.S.M. Communication**
No.146,New Market
Jaffna.
T.P :- 021 222 3079

SRI RAMAJEYAM
**SRI SIVARAM TRADERS**
No.248,Hospital Road,
Jaffna. Tel:-021 222 8629
077 756 0760

**யாழ்.புத்தகசாலை**
305, 307, 309, மணிக்கூட்டு
வீதி, யாழ்ப்பாணம்.
TP: 021 221 7874

**INKARAN STORES**
354, Hospital Road,
Jaffna.

**NEC**
Navalar Education Centre.
Point Pedro Road, Anaipanthi.
Clock Tower Road, Jaffna.
T.P:- 077 469 6695


**YARL TRADES CENTRE**
Agents for Bata
11, Modern Market -
Hospital Road, Jaffna.
Tel :- 021 222 3152

**அன்னை புத்தகசாலை**
இல. 07, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 9881

**சங்கீதா மல்ரிசென்ரர்**
இல. 05, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# புதிய அரசியல் கட்சிக்கு எதிர்காலம் கிடையாது!

## அமைச்சர் துமிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

**புதிய அரசியல் கட்சிக்கு எதிர்காலம் கிடையாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர், அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிதாக ஆரம்பிக்கப்படும் அரசியல் கட்சிகளுக்கு எதிர்காலம் எதுவுமிருக்காது.

ஒவ்வொரு நபர்களையும் தலைமைத்துவத்திற்கு இட்டு அரசியல் கட்சி அமைக்கும் அரசியல்வாதிகள் மக்களிடமிருந்து விலகிச் செல்ல நேரிடுவர்.

மகிந்த தலைமையில் புதிய அரசியல் கட்சி அமைப்பது குறித்து இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிப்புக்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

நாட்டு மக்களுக்கு புதிதாக அரசியல் கட்சிகள் எதுவும் அவசியமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## அரசாங்கத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்ட நாடகக் கலைஞர்கள்

இலங்கையின் நாடகக் கலைஞர்கள் அரசாங்கத்திற்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர.

மேல் மாகாண கலாசார கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் அரச நாடக விழா நடைபெற்றது.

அரச நாடக விழாவிற்கு இம்முறை அரசாங்கம் அனுசரணை வழங்கவில்லை என கலைஞர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இம்முறை அரச நாடக விழாவினை நடத்த அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தினால் நாடக விழாவினை நடத்த கால தாமதம் ஏற்பட்டதாக நாடகக் கலை இணைச்சபையின் தலைவர் பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன் தினம் நடைபெற்ற நாடக விழாவில் பங்கேற்று அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தலைமையில் நிகழ்வு நடத்தப்படவிருந்தது.எனினும் கல்வி அமைச்சர் நிகழ்வில் பங்கேற்கவில்லை. இதனால் 5 மணிக்கு நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்த கலைஞர்கள் நூதனமான முறையில் தங்களது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

சிலர் கறுப்பு ஆடைகளை அணிந்து எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். மேலும் சிலர் விருதுகள் வழங்கப்படும்போது பதாகைகளை ஏந்தி அதன் ஊடாக எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

நீங்கள் அப்படி என்றால் நாங்களும் இப்படித்தான் அதுவா உங்கள் எண்ணம்"

"ஜனாதிபதி அவர்களே கலை வாழ்க்கை என்று ஒன்றும் உள்ளது என்பது தெரியுமா"

"கல்வி அமைச்சரே நாடகம் தேவைப்படாதா"

"குறைநிரப்புப் பிரேரணையில் கலைத்துறைக்கு 0.3 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது, இது அதிகாரிகளுக்கு உண்ண போதுமானதல்ல"

"பிரதமர் அவர்களே கலையை சாப்பிட முடியுமா? அப்படித்தானே"

என பல்வேறு பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சி பீடம் ஏற்றும் முயற்சியில் ஈடுபட்ட நாடகக் கலைஞர்களும் இந்த எதிர்ப்பில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## மண்ணெண்ணெய் ஊற்றி மனைவியை எரித்த கணவன்!

மனைவியை கணவன் மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து கொலை செய்த சம்பவம் ஒன்று பாதுக்கை, பானலுவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில 24 வயதான ஒரு குழந்தையின் தாய் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி கணவன், மனைவி இருவருக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையையடுத்து குறித்த பெண் கணவரால் தீ வைக்கப்பட்டுள்ளார்.

தீக் காயங்களுக்குள்ளான குறித்த பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் கரவனெல்ல வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் எனவும் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. (இ-10)




- 324 - ஏட்றியனோப்பில் நகரில் இடம்பெற்ற சமரில் ரோமப் பேரரசன் முதலாம் கொனஸ்டன்டீன் லிசீனியசை வென்றான்.
- 987 - ஹியூ காப்பெட் என்பவன் பிரான்சின் மன்னன் ஆனான். இவனது வம்சத்தினர். 1792 இல் பிரெஞ்சுப் புரட்சி இடம்பெறும் வரை பிரான்சை ஆண்டனர்.
- 1250 - பிரான்சின் ஒன்பதாம் லூயி எகிப்தில் ஏழாவது சிலுவைப் போரில் ஈடுபட்டிருந்தபோது பாய்பர்களால் பிடிக்கப்பட்டான்.
- 1608 - கியூபெக் நகரம் உருவாக்கப்பட்டது.
- 1754 - ஏழாண்டுப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டனின் படைகள் நெசசிட்டி கோட்டையை பிரெஞ்சுப் படைகளிடம் இழந்தனர்.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வாஷிங்டன் மசாசுசெட்சில் இராணுவத்துக்குத் தலைமை வகித்தார்.
- 1778 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பெனசிலவேனியாவில் பிரித்தானிய இராணுவத்தினர் பெண்கள், குழந்தைகள் உட்பட 360 பேரைக் கொலை செய்தனர்.
- 1778 - புருசியா ஆஸ்திரியாவின் மேல் படையெடுத்தது.
- 1844 - ஐஸ்லாந்தில் கடைசிச் சோடி பெரிய ஓக் பறவைகள் கொல்லப்பட்டன.
- 1848 - அமெரிக்கக் கன்னித் தீவுகளில் பீட்டர் வொன் ஸ்கொல்ட்டன் என்பவரால் அடிமைகள் விடுவிக்கப்பட்டனர்.
- 1867 - தமிழ்நாடு விழுப்புரம் வளவனூர் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 1866 - புருசியாவின் வெற்றியுடன் ஆஸ்திரிய-புரூசியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1872 - யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிககப்பட்டது.
- 1890 - ஐடஹோ ஐக்கிய அமெரிக்காவின் 43வது மாநிலமாக இணைந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர: பலரஸ்சின் தலைநகர் மின்ஸ்க் சோவியத் படையினரால் நாசி ஜேர்மனியிடம் இருந்து விடுவிக்கப்பட்டது.
- 1962 - பிரான்சுக்கு எதிரான அல்ஜீரிய விடுதலைப் போர் நிறைவு பெற்றது.
- 1969 - சோவியத்தின் என்1 என்ற ஏவுகணை ஏவுதளத்திலேயே வெடித்துச் சிதறியது.
- 1970 - பிரித்தானிய விமானம் ஸ்பெயினில் மலையொன்றுடன் மோதியதில் 113 பேர் கொல்லப்பட்டனர்.
- 1988 - அமெரிக்க போர்க் கப்பல் பாரசக வளைகுடா மீது பறந்த ஈரானிய பயணிகள் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்தியதில் அதில் பயணம் செய்த அனைத்து 290 பேரும் கொல்லப்பட்டனர்.
- 2006 - பூமியில் இருந்து 432,308 கி.மீ தூரத்தில் 2004 XP14 என்ற சிறுகோள் பறந்தது அவதானிக்கப்பட்டது.

**பிறப்புகள**

- 1883 - பிரான்ஸ்காஃவ்கா, எழுத்தாளர். (இ. 1924)
- 1918 - எஸ்.வி.ரங்கராவ்,தமிழ், தெலுங்கு திரைப்பட நடிகர். (இ.1974)
- 1924 - எஸ்.ஆர்.நாதன்,சிங்கப்பூர் ஜனாதிபதி.
- 1928 - ஏம்.எல்.வசந்தகுமாரி, கர்நாடக இசைப் பாடகர். (இ.1990)
- 1942 - அடூர் கோபாலகிருஷ்ணன், கேரளத் திரைப்பட இயக்குநர்.
- 1962 - டாம்க்ரூஸ், அமெரிக்க நடிகர்.
- 1980 - ஹற்பஜன் சிங், இந்தியக்கிரிக்கெட் வீரர்.

**சிறப்பு நாள்**

- பெலரஸ் - விடுதலை நாள்.




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 100 | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 500 | 600 | 600 | 800 | 600 |
| தக்காளி | 260 | 300 | 230 | 280 | 240 | 250 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 60 | 100 | 80 | 120 | 100 |
| கோவா | 160 | 200 | 100 | 160 | 140 | 160 | 150 |
| கரட் | 250 | 400 | 100 | 240 | 240 | 260 | 250 |
| பூசணி | 120 | 120 | 90 | 140 | 90 | 120 | 70 |
| புடோல் | 100 | 60 | 60 | 80 | 80 | 80 | 50 |
| வாழைக்காய் | 100 | 150 | 80 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 40 | 120 | 160 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 100 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 400 | 150 | 320 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 70 | 120 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 150 | 200 | 100 | 120 | — | — | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 | 80 | 100 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 160 | 200 | 120 | 160 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 140 | 200 | 100 | 120 | 120 | 160 | 150 |
| கறிமிளகாய் | 260 | 400 | 250 | 200 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 | 350 | 450 | 300 | 500 |
| போஞ்சி | 200 | 200 | 170 | 200 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்பள்ள | 80 | 50 | 50 | 80 | — | 80 | — |
| கீரை – 1பிடி | 20 | 20 | 10 | 20 | 30 | 20 | 10 |
| தேசிக்காய் | 200 | 200 | 160 | 200 | 160 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | 300 | — | — | — | — | 180 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | 200 | — | 400 | 300 |
| முள்ளங்கி | 120 | 100 | — | 80 | 80 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 25 | 50 | 15 | 30 | 40 | 40 | 15 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 100 | 40 | 40 | 60 | 50 | 50 |

# ஆபத்தில் ஆசிரியம்?



கம்பவாரிதி ஜெயராஜ்

உண்மைக்கும், பொய்யிற்குமான வேற்றுமையை கண்டுபிடிப்பது மிகவும் கடுமையான காரியம். நம் பெரியவர்கள் அறத்தை, ஒழுக்கம், வழக்கு, தண்டம் என முக்கூறுகளாய்ப் பிரித்தனர். அவற்றுள் ஒழுக்கம் என்பது பெரியோர்கள் வரையறுத்தபடி வாழ்வது. வழக்கு என்பது, அவ்வரையறையை ஒருவர் மீறும்போது அவர் அதனை உண்மையில் மீறினாரா என்பதை கண்டுபிடிப்பதற்கான முறைமை. தண்டம் என்பது ஒருவர் ஒழுக்க வரையறையை மீறியிருந்தால் அவரை பழையபடி ஒழுக்க வரையறைக்குள் கொண்டு வருவதற்காக, அவர் செய்த குற்றத்தின் அளவிலான தண்டனையை, உயர்ந்தோர் விதித்ததன்படி வழங்குதல். இதனை திருக்குறளுக்கு உரை செய்த பரிமேலழகர் தெளிவுபட உரைத்திருக்கிறார்.

அறத்தின் மூன்று கூறுகளுள் ஒன்றான வழக்கு என்பது நுண்அறிவாளர்களால் ஆராயப்பட வேண்டிய ஒன்று. குற்றம் செய்த எவரும் நாம் குற்றம் செய்தோம் என ஒத்துக்கொள்ள முன்வருவதில்லை. இது இயல்பு. நான் குற்றம் செய்யவில்லை என ஒரு குற்றவாளியும் சொல்லலாம். ஒரு சுற்றவாளியும் சொல்லலாம். எனவே ஒருவர் சொல்வதில் இருக்கும் உண்மையை, ஆராய்ந்து அறிந்தாலன்றி அவர் சொல்வது, உண்மையா? பொய்யா? என் பதை, எவராலும் உடன் தீர்மானித்தல் கடினமாம். அது நோக்கியே, நீதிமன்றங்களில் வழக்குகளை, நீண்ட காலமெடுத்து விசாரிக்கிறார்கள்.

இன்றைய நீதித்துறை முறைமையிலும், ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்தாலும், ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது எனும் கொள்கை அழுத்தி உரைக்கப்படுகிறது. பொதுவான வழக்கு விசாரணைகளில், ஒருவரை, அவர் குற்றவாளிதான் என நிரூபிக்கும் பொறுப்பு, குற்றம் சாட்டுபவருக்கு உரியதாகும். குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரை குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதியாகவே கருதப்படுகிறார். அவசரகாலச் சட்டங்களில் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவரே தன்னை நிரபராதி என, நிரூபித்தல் வேண்டும். இங்கு அவர் தன்னை நிரபராதி என நிரூபிக்கும் வரையும் குற்றவாளியாகவே கருதப்படுகிறார். அவ் அவசர காலச் சட்டங்களை, உலகம் முழுவதும் எதிர்க்கவே செய்கின்றது.

இந்த நீண்ட முன்னுரை எதற்கு என்று யோசிப்பீர்கள். காரணம் சொல்கிறேன். அண்மைக் காலமாக யாழ்ப்பாணக் கல்வி உலகத்திலிருந்து, வெளிவரும் செய்திகள் அதிர்ச்சியூட்டுகின்றன. ஒரு மாணவனை அடித்துக் காயப்படுத்தினார் எனும் குற்றச்சாட்டில் தென்மராட்சியில் ஓர் ஆசிரியர் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அப்பிரச்சினையை சமாதான முறையில் தீர்க்கவேண்டுமென முயற்சித்த மற்றும் இரு ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது நான் கேள்விப்பட்ட முதற் சம்பவம்.

தன்னிடம் கற்கும் ஆறாம் வகுப்பு மாணவி ஒருத்தியோடு, முறைகேடாக நடக்க முயன்றார் எனும் குற்றச்சாட்டின் பேரில் ஒரு ஆசிரியரும் அச்செய்தியை மறைக்க முற்பட்டார்கள் எனும் பெயரில், அக்கல்லூரியின் அதிபரும் மற்றும் இரு ஆசிரியைகளும், அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த இருவருமாக மொத்தம் ஆறுபேர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவும் தென்மராட்சியிலேயே நடந்திருக்கிறது. இதேபோன்ற ஒரு சம்பவம், உயரப்புலம் பாடசாலையிலும் நடந்து, அங்கும் அதிபர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கேள்வி.

தென்மராட்சியில், அக்கைதுச் சம்பவங்களுக்கு ஆதரவாக, வர்த்தக சங்கத்தினர் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியிருக்கின்றனர். அதே ஊரில் சம்பவம் நடந்த கல்லூரியின் மாணவர்கள் கைதுச் சம்பவத்திற்கு எதிராக உண்ணாவிரதம் இருந்திருக்கின்றனர். இப்படியாக அடுத்தடுத்து நடந்துவரும் இப்பிரச்சினை சார்ந்த நிகழ்வுகள், கல்லூரியைத் தாண்டி சமூகத்திற்குள்ளும், அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

வழமைபோலவே இச்சம்பவங்கள் பற்றி பொறுப்பின்றிக் கருத்து வெளியிடுவோர் தொகை அதிகமாகியிருக்கிறது. சிலர் 'அவங்கள் இருந்திருந்தால் இது நடந்திருக்குமா?' என்று, தங்கள் வழமையான பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் பிரச்சினை விசாரணையில் இருப்பது பற்றிக் கவலைப்படாமல், 'இந்த ஆசிரியர்களைத் தூக்கில் போடவேண்டும்' என்று, உண்மையை அறியாமல் தாங்களே தீர்ப்புரைத்து நிற்கிறார்கள். இந்தப் பிரச்சினையோடு எந்தத் தொடர்புமில்லாத இன்னும் சிலர், 'அவர் அப்படிச் செய்துதான் இருப்பார்' என்று, ஊகம் உரைத்து மகிழ்கிறார்கள். மற்றொரு பக்கம் இவர்களைப் போலவே, குற்றம் சாட்டப்பட்டவர்களைக் காப்பாற்றி வாதிட முயல்வோர்தம் வாதங்களும் இருக்கின்றன. மொத்தத்தில் சும்மாவே வாய் மெல்லுகிறவனுக்கு, ஒரு பிடி அவல் கிடைத்தாற்போல் ஆகியிருக்கிறது நிலைமை.

நீதிமன்ற விசாரணையில் இருக்கும், இத்தனிப்பட்ட பிரச்சினைகள் பற்றி நாம் வெளிப்பட ஆராய முடியாது. அதேநேரம் இத்தகைய் பிரச்சினைகளால், சமூகத்தில் ஏற்படப்போகும் அதிர்வுகள் பற்றியும் கல்வி உலகு சந்திக்கப்போகும் தலைவலிகள் பற்றியும் மாற்றம் அடையப் போகும் மாணவர்களின் நடவடிக்கைகள் பற்றியும் நாம் கண்டுகொள்ளாமல் இருக்கவும் முடியாது.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று, ஆசிரியர்களையும் உறவுப்பட்டியலில் சேர்த்தவர்கள் தமிழர்கள். ஆசிரியன் பற்றி வரைவு செய்த நம் பழைய உரையாசிரியர்கள் அச்சொல்லுக்கு மாணவர்களுக்குக் கற்பிப்பவன் என்று பொருளுரைக்காமல், 'மாணவர்களால் கற்கப்படுகிறவன்' என்று உரை எழுதி, நம்மை வியக்க வைக்கின்றார்கள். அவர்கள் அங்ஙனம் எழுதியதற்குக் காரணம் இருக்கிறது. மாணவர்கள் ஆசிரியனிடம் பாடத்தை மட்டும் கற்பதில்லை. அவனது பண்பு, ஒழுக்கம், நல்லாற்றல் என்பவற்றோடு ஆசிரியனின் நடை, உடை, பாவனையைக் கூட தம்முள் பதித்துக்கொள்கிறார்கள்.

அதனாற்றான் அவ்வுரையாசிரியர்கள் அங்ஙனம் எழுதிப் போயினர். கல்வி மரபிலும் சந்ததி சொல்லும் முறைமை நம் தமிழர்களின் தனித்த பெருமை.

தமிழர் பாரம்பரியம் ஆசிரியத்துவத்தின் முக்கியத்துவத்தை எங்ஙனம் கொண்டிருந்தது? என்பதை மேற் செய்திகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. இவ் உண்மைகளை உணராது, ஓர் ஆசிரியன், தன் மாணவியை இச்சித்தான் எனும் செய்தி உண்மையெனின் நீதிமன்றத் தண்டனைகளுக்கு அப்பால் அவன் கல்வி உலகை விட்டு வெளியேற்றப்படவேண்டியவன் என்பதில் எவர்க்கும் கருத்து முரண்பாடு இருக்க நியாயமில்லை.

நான் சொல்ல வந்த விடயம் வேறு. இன்று நம் கல்வி உலகில் நான் மேற்சொன்ன தமிழர் தம் ஆசிரிய முறைமை என்பது மெல்ல மெல்ல தேய்ந்து போய்க் கொண்டிருக்கிறது. ஆங்கிலேயர்தம் கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதால், அவர்தம் கொள்கையே கல்வியின் எல்லை என நினையும் அடிமைக் குணம் கொண்ட நம்மவரால், நம் ஆசிரிய, மாணவர் உறவு இன்று சிதைந்து கிடக்கிறது. சில இலாபங்கள் நோக்கி நாம் உலகோடு செய்த சமரசங்கள் நம் அடிப்படைப் பண்பாட்டைச் சிதைக்க அதன் விளைவுகளால் அதிர்ந்து நிற்கிறோம் நாம்.

புதிய கல்விமுறைமையாளர்கள் மாணவர்களை ஆசிரியர்கள் தண்டிக்கக்கூடாது என்கிறார்கள். அங்ஙனம் சொல்பவர்கள், அதன் சாத்தியப்பாடு பற்றிச் சிந்திப்பதேயில்லை. நாற்பது மாணவர்கள் இருக்கும் வகுப்பை நடத்த விடாமல், ஒரு தீய மாணவன் குழப்பம் செய்து கொண்டிருந்தால் அந்த வகுப்பின் ஆசிரியர் என்னதான் செய்வது? ஒருவனால் மற்றைய மாணவர்கள் பாதிக்கப்படும் போது அவனைத் தண்டிக்கும் உரிமைதானும் ஆசிரியருக்கு இல்லையெனின், அவர் எங்ஙனம் வகுப்பினை நடத்த முடியும்? அறிவுரைகளும் ஆலோசனைகளும் நன்மாணாக்கரைத் திருத்துமேயன்றி இயல்பிற் தீய பண்புடையோரைத் திருத்தாது. எல்லோரையும் அறிவுரைகளால் திருத்த முடியும் என்றால் சமூகத்தில் பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் என்பவற்றின் தேவையே இல்லாது போயிருக்கும். இந்த யதார்த்தம் உணர்ந்த பின்பும் ஆசிரியர் மாணவரைத் தண்டிக்கக்கூடாதென கருத்து ரைத்து வருகின்றனர் சிலர். இதுதான் இன்றைய உலகின் பொய்மை நாகரிகமாம்.

நடைமுறைச் சாத்தியமில்லாத அதி உன்னத நாகரிக நீதிகள் கேட்கச் சுகம் தருமேயன்றி நடைமுறைப் பயன் தராது என்பது நிச்சயம். உதாரணத்திற்கு அதிகதூரம் செல்லத் தேவையில்லை. மாணவனைத் தண்டிக்காதே என்கிற சட்டம், அதை மீறி தண்டித்த ஆசிரியரை சிறையில் இட்டு, தான் தண்டிக்கிறது. தண்டனை வேண்டாம் என்றால் அத்தண்டனையை ஆசிரியர் மேல் மட்டும் சுமத்துவது எங்ஙனம் நியாயமாகும்? நீதியின் முரண்பாடு குழப்பம் தருகிறது.

ஒழுக்கம் மீறியவர்களை பழையபடி அவ் ஒழுக்கத்திற்குக் கொண்டுவர தண்டம் ஒன்றே வழி என்பது நம் பண்டைத்தமிழர்தம் கொள்கை மட்டுமன்றி, அதுவே இற்றை நீதியின் கொள்கையுமாம்.


நீதிநிர்வாகம் என்பது நீதிமன்றத்தால் மட்டும் நடைமுறைப்படுத்தப்படும் ஒன்றன்று. நிர்வாகம் நடைபெறும் அனைத்து இடங்களிலும், அஃது உண்டு. அதனை நாம் மறக்கக் கூடாது. ஒரு வீடானாலும், ஓர் அலுவலகமானாலும் ஒரு பாடசாலையானாலும், அங்கெல்லாம் அவ்வவற்றிற்குரிய நீதி நிர்வாகம் உள்ளது. அந்நீதி நிர்வாகத்தை செயற்படுத்தவே, அந்தந்த நிர்வாகத்திற்கென, ஒரு தலைமைப்பீடமும் அமைக்கப்படுகிறது. வீட்டில் தந்தை, அலுவலகத்தில் தலைவர், பாடசாலையில் அதிபர் என்போரே அந்த நிர்வாகத் தலைவர்களாம். அத்தலைவர்கள் தத்தம் நிர்வாகத் தலைமை எல்லைக்குள் வரும் ஒழுக்கப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவே அமைக்கப்படுகின்றனர் அம் முறைமையன்றி, எல்லாப் பிரச்சினைகளையும் நீதிமன்றமே தீர்க்கவேண்டுமென வந்து விட்டால், நீதிமன்றத்தின் வேலைச் சுமையை நாம் நினைத்தும் பார்க்கமுடியாமல் போய்விடும்.

இவ் அடிப்படையைக் கொண்டுதான் நடந்த பிரச்சினைகளை வைத்து நாம் பாடம் கற்க வேண்டியுள்ளது. ஒரு கல்லூரியில் ஓர் ஆசிரியர் தவறிழைத்தார் என்றால், அப்பிரச்சினையை ஆராய்ந்து தண்டிக்கும் பொறுப்பு அதிபர்க்கு உரியது. எந்தப் பிரச்சினையானாலும் ஆராய்வதற்கு அவகாசம் தேவை என்பது நிச்சயம். நீதிமன்றங்கள் கூட அதனையேதான் செய்கின்றன. அங்ஙனம் இருக்க, குற்றம் பற்றிய ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கும் போது குற்றம் செய்த ஆசிரியர்களை மட்டுமன்றி குற்றத்தை ஆராயத்தலைப்படும் அதிபர்களையும் அக்குற்றத்தோடு நேரடித் தொடர்புறாத ஆசிரியர்களையும், அக்கல்லூரியின் அக்கறையாளர்களையும், குற்றவாளியாய்க் கருதுதல் கூடுமோ? கேள்வி குழப்புகிறது.

(தொடரும்...)

# கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ வசமுள்ள 500 ஏக்கர் காணி விரைவில் விடுவிக்கப்படும்

## மீள்குடியேற்ற அமைச்சர் உறுதி



(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினர் வசமுள்ள 500 ஏக்கர் காணிகள் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பகுதிக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விஜயம் செய்த புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

இதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேளவிக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் கடந்த வாரம் தெல்லிப்பழை பிரதேசத்தில் 701.3 ஏக்கர் காணிகள் அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. இந்நிலையிலேயே விரைவில் 500 ஏக்கர் காணி கிளிநொச்சியில் விடுவிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் விடுவிக்கப்படவுள்ள, காணிகளுடன் மொத்தமாக 4 ஆயிரத்து 300 ஏக்கர் காணிகள் ஒரு வருட காலத்தில் அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் சுட்டிக்காட்டினார். மேலும் வலிகாமம் வடக்கு பகுதியில் இராணுவத்தினர் வசமுள்ள ஏனைய காணிகளை விடுவிப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி வருவதாகவும் அவர் கூறினார்.

வலிகாமம் வடக்கு பகுதிகளில் பல வீதிகள் இராணுவ முகாம்களுக்குள் காணப்படுவதனால் மக்களின் காணிகளை ஊடறுத்து புதிய வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பழைய வீதிகளை இராணுவத்தினர் வசமிருந்து விடுவித்து தருமாறும் அமைச்சர் சுவாமிநாதனிடம் மக்கள் கேட்டுக்கொண்டனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சுவாமிநாதன், மக்களின் காணிகளை ஊடறுத்துச் செல்லும் வீதிகள் அமைந்துள்ள இடங்கள் தொடர்பான விபரங்களை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தாம் வழங்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

அத்துடன் இராணுவத்தினர் வசமுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் முழு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத விவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2-4)

## வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆயிரத்து 739 இலட்சம் ரூபாவில் அதிபர் விடுதிகள் அமைக்கப்படும்

வடக்கு மாகாணக் கல்வியமைச்சிற்குட்பட்ட முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்குட்பட்ட 37 பாடசாலைகளில் தலா 47 இலட்சம் ரூபா படி மொத்தம் ஆயிரத்து 739 இலட்சம் ரூபா செலவில் அதிபர் விடுதிகள் அமைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் முல்லைத்தீவு-05, கிளிநொச்சி-06, மன்னார்-04, வவுனியா-06, யாழ்ப்பாணம்-16 என மொத்தம் 37 பாடசாலைகளில் தலா 47 இலட்சம் ரூபா செலவில் பாடசாலை அதிபர்களுக்கான விடுதிகள் நடப்பாண்டில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வியமைச்சின் அலுவலகத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## வயல் காணிகளின் இடாப்புக்கள் மீள் திருத்தம்

ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களில் உள்ள விவசாயிகளின் வயல் காணிகளின் இடாப்புக்களுக்கான மீள் திருத்தப் பணி நடைபெற்று வருகின்றது என ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.சற்குணநேசன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் விவசாயிகளின் வயல் காணிகளின் இடாப்புக்களுக்கான மீள் திருத்தப்பணி நடைபெற்று வருகின்றது.

குறிப்பிட்ட சில நாட்கள் மட்டுமே இடாப்புக்களின் மீள் திருத்தப் பணிகள் நடைபெறவுள்ளதால் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களின் கீழுள்ள விவசாயிகள் தமது பகுதி கமக்கார அமைப்புக்களிடமுள்ள விண்ணப்ப படிவத்தை பெற்று தரவுகளைப் பூர்த்தி செய்து கையளிக்குமாறு விவசாயிகளுக்கு அவர் அறிவித்துள்ளார். (2-15)

# கசிப்பு தயாரிக்க பயன்படும் கோடா 16 பரல்களில் மீட்பு

## தர்மபுரம் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை



(பரந்தன்)

கிளிநொச்சி தர்மபுரம் கட்டைக்காடு பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி செய்யும் நடவடிக்கை தர்மபுரம் பொலிஸாரால் முறியடிக்கப் பட்டது.

தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து கடந்த 30 ஆம் திகதி இரவு தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம். டி.என். சத்துரங்க தலைமையில் மேற் கொள் ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது 16 பரல்களில் கசிப்பு தயாரிப்பதற்கான கோடா மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட கோடா 3 ஆயிரத்து 978 போத்தல்கள் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(2-312-15-28)

## சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய

# நடமாடும் வெதுப்பகம், உணவகங்களுக்கு நீதிமன்றினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டது

(மல்லாவி)

மாங்குளம் பொது சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட திருமுறிகண்டி, மாங்குளம் ஆகிய இடங்களில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த இரண்டு உணவகங்களுக்கும் ஒரு நடமாடும் வெதுப்பக பொருட்கள் விற்பனை செய்யும் உரிமையாளருக்கும் எதிராக மாங்குளம் பொது சுகாதார பரிசோதகரினால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வழக்கின் போது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியினால் 76 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தை செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,


மாங்குளம் நகரப் பகுதியை அண்மித்த இடத்தில் பெண்கள் அமைப்பு ஒன்றினால் இயக்கப்படும் உணவகத்தில் சுகாதார சீர்கேடுகள் காணப்பட்டதுடன் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் வகையில் பியர், மதுபானப் போத்தல்கள் என்பவற்றை குவித்து வைத்திருந்தமை உட்பட இரு குற்றச்சாட்டுக்களுக்கும் தண்டப் பணம் விதிக்கப்பட்டது.


இதற்கமைய சுகாதார சீர்கேடாக இயக்கியமைக்கு 40 ஆயிரம் ரூபாவும் பியர், மதுபானப் பேணிகளை குவித்து வைத்திருந்தமைக்கு ஆயிரம் ரூபாவும் மொத்தம் 41 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக விதிக்கப்பட்டது.

இதேவேளை திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய சுற்றுச் சூழல் பகுதியில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகத்தின் உரிமையாளர்களுக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு நீதிபதியினால் தீர்ப்பளிக்கப்பட்டது.

அத்தோடு மல்லாவியில் இருந்து மாங்குளம் பொது சுகாதார பரிசோதகர் பிரிவிற்குள் நடமாடும் சேவை மூலம் வெதுப்பகப் பொருட்களை சுகாதார சீர்கேட்டுடன் விற்பனை செய்து வந்த அதன் உரிமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற அமர்வுகள் கடந்த வாரம் மல்லாவியில் உள்ள நீதிமன்ற கட்டடத்தில் நடைபெற்ற போது மேற்படி வழக்குகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. (2-15)







மன்னார் மடுத்திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் யோசேப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை,யாழ் மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோர் இணைந்து காலை 6.15 மணியளவில் திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். திருவிழா திருப்பலியினைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனியும் அதனைத் தொடர்ந்து மடு அன்னையின் ஆசீர்வாதமும் இடம் பெற்றது. இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு மடு அன்னையின் ஆசீர்வாதத்தை பெற்றனர். (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

எனக்கு மூக்குப் போனாலும்
எதிரிக்கு சகுனப் பிழையானால் சரி.
–தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அரசியலில் வேறுபட்டாலும் தமிழர்களாக இருங்கள்

சிங்கள மக்களிடமும் சிங்கள அரசியல்வாதிகளிடமும் நாம் நிறைய கற்க வேண்டும் என்றிருந்த நிலைமை மேலும் விரிவடைந்து இப்போது சிங்கள மக்களுடன் சேர்த்து முஸ்லிம் மக்களிடமும் முஸ்லிம் அரசியல் தலைவர்களிடமும் இருந்து நிறைய கற்ற வேண்டும் என்ற உண்மையை உணர்த்தி நிற்கிறது.

சிங்கள மக்கள் தாம் சார்ந்த பௌத்த மதத்தை போற்றுகின்ற உயர்ந்த பண்பு முதல் பௌத்த பிக்குகளை தமது ஆசிரியர்களை, பெற்றோர்களை, பெரியவர்களை மதிக்கின்ற பண்புவரை அவர்களின் சிந்தனை வெற்றிக்கு உதவுகின்றது என்ற உண்மையை ஏற்றுத்தானாக வேண்டும்.

இராணுவ வீரர்களாக இருப்பவர்களிடமும் இறைபக்தி மிஞ்சி நிற்பதை காண முடியும்.

இதேபோன்று அரசியலிலும் அவர்களிடம் இனம் தெரியாத ஒற்றுமை இருப்பதை நாம் நிராகரித்துவிட முடியாது.

போருக்குப் பின்பு மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி நாட்டுக்கு ஆபத்தாகின்றது; குடும்ப ஆட்சிக்கு வழி கோலுகின்றது என்று தெரிந்தவுடன்,

ஒருபோதும் ஒற்றுமைப் பட முடியாது என்றிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றுபட்டன.

நாட்டைப் பாதுகாத்தல் என்பது ஒற்றுமைப் பாட்டின் கோஷமாக இருந்தது.

அதேநேரம் மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து இறக்கினாலும் தமிழர்களுக்கு அவர் செய்த போர்க் கொடுமை தொடர்பில் மகிந்தவுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க சமகாலத்து சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக இல்லை.

போர்க்குற்றம் நடைபெறவில்லை, சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு இடமில்லை, விசாரணைகளின் போது சர்வதேச நீதிபதிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ற முடிவில் மகிந்தவை வெளியேற்றிய ஆட்சியாளர்கள் மிகவும் இறுக்கமாக இருப்பது இங்கு நோக்குதற்குரியது.

ஆக, மகிந்தவின் ஆட்சியை முடிவுறுத்த வேண்டும் என்று நினைத்தாலும் தமிழர்கள் விடயத்தில் மகிந்த ராஜபக்ஷவை குற்றவாளியாகக் காண்பதற்கு அனுமதிக்க முடியாது என்பதுதான் சிங்கள அரசியல்வாதிகளின் ஒற்றுமைக்கான உதாரணமாகும்.

இதேபோல் இலங்கை வாழ் முஸ்லிம் சகோதரர்களும் அவர்கள் சார்ந்த அரசியல் தலைமைகளும் தமது இனம், சமய மார்க்கம் என்பதில் மிகவும் இறுக்கமாகவும் அவதானமாகவும் இருக்கின்றனர்.

ஒவ்வொரு முஸ்லிம் குடும்பங்களும் அதிக பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் எங்கள் இனம் இந்த நாட்டில் தனது இருப்பை நிலைநிறுத்த முடியும் என்பது தொடக்கம்,

கிழக்கு மாகாணத்தை முஸ்லிம் மக்கள் மாகாணமாக ஆக்குதல், அரசுடன் சேர்ந்து அமைச்சுப் பதவிகளை பெற்றே முஸ்லிம் மக்களின் நலன்களுக்காகப் பாடுபடுவது, இராஜதந்திர ரீதியில் தமிழர்களுக்கு கிடைப்பதை தடுத்து நிறுத்துவது,

அரச தமிழ் ஊடகங்களில் இணைந்து தமது இனம், சமய மார்க்கம் என்பன தொடர்பில் நிறைந்த பிரசாரங்களைச் செய்வது என்பதுவரை முஸ்லிம் மக்களும் அவர் தம் அரசியல்வாதிகளும் மிகவும் ஒற்றுமையுடனும் நிதானத்துடனும் செயற்படுகின்றனர்.

மாறாக இலங்கையில் தமிழினம் தான் அன்று முதல் இன்றுவரை ஆளை ஆள் கடித்துக் குதறி, கிடைக்க வேண்டியதையும் கிடைக்காமல் செய்து ஒற்றுமை இன்றி எல்லாவற்றையும் குழப்பி நாசம் செய்கின்றது.

இதற்கு வீட்டுத்திட்டம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கு மாகாணசபையை குழப்பும் சதிவேலை வரை பல உதாரணங்களை காட்ட முடியும்.

கடவுளே! எப்போதுதான் நாம் திருந்துவோமோ அறியோம் பராபரமே.

## நூல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

செ.கதிர்காமநாதன் படைப்புக்கள் நூல் அறிமுக நிகழ்வு கொக்குவில் சந்தியிலுள்ள தேசிய இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதில் தலைமையுரையினை க.தணிகாசலமும் , அறிமுக உரையினை ஐ.சாந்தனும் கருத்துரைகளினை கரவெட்டி பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, எம்.இராசநாயகம், த.அஜந்தகுமாரும் வழங்கவுள்ளனர். (இ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ் பிரதேசத்தில் மாதகல், ஜம்புகோளப்பட்டினம், குசுமாந்துறை, காட்டுப்புலம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில கோவில் குளம் சிவன் கோவிலடி பிரதேசம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில மணல் குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (இ-9)

# தண்ணீரில் மிதந்த சுவிஸ் 150 ஆண்டுகளுக்குப்பின் கொட்டித் தீர்த்த கனமழை

சுவிட்சர்லாந்தின் பாசெல் மாகாணத்தில் கடந்த ஆறு மாதத்தில் மட்டும் கொட்டித் தீர்த்த மழையின் அளவு இரு மடங்காக அதிகரித்துள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆறு மாதத்தில் மட்டும் பாசெல் மாகாணத்தில் பெய்த மழையின் அளவு 732 மில்லி மீற்றர் என தெரிவித்துள்ள சுவிஸ் வானிலை ஆய்வு மையம், இது கடந்த ஆண்டை விடவும் இரு மடங்கு என தெரிவித்துள்ளது.

மட்டுமின்றி 1864ஆம் ஆண்டிற்கு பின்னர் வரலாறு காணாத வகையில் மழை கொட்டித் தீர்த்துள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த 2001ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரையான மாதங்களில் பதிவான மழையின் அளவு 639 மில்லி மீற்றர் என தெரிவித்துள்ள அதிகாரிகள், அது இந்த ஆண்டு முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

பாசெல் மாகாணம் அளவுக்கும் அதிகமான மழையால் அவதிக்கு உள்ளாகையில், சுவிட்சர்லாந்தின் பெரும்பாலான மாகாணங்கள் கடந்த 6 மாதங்களாக போதிய அளவு மழை இன்றி தவித்துள்ளன.

இதில் சூரிச், Lucerne மற்றும் St Gallen ஆகிய மாகாணங்கள் மட்டும் சராசரி அளவை விடவும் கூடுதலாக மழையை பெற்றுள்ளது.

மழை காரணமாக மே மற்றும் ஜூன் மாதங்களில் சுவிட்சர்லாந்தின் பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்படுவதும், சாலைகள் மூடப்படுவதும், கிராமங்களில் பெருவெள்ளம் ஏற்படுவதும், பனிப்பொழிவு என ஒட்டுமொத்தமாக மக்கள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர்.

இருப்பினும் ஜூன் இறுதி முதல் அதிக வெப்பமுடன் வரண்ட வானிலை தென்படும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இந்துபோர்ட் இராசரத்தினத்தின் 132 ஆவது பிறந்த நாள் விழா

இந்துபோர்ட் சு.இராசரத்தினத்தின் 132ஆவது பிறந்தநாள் விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை 4ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.திரு நெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க ஆராதனை மண்டபத்தில் கழகத் தலைவர் வி. சிவலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் நா.சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கி பிராந்திய முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ)

## பயிற்சி பட்டறை

(தும்பளை)

காண்பியற் கலைகள், சூழலியல் தொடர்பிலான பயிற்சிப்பட்டறையானது இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை பருத்தித்துறை, இல. 117, வி.எம்.வீதியில் அமைந்துள்ள ஞானாலயத்தில் இடம்பெறும். இதனை விக்கி பிறீமொன்ற் நிகழ்த்தவுள்ளார். (இ-19)

# புனித தோமாவைப் போல் இயேசுவிடம் 'நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள் என சரணடைவோம்'

இன்று கத்தோலிக்க திருச்சபையில் புனித தோமையார் திருவிழா கொண்டாடப்படுகிறது. இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒருவரான இவரை பைபிளில் நற்செய்தி நூல்கள் தோமா என்கிறது. கி.பி. 52ல் இந்தியாவிற்கு வந்த இவர் கி.பி.72ல் தன்கையால் தானே செய்த கற்சிலுவையின் முன்ஒ ஜெபம் செய்து கொண்டிருந்த போது, ஈட்டியால் குத்தப்பட்டு மரித்தார் என்கிறது வரலாறு.

## பரமபிதா காட்டிய பாதை

இந்தப் புனிதரிடமிருந்து நாம் பல பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்: இலாசர் நோயுற்றிருந்தபோது இயேசு யூதேயாவுக்குச் செல்ல முயன்றார். அங்கிருந்த யூதர்கள் அவரைக் கல்லெறிந்த கொல்ல முயன்றதை நினைவூட்டி அங்கு செல்ல வேண்டாம் என்று சீடர்கள் கருத்து தெரிவித்தார்கள். ஆனால் தோமையார் மட்டும் தமக்கு நெருக்கமான தோழமை கொண்ட சீடரிடம் 'நாமும செல்வோம். அவரோடு இறப்போம்" என்று துணிவுடன் கூறினார். அன்றைய அந்தத் துணிவுடன், ஆண்டவர் இயேசுவுக்காக இறக்கவும் முன்வந்தார். தோமா இயேசுவிடம் முன்னரை விட மேலும் நம்பிக்கை கொள்ளாவிடடால், வாருங்கள்நாமும்செல்வோம். அவரோடு இறப்போம்' என்று நிச்சயம் சொல்லியிருக்கமாட்டார்.


இயேசு இறந்தபின் ஆட்சியாளருக்கு அஞ்சி அடைபட்ட கதவினுள் திருதூதர்கள் பயந்திருந்த போது தோமா வெளியில் சென்றிருக்கிறார். இச் செயல் மற்ற திருத் தூதர்களைவிட இவர் துணிவு மிக்கவர் என்பதற்கு இன்னுமொரு எடுத்துக்காட்டாகும்.

'அறிவியல் இல்லாத சமயம் முடமானது சமயமற்ற அறிவியலும் முடமானது" இந்த உண்மைக்கு அன்றே வித் திட்டவர் புனிதர் தோமா.

விசுவாசத்தின் அடித தளம் அறிவியல். எல்லா மறை உண்மைகளுக்கும் அறிவியல் அடித்தளம் உண்டு என்பதை அன்றே நம் புனிதர் தெளிவுபடுத்தியுள்ளார். அறிவியல அடித்தளத்தில் உருவாகும் மறை உண்மைகள் இறையியலில் வளர்ச்சி பெற்று, அறிவெல்லாம் கடந்த விசுவாசத்தில் முழுமையடைகின்றது. இயேசுவின் உயிர்ப்பை தோமையார் முதலில் நம்ப மறுத்தார். 'அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையையிட்டாலன்றி நான் நம்பமாட்டேன" என்ற அறிவியல் ஆய்வு மனப்பான்மை இந்த உண்மையைத்தானே உணர்த்துகிறது. உயிர்த்த இயேசு நேரில் தோன்றி ஐயம் தவிர்த்து, நம்பிக்கை கொள்ளச் சொன்னபோது, இயேசுவின் இந்த வார்த்தைகளே அவருக்குப்போதுமாயிற்று. தோமா இயேசுவை அணுகி அவரைத தொட்டுப் பாரக்கவில்லை. அதற்கு முன்னரே அவர் இயேசுவின் கால்களில் விழுந்து விட்டார். அவர் இயேசுவைப் பார்த்து 'நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்று அறிக்கையிட்டார். நற்செய்தி நூல்களில் நாம் பார்க்கும் முதல் விசுவாச அறிக்கை இதுதான். இந்த விசுவாசம் அறிவியலில் தொடங்கி, இறையியலில் வளர்ந்து, விசுவாசத்தில் உச்ச நிலை அடையும் உன்னதமான விசுவாசமாகும். கத்தோலிக்கத் திருச்சபையின் எல்லா விசுவாச உண்மைகளுக்கும் அறிவியலே தெர்க்கம் அடித்தளம் என்ற உண்மைக்குச் செயல் வடிவம் கொடுத்தவர் புனித தோமையார்.

இயேசுவிடம், 'ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்? என்று கேட்பதன் மூலம் எந்தவொரு காரியத்தையும் முழுமையாகத் தெரிந்துகொள்ளவும் அதற்கான ஆதாரங்களை அறிந்து கொளளவும் தோமா விரும்பியதையும் பைபிள் சுட்டிக் காட்டுகிறது.

விசுவாசம் அந்தரத்தில தொங்குவதல்ல, வானத்திலிருந்து விழுந்ததல்ல, கட்டுக்கதையல்ல. கற்பனையல்ல மூட நம்பிக்கையல்ல, முரட்டு வாதமும் அல்ல. இத தகைய அறிவு பூர்வமான விசுவாசம் வாழ்வில் கலக்கும் போதுதான் வாழ்வு உயிரோட்டமாகிறது. அறிவியல் ஆட்கொள்ளும் இன்றைய மனித வாழ்வு இறை மயமாகிறது, தெய்வீகமாகிறது.



ம.பிரான்சிஸ்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

தோமாவுக்குத் தோன்றிய ஐயம் நமக்கும் தோன்றலாம். ஆனால் ஐயத்தைத் தவிர்த்து நம்பிக்கை கொள்ள வேண்டும் என்னும் இயேசுவின் அழைப்பு ஒலித்துக் கொணடே இருக்கிறது.

நாமும் இயேசுவை நம் மீட்பராக ஏற்று, அவருடைய வழியில் நடந்துசென்றிட அழைக்கப்படுகிறோம். தோமாவைப் போல் இயேசுவின் பால் 'நீரே என் ஆண்டவர். நீரே என் கடவுள்." என சரணாகதியடைந்து உடனிருக்கும் போதுஉண்மையிலேயேநாமும் 'பேறுபெற் றோராவோம்".

# வல்லவன் உதைபந்தாட்ட தொடர் சென்.மேரிஸ் வி.கழகம் வெற்றி







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 26.06.2016 அன்று நடைபெற்ற போட்டியானது நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க எதிர்த்து அல்வாய் மனோகரா வி.க மோதியது. இப் போட்டியில் 2:0 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென் மேரிஸ் வி.க வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்மேரிஸ் அமிர்றன் தெரிவு செய்யப்பட்டார், அவருக்கான காசோலையினை ரவீந்திரன் வழங்க பதக்கத்தினை பருத்தித்துறை உதைபந்தாட்ட நடுவர் சங்க உதைபந்தாட்ட நடுவர் கமல் வழங்கி கௌரவித்தனர். (கு)

## நீர்வேலி ஐக்கியத்தை வீழ்த்தியது கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் 2016 ஆம் ஆண்டுக்கான மென்பந்து சுற்றுப்போட்டியில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது கோல்ட்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அண்மையில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கோல்ட்ஸ்ரார் அணி வினோ, கஜன் ஆகியோரின் சிறப்பான ஆரம்பமும் தெனோஜனின் அட்டகாசமான துடுப்பாட்டத்தின் உதவியுடனும் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்து பரிமாற்றத்தில் 102 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு ஆடிய நீர்வேலி ஐக்கிய அணியால் 10 பந்து பரிமாற்றத்தில் அனைத்து இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இறுதியில் கோல்ட்ஸ்ரார் அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நீர்வேலி ஐக்கியத்தை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

முதல் இரண்டு போட்டிகளில் கோல்ட்ஸ்ரார் அணி சில்வர்ஸ்ரார் மற்றும் இடைக்காடு விளையாட்டுக்க ழகங்களை வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

## முல்லை. மகா வித்தியை வென்றது புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இரணைப்பாலை றோ.க மகா வித்தியாலயத்தின் பாடசாலையின் வைர விழாவினை முன்னிட்டு முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 19 வயது பிரிவினருக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் முல்லைத்தீவு ம.வியினை வெற்றி கொண்டுள்ளது. (கு)

## ஞானமுருகன் வெற்றி

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 25.06.2016 நடைபெற்ற போட்டியில் ஞானமுருகன் வி.கழகம் வெற்றி பெற்றது.

உரும்பிராய் திருக்குமரன் அணியுடன் நடைபெற்ற போட்டியில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக ஜெகன்2 ,சுமித்,வகி ஆகியோர் தலா ஒரு கோலினை போட்டனர். (கு)

## சென்மேரிஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி

எவறெஸ்ட் வி.க நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வரிசையில் 27.06.2016 (திங்கள்) நடைபெற்ற போட்டியில் புத்தூர் வீனஸ் வி.கழகத்தை 0:4 என்ற ரீதியில் கிளிநொச்சி இரணைமாநகர் சென்மேரிஸ் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (கு)

## இன்றைய போட்டிகள்

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் அச்சுவேலி முரசொலி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி கோல்ட்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று இரவு 7.30 மணிக்கு திக்கம் மைதானத்தில் விளையாட்டுக்கழக தலைவர் தெ.ஜெயக்காந் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சி.சுகிர்தனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகமும் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ரேவடி விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் றெயின்போ விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக் கழகமும் மோத வுள்ளது.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

JPL வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகமும் காலை 11 மணிக்கு நடைபெறும் போட்டியில் K.C.C.C விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சிறிகாமாட்சி விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் போட்டியில் வீனஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

அரியாலை சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தப்படுகின்ற அணிக்கு 11 பேர் கொண்ட சரஸ்வதியின் யாழின் கில்லாடி யார்? உதைபந்தாட்ட தொடரின் காலிறுதிப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் பாடும் மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வீனஸ் விளையாட்டுக் கழகமும் றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ்பல்கலைக்கழக அணியும் ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென் லூட்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

இதேவேளை மேற்படி சன சமூக நிலையத்தின் சரஸ்வதியின் யாழின் கிரிக்கெட் இளவரசன் யார்? கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 3 மணியளவில் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சிற்றிஸ் போட்ஸ் விளையாட்டுக்கழகமும் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானம்ஸ் விளையாட்டுக்கழகமும் மோத வுள்ளது. (கு)

## ரேவடி அணியை வீழ்த்தி றெயின்போ அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி



அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது-20 கிரிக்கெட் தொடரில் ரேவடியை எதிர்த்து றெயின்போ அணி மோதியது.

ரேவடி 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 75 ஓட்டங்களை பெற்றது. ரேவடி சார்பில் ரஞ்சன் 32 ஓட்டங்கள் றெயின்போ சார்பில் ருதேஷா 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய றெயின்போ அணி 13 ஓவர்களில் 4விக்கெட் இழப்புக்கு 76 ஓட்டங்களை பெற்றது. றெயின்போ சார்பில் ருதேஷா 27 ஓட்டங்கள் ரேவடி சார்பில் ரஞ்சன் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். றெயின்போ அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. (கு)

## குமாரபுரம்...

வத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 26 பேர் இராணுவதினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 39 பேர் காயமடைந்தனர்.

மது போதையில் கிராமத்திற்குள் நுழைந்த இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்கள் அந்த கிராமத்தை சேர்ந்த தமிழர்களாவார்.

இந்த படுகொலை வழக்கில் தெகியத்த இராணுவ முகாமில் சேவையிலிருந்த 8 இராணுவ வீரர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு மூதூர் மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் குறித்த 8 பேரும், சாட்சிகளினால் அடையாளம் காணப்பட்ட நிலையில் திருகோணமலை மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

அன்றைய யுத்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிரிகளின் வேண்டுகோளின் பேரில் பாதுகாப்பு கருதி சட்ட மா அதிபதியின் ஆலோசனையின் பேரில் இந்த வழக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் கண்டவர்கள், சிவில் சமூகத்தினர் உட்பட 121 பேர் சாட்சிகளாக மூதூர் பொலிஸாரால் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜூரிகள் சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்று வரும் இந்த விசாரணைக்கு குறித்த சாட்சிகளில் 20 பேர் அழைக்கப்பட்டுள்ள போதிலும் 16 பேர் மட்டுமே சமுகமளித்திருந்தனர். ஏனைய நான்கு பேரும் மரணமடைந்து விட்டதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு விசாரணையில், பெண்கள் உட்பட 14 பேர் சாட்சியமளித்துள்ளனர்

எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ள எட்டு இராணுவ வீரர்களில் இருவர் மரணமடைந்துள்ள நிலையில் தற்போது அனுராதபுரம் நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கு விசாரணை ஏனைய ஆறு பேருக்கு எதிராகவே நடைபெற்று வருகின்றது.

ஏற்கெனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த ஆறு இராணுவ வீரர்களும். வழக்கு விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வழக்கு விசாரணை நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (செ-11)

## 21 ஆயிரம்...

காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோய் வியாபித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விஷேடமாக களுத்துறை, குருநாகல் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்திருப்பதாகவும், அங்கு வாரத்திற்கு சுமார் ஆயிரத்து 500 நோயாளர்கள் பதிவாவதாகவும் சுகாதார அமைச்சு கூறுகின்றது. (செ-11)

## வாகனம் மோதி...

இடம்பெற்றது.

இதில் உடையார் கட்டுப்பகுதியைச் சேர்ந்த காந்தரூபன் (வயது 3) என்ற பாலகனே உயிரிழந்துள்ளான்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முன் பள்ளியிலியிருந்து ஆட்டோவில் வீடு வந்து சேர்ந்த சிறுவன் ஆட்டோவில் தவற விடப்பட்டபொருளொன்றை எடுத்து வருவதற்காக மீண்டும் ஆட்டோவை நோக்கி வீதிக்கு சென்றவேளை அவ் வழியாக வேகமாக பயணித்துக் கொண்டிருந்த பிறிதொரு வாகனம் பிரஸ்தாப பாலகனை மோதித்தள்ளியது. இதன்போது பாலகன் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழக்க நேரிட்டது.

இச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொலிஸார் விரைந்து வந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.(செ-2,281)

## பொறுமை...

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் வெளியிட்டிருக்கும் கருத்து மாபெரும் மத நிபந்தனை என்பதை எவரும் மறுக்க முடியாது. அது தொடர்பில் உரிய தரப்பிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன் சட்ட நடவடிக்கை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆகவே இதுபோன்ற சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களாகிய நாம் வெகுண்டெழுந்து ஆத்திரமடைந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடக்கூடாது. அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னா வழிகாட்டியுள்ள அடிப்படையிலும் ஹுதைபிய்யாவின் படிப்பினைகளை முன்நிறுத்தியும் பொறுமையுடனும் நிதானத்துடனும் நிலைமைகளை கையாள வேண்டும். கடந்த காலங்களில் நாம் எதிர் நோக்கிய பிரச்சினைகளின் போது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் வழிகாட்டலின் கீழ் பொறுமை கடைப்பிடிக்கப்பட்டதையும் அதன பலாபலன்களை சமூகம் கண்டுகொண்டதையும் அறிவோம். அவ்வாறே தற்போதைய நிலைமையையும் அணுக வேண்டும்.

மேலும் சந்தர்ப்பம் எதிர்பார்த்திருக்கும் குழப்பவாதிகளுக்கு எமது எதிர்ப்பு நடவடிக்கைகள் சில வேளைகளில் துணையாக அமைந்து விடும். எனவே அதற்கு நாம் ஒருபோதும் வழியமைக்கக்கூடாது.

ஆகவே நாம் பொறுமையோடும் அவதானத்தோடும் இருந்துகொள்ள வேண்டும் எனவும அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

# முஸ்லிம்களை நிந்திக்கும் ஞானசார தேரர்; நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் நிந்திக்கும் வகையில் தெரிவித்த கருத்து பலத்த கண்டனத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார். இந்த விடயம் சம்பந்தமாக மேலும் தெரியவருவ தாவது, பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் கடந்த யூன் மாதம் 21ஆம் திகதி மகியங்கனையில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் விதத்தில் உரையாற்றியிருந்தார். அவ்வுரை குறித்த பிரதேசத்தில் அச்ச நிலையினைத் தோற்றுவித்திருந்தது.

ஆகவே அவ்விவகாரம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு முஸ்லிம் கவுன்சில் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தது. அக்கடிதம் தொடர்பில் ஞானசார தேரர் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

முஸ்லிம் கவுன்சில் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் பிரதியொன்றை நபி(ஸல்) அவர்களூடாக அல்லாஹ்வுக்கு அனுப்புமாறு தெரிவித்திருந்தார்.

அவர் இவ்வாறு இஸ்லாத்தை நிந்திக்கும் வகையில் வெளியிட்ட கருத்துகள் முஸ்லிம் சமூகம் உட்பட பல்வேறுபட்ட தரப்பிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. ஞானசார தேரர் முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்திற்கும் எதிராக தொடர்ந்து தெரிவிக்கும் மத நிந்தனைக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர்களான ரிஷாட் பதியுதீன், ரவூப் ஹக்கீம், எம்.எச்.ஏ.ஹலீம் ஆகியோர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

மேலும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் கவுன்சில் உட்பட பொது அமைப்புகளும் ஜனாதிபதிக்கு கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக ஆர்.ஆர்.டி. அமைப்பு பொலிஸ் மா அதிபரிடம் மூன்று முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளது. அம்மூன்று முறைப்பாடுகளும் பொலிஸ் மா அதிபரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் விரைவில் ஞானசார தேரர் விசாரணைக்குட்படுத்தப்படுவார் எனவும் உறுதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பொது பல சேனா அமைப்பின் பொதுச செயலாளர் கலகொடஅத்தே ஞானசாரர் வெளியிட்டுள்ள மத நிந்தனை கருத்துக்கள், அதனைந்தொடர்ந்து எழுந்துள்ள அதிர்வலைகள் தொடர்பில் தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோதே, அவ்விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (செ-11)

# கார்ப் பந்தய வீரர் கௌரவிப்பு விழா இன்று

கார்ப்பந்தய வீரரான க.பரமேஸ்வரனை கௌரவிக்கும் விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலத்தில் சனசமூக நிலைய ஒன்றியத் தலைவர் செ.மயூரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

கார்ப்பந்தய வீரரான க.பரமேஸ்வரன் இலங்கையில் நடைபெற்ற கார்ப்பந்தய போட்டிகளில் 110 தடவைகள் பங்கு பற்றி 63 தடைவைகள் முதலாம் இடத்தை வெற்றி கொண் டுள்ளார்.

இவர் தன்னுடைய கார்ப்பந்தய வெற்றிகளில் மூன்று முறை தேசிய விருதுகளையும் பெற்றுள்ளார்.

இந்நிலையில் அவருக்கான இன்றைய கௌரவிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினரான வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ. செல்வராணி, கௌரவ விருந்தினர்களாக பண்டார வளை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், யா/முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் பேரின்பநாதன், ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரை, ஊர்காவற்றுறை பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் சிவசுப்பிரமணியம், யா/நாவற்குழி மகா வித்தியால்ய அதிபர் சி.பவளகுமாரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்வுள்ளனர். (செ-11)

# பொருளாதார மையம் தொடர்பில் த.தே.கூ தீர்க்கமான முடிவு எடுக்கும்

## அமைச்சர் மனோ நம்பிக்கை

(கொழும்பு)

கொழும்பில் இன்று கூடவுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் மத்திய குழுக்கூட்டத்தில் வடக்கு பொருளாதார மத்திய நிலையம் தொடர்பான தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் மனோகணேசன் நம்பிக்கை தெரிவித்தார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

பொருளாதார மத்திய நிலையத்துக்காக மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட நிதியினை இந்த வருடத்திற்குள் முதலிட வேண்டும். இல்லாது விட்டால் மத்திய நிலையத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி மத்திய அரசிடமே மீளக் கையளிக்கப்படும். அதுமட்டுமன்றி இந்த பொருளாதார மத்திய நிலையம் எந்த பிரதேசத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற வாக்குவாதத்தை விடுத்து உடனடியாக மத்திய நிலையம் அமைப்பது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு முடிவெடுப்பது நல்லது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் பொருளாதார மத்திய நிலையம் வடக்கை விட்டு செல்வதற்கு நாம் இடமளிக்கக் கூடாது என்பதில் எமது கட்சியும் அமைச்சர் திகாம்பரமும் உறுதியாக உள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

## மத்திய...

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோருக்கிடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஜனாதிபதியினால் இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியினரது பெயர் தெரிவு செய்யப்பட்டது.

அத்துடன் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமிக்கும் ஜனாதிபதி ஜனாதிபதிக்குமிடையிலான ஒரு கலந்துரையாடலும் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

சர்வதேச ரீதியிலான பொருளாதார நிபுணர் ஒருவரான கலாநிதி குமாரசுவாமி, 1973ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியில் இணைந்ததுடன் பொருளாதார ஆராய்ச்சி, புள்ளிவிபரவியல் மற்றும் வங்கி மேற்பார்வைப் பிரிவு உத்தியோகத்தராக 1989 வரை பணி புரிந்துள்ளார்.

1981 முதல் 1989 வரையான காலப் பகுதியில் நிதி, கொள்கைத் திட்டமிடல் அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்ட கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி 1990 முதல் 2008 வரை பிரித்தானியாவில் அமைந்துள்ள பொதுநலவாய நாடுகளின் பொருளாதார விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலகத்தின் பணிப்பாளராகவும் பொதுச் செயலாளரது அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். பின்னர் மீண்டும் பொதுநலவாய நாடுகளின் பொருளாதார விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலகத்தில் சேவையில் இணைந்துகொண்ட அவர் சமூக எதிரீட்டு நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் இடைக்கால பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரி மற்றும் பிரித்தானியாவின் ஹெரோ கல்லூரி ஆகியவற்றில் கல்விகற்ற கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் தனது இளமாணிப் பட்டத்தைப் பெற்று சஸெக்ஸ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்ற நிதி முகாமைத்துவம் தொடர்பாக சிறந்த அனுபவமுடைய ஒரு அறிவாளி ஆவார்.

இந் நிலையில் புதிய ஆளுநர் நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவிருக்கின்றார்.

இந் நியமனத்தின் மூலம் மத்திய வங்கி ஆளுநர் தொடர்பாக இலங்கை அரசியலில் நீடித்து வந்த சர்ச்சை முடிவுக்கு வந்துள்ளது.

ஏற்கெனவே மத்திய வங்கி ஆளுநராக பதவி வகித்த அர்ஜுன் மகேந்திரனின் பதவிக் காலம் கடந்த 30ஆம் திகதியுடன் முடிவடைந்ததையடுத்தே இப்புதிய நியமனம் இடம்பெற்றுள்ளது.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் மத்திய வங்கி ஆளுநராக பதவி வகித்த அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூர் பிரஜை ஆவார். இதன் காரணமாக இந் நியமனத்திற்கு பொது எதிர்க்கட்சிகள் தமது எதிர்ப்பை தொடர்ந்தும் வெளியிட்டு வந்த அதே வேளை பதவி நீடிப்பு வழங்கக் கூடாது என்றும் வலியுறுத்தி வந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(செ-11)

## த.தே.கூட்டமைப்பு...

முகமாகவே இந்தக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன் அழைப்பு விடுத்துள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மத்தியில் காணப்பட்டு வரும பல்வேறு கருத்து முரண்பாடுகள் தொடர்பி லும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு சுமுக மான முறையில் தீர்மானங்கள் எடுக்கப்ப டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் சம்பந்தன் தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் வடமா காண முதலமைச்சர் விக்னேஸ்வரன், கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற் றும் வட மாகாண சபை அமைச்சர்கள் உள் ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-11)

## கிளிநொச்சி நகர...

பகுதிகளும், பொருளாதார முக்கியத்துவம் மிக்க பகுதிகளும் இராணுவத்தின் வசம் இருப்பதால் போரால் பாதிக்கப்பட்ட கிளிநொ ச்சி நகரத்தின் மேம்பாடு பாதிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கோத்தபாய ராஜபக்ஷவின உத்தரவின் பெயரில் அமைக்கப்பட்ட இரா ணுவ நினைவுத் தூபி மற்றும் அதன் முன் னால் அமைக்கப்படும் கிறீன் பார்க் முதலியவை சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை நகர அபிவிருத்தியின் போது மாவட்டத்தின் தனித்தன்மை, வரலாறு, அடையாளம் என்பவற்றை பாதுகாக்க வேண்டும் என்றும் கிளிநொச்சி மக்களு க்கான நகரமாக கிளிநொச்சி அமையப்பெற வேண்டும் என்றும் சிறிதரன் தெரிவித்துள் ளார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வட மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர் கள், பிரதேச சபை செயலாளர்கள், திணைக் கள தலைவர்கள்,மாவட்ட மக்கள் பிரதிநிதி கள் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலரும் கல ந்து கொண்டு தமது கருத்துக்களை முன் வைத்தனர்.

இதன்போது கிளிநொச்சி நகர அபிவிருத் தித் திட்டம் தொடர்பான முன்வரைபு ஒன்று காணொலிப் படுத்தப்பட்டு அது குறித்து ஆரா யப்பட்டதுடன் நேற்றைய கூட்டத்தில் தெரி விக்கப்பட்ட கருத்துக்கள், ஆலோசனைகள் என்பனவும் புதிய முன் வரைபுக்காக குறிப் பெடுக்கப்பட்டுள்ளன. (செ-11)

## நான் அனைவரது...

நாட்டு ஜனாதிபதிப் பதவிக்கு நியமிக்கப்பட்ட தாகவும் நினைவுகூர்ந்த ஜனாதிபதி, தான் அனை வரது குரல்களுக்கும் செவிசாய்த்து நாட்டின் தேவையின் அடிப்படையிலேயே தீர்மானம் மேற்கொள்வதாக குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல் தாமரைத் தடாக அரங் கில் இடம்பெற்ற சர்வதேச கூட்டுறவு தின வைபவத்தில் உரையாற்றிய போதே, ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இந் நாட்டின் கூட்டுறவு துறையில் மறு மலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக புதியதொரு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நட வடிக்கை மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

அவ்வாறே கூட்டுறவு சங்கங்களுக்கு 2017 - 2018 ஆம் ஆண்டுகளுக்காக சுங்கத்தீர் வைகளற்ற லொறி வண்டிகளை வழங்குவ தற்கான பிரேரணையினை அமைச்சரவை யில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வற் வரி முறைமை காரணமாக மக்களின அன்றாட வாழ்வில் உருவாகியுள்ள பிரச்சி னைகளுக்குத் தீர்வு வழங்கி தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு தற்போது பிரதமர் மற்றும் அமைச்சரவையுடன் இணை ந்து தெளிவான ஒரு தீர்மானத்தினை மேற் கொள்வதற்கு தான் தயாராகவுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

அரசு என்ற ரீதியில் ஒருபோதும் பொது மக்கள் மீது சுமையினை சுமத்துவதற்கு தான் தயாரில்லை எனத்தெரிவித்த ஜனாதிபதி, இன்று தேசிய பொருளாதாரம் எதிர்நோக்கி யுள்ள முக்கியமான பிரச்சினையான கடன் சுமையை ஈடுசெய்தல், அந்நிய செலாவணி ஒதுக்கினை பலப்படுத்துதல் மற்றும் சென்மதி ஏற்றுமதி வர்த்தக நிலுவையினைக் குறைத் தல் ஆகிய பிரச்சினைகளுக்கு முறையான திட்டமிடலின் ஊடாக தீர்வு காணப்படும் எனத தெரிவித்தார்.

நாட்டை அபிவிருத்தி செய்ததாக யார் எதைக் கூறிய போதும் கடந்த பல ஆண்டு களாக எமது உள்நாட்டு கைத்தொழில்துறை பாரிய பின்னடைவைச் சந்திக்க வேண்டி நேரிட்டதெனக் கூறிய ஜனாதிபதி, தேசிய பொருளாதாரத்திற்கு வலுசேர்த்து நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்பாகும் எனத் தெரிவித்தார்.

சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவரிடையே இடம்பெற்ற சித்திரப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான சின்னங்களை ஜனாதிப்தி வழங்கி வைத்தார்.

ஜனாதிபதிக்கும் இதன்போது விசேட நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

கைத்தொழில் வாணிபத்துறை அமைச் சர் ரிஷாட் பதியுதீன், இராஜாங்க அமைச்சர் சம்பிக்க பிரேமதாச, மத்திய மாகாண முத லமைச்சர் சரத் எக்கநாயக்க, கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சின் செயலாளர் ரீ.எம்.கே.பீ. தென்னகோன், இலங்கை தேசிய கூட்டுறவு சபையின் தலைவர் லலித் ஏ.பீரிஸ் ஆகியோர் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (செ-11)

## கடை உரிமையா...

க்குச் சென்றுள்ளனர்.

மதுபோதையில் சென்ற குறித்த இருவரும், 100 ரூபாய் காசினைக் கொடுத்து விட்டு 4 சிகரெட் தருமாறு கோரியுள்ளனர். அதற்கு கடை உரிமையாளர் 2 சிகரெட்டுகள் தான் தர முடியும் என்றும் ஒரு சிகரெட்டின் விலை 40 ரூபாய் என்றும் கூறியுள்ளார்.

அதற்கு ஏன் 40 ரூபாய்? என்றும் 30 ரூபாய் தானே சிகரெட்! என்றும் கேட்டு தகரா ற்றில் ஈடுபட்டுள்ளனர். தகராறு பெரிதாகவும், இளைஞரை தாம் கையில் வைத்திருந்த தலைக்கவசத்தினால் தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த இரு பொலிஸார் மீது நடவடி க்கை மேற்கொள்ளப்படுமென்று யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்து ள்ளார். (செ-4)

## ஜே.வி.பிக்கு...

னர், மக்கள் விடுதலை முன்னணிக்கு (ஜே.வி.பி) அழைப்பு விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்படும் இந்த புதிய அரசியல் அமைப்பின் தொடக்க பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான கட்சிகள், அணிகள், நபர்கள் என அனைவ ரும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்த புதிய அரசியல் அமைப்பு குறித்து கருத்து வெளியிட்டுள்ள மகிந்த ஆதரவு எதிர் க்கட்சியின் அமைப்பாளர் டளஸ் அழகபெரும, தமது அமைப்பு அரசியல் கட்சியாகவோ, முன்னணியாகவோ, செயற்படாது எனவும் இது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான பொது மேடையாக செயற்படும் எனவும் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி, முன்னிலை சோசலிசக் கட்சி போன்ற கட்சிகள் இதில் இணைந்து கொள்ளலாம்.

குறிப்பாக மக்கள் விடுதலை முன்ன ணிக்கு அமைப்பில் இணைந்து கொள் ளுமாறு விசேட அழைப்பு விடுக்கப் படும்.

ஆரம்பிக்கப்படும் அமைப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவுப் படுத்தும் அமைப்பல்ல. ஐக்கிய தேசியக்கட்சி க்கு எதிராக சகல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் இதில் இணைந்து கொள்ள முடியும் என டளஸ் அழகபெரும குறிப் பிட்டுள்ளார். (செ-11)


பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கி கொண்டிருக்கும் பிரபல ஸ்தாபனத்திற்கு பணியாளர்கள் தேவை.

1. பிரத்தியேக செயலாளர் (அனுபவம் உள்ளவர்கள்) Personal Secretary
2. உணவு பரிமாறுபவர்கள் (ஆண், பெண்)
3. சமையலாளர் (சைவம், அசைவம்) அனுபவம் உள்ளவர்கள்
4. சமையல் உதவியாளர். - மேலதிக தகவல் மற்றும் நேர்முகத் தேர்வு

பதிவுகளுக்கு - 077 231 8734 021 221 2066

சிறுநீரகம் தேவை

22 வயதுடைய இளைஞர் ஒருவருக்கு உடனடியாக B+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை. இரக்க குணம் உடையவர்கள் தர விரும்பினால் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 076 7471 361

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

வாகன சேவிஸ் வேலை தெரிந்தவர்கள் தேவை

( தங்குமிட வசதியும் உண்டு )

தொடர்புகளுக்கு 077 310 7549

காணி விற்பனை

கொட்டடி மீனாட்சி அம்மன் வீதியில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :- 076 5471 308



LONDON METROPOLITAN COLLEGE

புதிய பிரிவுகள் ஆரம்பம்

IELTS LIFE SKILLS (A1)


Speaking & listening
Duration : 48 hours (week & week ends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப settlement விசாக்களுக்கான IELTS A1 புதிய பாடத்திட்டம் தற்போது கற்பிக்கப்படும்.
- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- இதுவரை பயின்ற அனைத்து மாணவர்களுமே சித்தி அடைந்துள்ளனர்.

IELTS
Academic & General
Duration : 48 hours (week & week ends)
மாணவர்களின் ஆங்கில அறிவுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் விசேட கவனிப்பு முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
IELTS 5.5 - 6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம் ஒரே தரத்திலேயே தேவையான Band இனை பெற்றுக்கொள்ளலாம்.
லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்.

அனைத்து கற்கை நெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.தவணை அடிப்படையிலான மிகக் குறைந்த கட்டணம்.

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road, parameswara junction, Jaffna.
HOTLINE : 021 753 8395
(சி-5070)

Study in Australia





Why Study in Australia?
- After G.C.E. O/L or G.C.E A/L or Degree
- Foundation / Diploma / Bachelors / Masters படிக்க ஓர் அரிய வாய்ப்பு!
- அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்கள்
- July 1st இருந்து இலகு Visa நடைமுறைகள்
- குறைந்த பாடநெறிக் கட்டணங்கள்
- பகுதி நேர வேலை வாய்ப்புகள் (20Hours per week)

Admission open for 2016/2017 Intake

iCS Foreign Education Services
Admission Help line 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06
(சி-5074)

யாழ் மதர் கெயார் Dental Unit
Reg.No.#PV85754



நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் பல்லுக்கு கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட மற்றும் பல உயர்தர சேவைகள் தற்போது யாழ் நகரில்





- பல், வாய், வைத்திய சேவை (விசேடமாக வேரடைப்பு,பல் வெண்மையாக்கல்)
- பல், வாய், முகம் அறுவைச் சிகிச்சை (அண்ணப்பிளவு மற்றும் வாய், முக சீரமைப்பு)
- பல், வாய், முகம் சீரமைப்பு (ஒழுங்கற்ற, மிதப்புப் பற்கள் சீராக்கல்)

514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 221 9595, 021 221 9797, Mob : 077 220 2769
(சி-5076) (C-1487)

வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் பிரபல்யமான பற்சிகிச்சை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை

அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது

தொடர்புகளுக்கு : 021 226 0000 021 226 2888


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 03.07.2016 தொலைபேசி : 021 222 3

நாதம் 72



# நீங்கள் பிரியலாம் நாங்கள் பிரியக்கூடாதா?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்திருந்தனர். இன்றைய ஆலடி மாநாட்டுக்கு விசேடமாக சாத்திரியார் சதாசிவமும் வந்திருந்தமை ஆலடி மாநாட்டில் ஓர் உத்வேகத்தைக் கொடுத்திருந்தது.

முன்பெல்லாம் சாத்திரியார் சதாசிவம் இல்லாத ஆலடி மாநாடே இல்லை எனலாம்.

பின்னர் நாட்டு நிலைமை காரணமாக கனடாவில் இருக்கும் சாத்திரியார் சதா சிவத்தின் மகன் அவரை அங்கு குடும்பத்தோட கூப்பிட சாத்திரியாரும் மனமில்லாமல் கனடாவிற்கு போய்ச் சேர்ந்தார்.

10 வருடங்கள் கடந்து இப்பதான் அவர் ஊருக்கு வந்திருக்கிறார். சாத்திரத்தில் சதாசிவத்தாரை விழுத்த ஒருத்தரும் கிடையாது.

அந்தளவுக்கு சோதிட மேதை நகைச்சுவையாக கதைக்கிறதிலும் அவருக்கு நிகர் அவர்தான்.

ஆலடி மாநாட்டுக்கு அவர் வந்ததால அங்கிருந்த எல்லோரும் மகிழ்வோடு காணப்பட்டனர்.

**விதானையார்:** சாத்திரியார் திரும்பவும் கனடாவுக்கு போறதோ?. இல்லை இனி என்ர மண்ணிலதான் வாழப் போறன். செத்தாலும் என்ர மண்ணில சாவம் எண்டு தான் வந்தனான்.

பத்தாமிடத்து வியாழனோட கனடாவுக்கு வெளிக்கிட்டனான் பத்தாவது வருசத்துக்கு பிறகுதான் இங்க வர முடிஞ்சது.

**கங்காணி:** அதுசரி சாத்திரியார் இப்ப இருக்கிற கிரக நிலையில எங்களுக்கேதும் விமோசனம் கிடைக்குமோ!

**சாத்திரியார்:** எங்களிட்ட இருக்கிற சில கிரகங்களை துரத்தினால் ஏதேனும் விமோசனம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

(ஆலடியில் சிரிப்பு)

**கங்காணி:** சாத்திரியார் சீரியஸ்சாத்தான் கேட்கிறன் எங்களுக்கு சாதகமான நிலைமை இருக்கோ?

**சாத்திரியார்:** இஞ்சே கங்காணியார் நாங்கள் போறதுக்கு முன்னதாக நாம் செய்த ஊழ்வினை ரிக்கெற் எடுத்துக் கொண்டு முன்னுக்கு போயிடுது பிறகென்ன செய்ய முடியும்.

**வாத்தியார்:** சாத்திரியார் இப்ப குரு எங்க பார்க்குது?

**சாத்திரியார்:** எங்கட மண்ணில குரு வந்து பொலிஸையும் நீதிமன்றத்தையும் சிறையையும் தான் பார்க்குது.

(ஆலடியில் மீண்டும் சிரிப்பு)

**வாத்தியார் ;** கனடாவுக்கு போயும் சாத்திரியார் தன்ர நக்கல் நையாண்டியை விட வில்லை.

**சாத்திரியார்:** வாத்தியார் சாத்திரத்தில குரு எண்டு நாங்கள் வியாழனைக் கூறுகிறம். பொதுவில குரு பார்த்தால் கோடி நன்மை என்று விதி இருக்குது.

சனியை, செவ்வாயை, ராகுவை, கேதுவை இப்படியாக பகைக்கிரகங்களைக் குரு பார்த்தால் தோசம் நீங்கும். அதால தான் வாத்திமாரையும் குரு என்று நாங்கள் கூறுவது வழக்கம்.

குருவின்ர பார்வை இருந்தால் அறியாமை என்ற இருள் நீங்கும் அறிவு ஏற்பட எதிலும் தெளிவு வரும். தெளிவு ஏற்பட்டால் பிறகென்ன எல்லாவற்றிலும் வெற்றிதானே!

**பண்டிதர்:** சாத்தியார் சொல்லுறதுதான் உண்மை. குரு பார்த்தால் அதால ஏற்படுகிற நன்மை கொஞ்சமல்ல. ஆனால் இப்ப...

**விதானையார்:** என்ன பண்டிதர் ஐயா. ஆனால் என்று இழுக்கிறியள்

**சாத்திரியார்:** என்ன இழுக்கிறது. முந்தி குரு பார்த்தால் தோஷம் நீங்கும். இப்ப குருவைப் பார்க்கிற காலம். அதால குருவுக்குச் சிறை கிடைக்கிற பலன். கலிகாலம் நாங்கள் என்ன செய்ய முடியும்.

**மூப்பர்:** அதுசரி கங்காணியார். யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பு என்று...

**கங்காணி:** ஒரு மாதிரியாத் தணிஞ்சிருக்குது. ஆனால் இதுகள நான் ஒரு போதும் ஏற்கமாட்டன். ஒரு வைத்தியசாலையில வேலை செய்யிறது எண்டால் எல்லாப் பணியாளர்களும் ஒரு முகமாக- ஒற்றுமைப்பட்டுச் செய்ய வேணும். நான் பெரிது நீ பெரிது என்றால் யமன் பெரியவனாகி விடுவான்.

**விதானையார்:** ஒரு தாதி உத்தியோகத்தர் மருத்துவரோடு பதிலுக்குப் பதில் கதைச்சுப்போட்டார் என்பதற்காக மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பைச் செய்ய முன்வந்தது மகாதவறு.

**வாத்தியார்:** விதானையார் ஒரு தாதிய உத்தியோகத்தர் ஏசிப்போட்டார் என்பது ஒரு சாட்டுப்பாருங்கோ. உண்மையில யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மிகச் சிறந்த நிர்வாகத்தை நடத்துகிறார் அல்லோ!.

அப்ப அவருக்கு உபத்திரம் கொடுத்தால் தானே அவரும் கண்டும் காணாமலும் இருப்பார். இல்லையெண்டால் வேறு எங்காவது மாற்றலாகிப் போவார்.

**பண்டிதர்:** வாத்தியார் சொல்லுறதிலும் உண்மையில்லாமல் இல்லை. அதற்காக எல்லா மருத்துவர்களும் இதற்கு உடன்பாடெண்டும் நான் சொல்லமாட்டன். கடவுளுக்கு நிகரான மருத்துவர்களும் இருக்கினம். ஆகையால நாங்கள் ஒட்டு மொத்த மருத்துவர்களையும் குறை சொல்லக்கூடாது.

அதேபோல கடமையிலும் இறைசேவை என்று நினைத்துச் செயற்படுகிற தாதிய உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள். சீறிப்பாய்ந்து சினக்கிற தாதிமாரும் இருக்கினம். எல்லாம் கலந்ததுதானே உலகம்.

இருந்தும் ஒரு பொது நியதிக்கு எல்லோரும் கட்டுப்பட்டவர்கள்தான். அந்தப் பொது நியதிதான் கடவுள் நீதி.

இருந்தும் யாழ். போதனா வைத்தியசாலையில கடமையாற்றுகிற மருத்துவ நிபுணர்கள் ஒரு சிலர் வைத்தியசாலையில பணியாற்றுகிறதை விட தனியார் வைத்தியசாலையில நோயாளர்களை இழுக்கிறதில மிகத் தீவிரமாக இருப்பதாகக் கேள்வி.

**விதானையார்:** என்ர கடவுளே! மருத்துவர்களை கடவுளுக்கு சமமானவர்கள் எண்டு சொல்லுறம். சிவ பெருமானுக்கு வைத்திய நாதன் என்றொரு பெயரும் இருக்கல்லோ!



மருத்துவத் தொழில் என்பது கடவுள் தந்தது என்று நினைத்துச் சேவை செய்யவேணும்.

**கங்காணி:** விதானையார் எங்கட மருத்துவர்கள் வசதியாக இருக்கவேணும். அவையள் தனியார் வைத்தியசாலைகளில சிகிச்சை அளிக்கப் போறதை நாங்கள் குறை சொல்ல முடியாது. அதற்காக யாழ். போதனா வைத்தியசாலையில சிகிச்சை செய்யாமல் பிறைவேற் எண்டால் உடன செய்யலாம் இஞ்ச எண்டால் ஆறுமாதம் எடுக்கும் எண்டு சொல்லுறது பாவச்செயல்.

இப்படியான செயலில ஒரு சில மருத்துவர்கள் ஈடுபட்டால் அது தாதிய உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய வைத்தியசாலைப் பணியாளர்களுக்கும் தெரியும் தானே!.

இப்படியான தகவல்கள் தெரிகிறபோது எவரும் எதிர்த்துக் கதைப்பினம். இதை நாங்கள் ஒருத்தரும் மறந்துவிடக்கூடாது.

**மூப்பர்:** யாழ். போதனா வைத்தியசாலையில முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு என்பது தனியார் வைத்தியசாலைகளிலும் நடக்குமோ!

(மூப்பரின் கேள்வி ஆலடியில் சிரிப்பொலியை ஏற்படுத்தியது)

**கங்காணி:** மூப்பர் தெரியாமல் கேட்டாலும் அந்தக் கேள்விக்குள்ள நியாயம் இருக்கத்தான் செய்யுது. ஏனெண்டால் பணிப்புறக்கணிப்பில ஈடுபட்டால் அன்றைய நாளில தனியார் வைத்தியசாலையிலும் பணிப்புறக்கணிப்புச் செய்யிறது தானே நீதி.

இல்லையெண்டால் பண வசதி படைத்தவர்களுக்குச் சிகிச்சை, சாதாரண ஏழை மக்களுக்குச் சிகிச்சை செய்ய முடியாது என்ற மாதிரியான வஞ்சகம் நடந்துவிடும். இது அழகல்ல.

**வாத்தியார்:** பொதுவில எங்கட மண்ணில இருந்து மருத்துவ சேவை செய்யிற மருத்துவர்களை நாங்கள் பூப்போட்டுக் கும்பிடுகிறம். அதேநேரம் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணியையும் சரியாகச் செய்து பிறைவேற்றிலும் நோயாளர்களைப் பார்ப்பதில ஒரு தப்பும் இல்லை.

ஆனால் குறிப்பிட்ட ஒரு சில மருத்துவ நிபுணர்களின்ர பெயரைச்சொல்லி இவரிட்ட போனால் பிறைவேற்தான். வீட்டை வித்துப் போட்டுத்தான் காசு கொடுக்க வேணும் என்று பொது சனம் கதைக்கினம். அந்தக் கதைக்கு இடம் கொடுக்காமல் இருந்தால் எவரும் எதுவும் செய்யமுடியாது.

**பண்டிதர்:** அதுமட்டுமல்ல வாத்தியார், தங்கட பிறைவேற் வைத்தியத்திற்கும் இடைஞ்சல் வந்துவிடுமோ என்று பயந்த ஒரு சில மருத்துவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின்ர பணிப்பாளரை வெளியேற்றவேணும் என்று திட்டம் தீட்டுவதாகவும் கேள்வி.

**கங்காணி:** அடக்கடவுளே! அந்தாள் எங்கட யாழ். போதனா வைத்தியசாலையை நல்ல முறையில நிர்வகிக்கிறார்.

எங்கட வடபுலம் எல்லாப் பக்கத்தாலும் விழுந்து போய்க்கிடக்குது. இந்த நேரத்தில நல்ல நிர்வாகம் செய்யிறவியளையும் துரத்தி விட்டால் எங்கட இனத்தின்ர கெதி என்ன?

எதிலும் சுயநலம் என்றில்லாமல் எங்கட இனம்; எங்கட மக்கள்; எங்கட உறவுகள் எண்டும் பார்க்க வேணும். இதைத்தான் கடவுள் நீதி எண்டு சொல்லுறது.

இப்படிக் கங்காணியார் கூற அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# பிரிந்து செல்லும் அதிகாரம் பிரிட்டிஷ் மக்களுக்கு இருந்தால்...

ஜனநாயகம் என்பது மக்களாட்சி என்பதற்கு அப்பால், ஜனநாயகத்தின் தன்மை என்பது நாட்டிற்கு நாடு, கண்டத்திற்கு கண்டம் வேறுபட்டதாக இருக்கவும் கூடாது.

இருந்தும் ஜனநாயகச் சிறப்புக்கள் நாடுகளுக்கிடையே வேறுபட்டிருப்பது மிகப்பெரும் துரதிர்ஷ்டமாகும்.


அதிலும் குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளில் ஜனநாயகம் என்ற மக்களாட்சி இனத்துவ அடிப்படையில் சாய்ந்து நிற்பது வேதனைக்குரியது. இத்தகைய ஜனநாயகப் போக்குகள் உலக அரங்கிலும் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதைக் காணமுடிகின்றது.

ஜனநாயகம் என்றால் இலங்கையில் ஒரு விதம், பிரிட்டனில் இன்னொரு விதம் என்பதாக இருக்க முடியாது. பிரிட்டனில் எத்தகைய ஜனநாயகத் தன்மைகள் காணப்படுகின்றனவோ அதுபோன்ற தன்மைகள் இலங்கையிலும் இருந்தாக வேண்டும். அவ்வாறு இல்லாது போனால் அதை உலகப் பொது அமைப்புக்கள் சரிப்படுத்துவது கட்டாயமானதாகும்.

எனினும் உலக நாடுகளும் சில நாடுகளில் நடக்கக்கூடிய உள்ளக முரண்பாடுகளை ஊக்குவிப்பதாக நடந்து கொள்வதைக் காணமுடிகின்றது.

உதாரணமாக அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளில் தனி மனிதவுரிமைகள் எங்ஙனம் பாதுகாக்கப்படுகின்றனவோ, மாநில ஆட்சி முறைமைகள் எங்ஙனம் செயல் நிலையில் இருக்கின்றனவோ அதுபோல இலங்கையிலும் தனி மனித உரிமைகளும் இனங்களுக்கான ஆளுகை அதிகாரங்களும் இருக்க வேண்டும்.

இருந்தும் இலங்கையில் பெரும்பான்மை இனம் என்ற அடிப்படையில் ஆட்சியாளர் கள் ஆட்சி அதிகாரத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு சிறுபான்மை இனத்தை நசுக்குவதில் தீவிரமாக இருப்



# இலங்கைத் தமிழ் மக்களிடமும் கருத்துக் கணிப்பை நடத்துங்கள்

பதைக் காணமுடிகின்றது.

இருந்தும் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் இதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பது தான் ஆச்சரியமான விடயம்.

எமது நாட்டில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இருக்கக்கூடிய அதிகாரங்களை நீங்களும் வழங்குவது தான் ஜன நாயகம் என்ற செய்தியை இலங்கை அரசுக்கு எடுத்துரைப்பதில் வல்லாதிக்க நாடுகள் பின்னடிப்பது இலங்கை போன்ற நாடுகளில் பிரச்சினைகளும் சண்டை சச்சரவுகளும் நிலவினால்தான் தங்கள் நாட்டு ஆயுத உற்பத்தி நட்டம் இன்றி நகரும் என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

இது ஒருபுறம் இருக்க ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுவது தொடர்பில் எழுந்தவாதப் பிரதிவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பிரித்தானியாவில் கருத்துக் கணிப்பு நடைபெற்றது.

இக்கருத்துக்கணிப்பானது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுவதா? அல்லது சேர்ந்தேயிருப் பதா என்பதை அறிந்து அதை அமுல்படுத்துவதற்கானதாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருப்பதா? அல்லது பிரிந்து போவதா என்பதைப் பிரித்தானிய மக்களே தீர்மானிக்கமுடியும். மாறாக பிரித்தானியா பிரிந்து போகக்கூடாது என்று ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகள் தீர்மானிக்கமுடியாது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஆக,பிரிந்து போவது சேர்ந்திருப்பது என்பதை பிரித்தானிய மக்கள் மட்டுமே தீர்மானிப்பதாக இருந்தால் இந்த நடைமுறை இலங்கைக்கு மட்டும் செல்லுபடியற்றது என்று யார் சொல்ல முடியும்.

எதுவாயினும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரித்தானியா சேர்ந்திருக்க வேண்டும் என்று 48 வீதமானவர்க ளும் பிரிந்து செல்வ தென்று 52 வீதமான மக்களும் தீர்ப்பளித் துள்ளனர்.

இதன்பிரகாரம் ஐரோப்பிய ஒன்றியத் திலிருந்து பிரித்தானியா பிரிந்து செல்வதென்பது முடிவாகிற்று.

இதன் விளைவாக பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் பதவி விலகுகின்ற நிலைமைக்கு வந்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகக்கூடாது என்ற கருத்துடைய கமரூன், பிரிந்து செல்வதென்ற முடிவுக்குப் பின்னர் பிரதமராக இருப்பது நல்லதல்ல என்பதன் அடிப்படையில் அவர் பதவியில் இருந்து விலகுவதெனத் தீர்மானித்துள்ளார்.

ஒரு தலைசிறந்த அரசியல்வாதி- ஒரு நாட்டின் பிரதமர் செய்யவேண்டிய தார்மீகம் இது என்பது ஏற்புடையதே.

அதேநேரம் இலங்கையிலும் இத்தகையதொரு கருத்துக் கணிப்பு நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்துவதை பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் இதுவரை மேற்கொள்ளாமல் இருப்பது தான் வேடிக்கையாகவுள்ளது.

30 ஆண்டு காலம் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த தமிழினம் இலங்கையில் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழப்போகிறதா? அல்லது பிரிந்து சென்று தாம் ஒரு தனிநாட்டை அமைக்க விரும்புகிறதா? என்பதை அறிந்து கொள்வது உண்மையான ஜனநாயகமாக இருக்கும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்வதென்று முடிவெடுக்கும் அதிகாரம் பிரித்தானிய மக்களுக்கு இருக்குமாயின் அதே அதிகாரம் இலங்கையில் தமிழ் மக்கள் பிரிந்து செல்வதற்கும் இருக்கிறதல்லவா. ஆகவே உலகில் எங்கும் ஜனநாயகப் பண்பு ஒரே மாதிரியாக அமைய வேண்டுமாயின் இலங்கையில் தமிழ்மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பொன்றை நடத்த வேண்டும்.

இக் கருத்துக் கணிப்பானது சேர்ந்திருப்பதா? பிரிந்து செல்வதா? என்ற முடிவை எடுப்பதற்கானதாக இருக்க வேண்டும். இக்கருத்தையே தமிழக சட்டசபை ஒரு தீர்மானமாக எடுத்திருந்தது. சேர்ந்து வாழ விருப்பம் இல்லையென்றால் பிரிந்து செல்வதே சுதந்திரமாகும்.

எனவே பிரிந்து செல்கின்ற சுதந்திரத்தை- உரிமையை உலக நாடுகள் இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

அதேநேரம் இலங்கை இனவிவகாரம் குறித்து ஆராய வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தமிழ்மக்களிடம் கேட்க வேண்டிய கேள்வி நீங்கள் சேர்ந்திருக்க விரும்புகிறீர்களா? அல்லது பிரிந்து செல்ல விரும்புகிறீர்களா? என்பதுதான். இது நடந்தால் எல்லாம் சரியாகும். •

விதுரன்




# வெற்றியின் ரகசியம்

முல்லாவின் நண்பர் ஒருவர் முல்லாவிடம் வந்து நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்.

அவர் முல்லாவிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்தபோது அவரை நோக்கி "முல்லா அவர்களே தாங்கள் பலவிதத்திலும் மக்களிடம் புகழ் பெற்றவராகத் திகழுகிறீர்.

மன்னரிடம் உங்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கிறது.

இவ்வாறெல்லாம் நீங்கள் புகழும் பெருமையும் பெறுவதற்கு ஏதோ ஒரு ரகசியம் இருக்க வேண்டும்.

அந்த ரகசியம் என்னவென்று தயவு செய்து எனக்குக் கூறுவீர்களா?" என்று கேட்டார். " உண்மையிலே என் வெற்றிக்கு அடிப்படையான ரகசியம் ஒன்று இருக்கிறது. ஆனால் அது ரகசியமாயிற்றே.

அதை ஒருவரிடம் சொன்னால் அது அப்படியே பரவிக் கொண்டே போகுமே" என்று முல்லா சொன்னார்.

"முல்லா அவர்களே, என்னிடம் எந்த ரகசியத்தைச் சொன்னாலும் உண்மையிலே அது என்னை விட்டுத் தாண்டாது. தயவு செய்து அந்த ரகசியத்தை எனக்கு மட்டும் கூறுங்கள் " என்று நண்பர் வேண்டிக் கொண்டார்.

"நான் என் வெற்றியின் ரகசியத்தை உங்களிடம் கூறினால் யாரிடமும் கூற மாட்டீர்களே" என்றார் முல்லா.

"என்னை நம்பலாம் என்னிடமிருந்து ரகசியம் ஒரு போதும் வெளியே போகாது" என்று உறுதியாகக் கூறினார் நண்பர்.

"யாராவது உம்மிடம் வந்து ஏராளமான பணம் தருகிறேன் என்று ஆசை காட்டினால்?" என்று கேட்டார் முல்லா.

"கோடிப் பொன் தருவதாக ஆசை காட்டினால் கூட யாரிடமும் கூற மாட்டேன்" என்று திடமாகக் கூறினார் நண்பர். "அப்படியானால் நம்பி உங்களிடம் ரகசியத்தைக் கூறலாம்.

மறந்துகூட இதைப் பிறரிடம் சொல்ல மாட்டீர்கள் என்று நம்பலாம் இல்லையா?" என்று முல்லா கேட்டார்.

"என்னை முழு அளவுக்கு நம்பலாம்" என்று வாக்குறுதி கொடுக்கும் விதத்தில் நண்பர் சொன்னார்.



"உண்மையிலேயே நீர் ரகசியத்தைக் காப்பாற்றக் கூடியவர்தான். என் வெற்றிக்கான ரகசியத்தைக் கூறினால் நான் ரகசியத்தைக் காப்பாற்றத் தெரியாத முட்டாள் ஆகிவிடுவேன். அதனால் அன்பு நண்பரே என் ரகசியத்தை உமக்குக் கூறத் தயாராக இல்லை.

நானும் என் ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டுமல்லவா?" எனக் கூறியவாறு முல்லா அந்த இடத்தை விட்டு அகன்றார்.

**குட்டீஸ்!**

**மற்றவர்கள் நம்மை நம்பிக்கூறும் ரகசியத்தை காப்பாற்றுவதும் புத்திசாலித்தனம் தானே !**


முத்தான 10 தமிழ் சனல்கள்

Sri Lanka Telecom

இப்பொழுது PEO TV யில்!



தமிழ்பேசும் அனைத்துக் குடும்பங்களையும் மகிழ்வூட்டும் PEO TV!

அதிநவீன தொழில்நுட்பத்துடன்கூடிய PEO TV யில் இப்பொழுது நீங்கள் சன் TV, சன் மியூசிக், KTV, விஜய் TV, கலைஞர் TV. இசையருவி, சிரிப்பொலி, ஆதித்யா TV, ராஜ் TV மற்றும் ராஜ் மியூசிக் போன்ற 10 தென்னிந்திய செனல்கள் உட்பட உள்நாட்டு மற்றும் சர்வதேச TV செனல்களை மிகத் துல்லியமாகப் பார்த்து மகிழலாம். அத்துடன் எப்பொழுது நேரம் கிடைக்கின்றதோ அப்பொழுது தாம் விரும்பிய திரைப்படத்தை தமிழ்பேசும் அனைத்துக் குடும்பங்களும் தெரிவு செய்து ஒற்றுமையாக பார்க்கக்கூடிய "வீடியோ ஒன் டிமாண்ட்" வசதி PEO TV யில் மட்டுமே உள்ளது.

PEO TV யில் உள்ள சிறப்பம்சங்கள்


- கெச்-அப் TV
- வீடியோ ஒன் டிமாண்ட்
- பிக்சர் இன் பிக்சர்
- றெயின் புறூவ்

PEO TV

TV பார்க்க சிறந்த வழி

PEO TV இணைப்பைப் பெற அழையுங்கள்

24h 1212





# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## ரஜினியின் கபாலி டீசர் பற்றி?

**நளாயினி — கோண்டாவில்**

**ஒபாமாவை உங்களுக்குப் பிடிக்குமா?**

அடிமைப்பட்ட இனத்தில் ஒருவன் தலைவன் ஆகிறான் என்றால் அவனைப் பிடிக்காமல் போய்விடுமா. இன்னொருத்தரை குடை பிடிக்க வைத்திருக்கும் எங்கள் தலைவர்கள் மத்தியில் தனக்குத் தானே குடைபிடிக்கும் தலைவர்கள் உண்மையில் தலைவர்கள் தானே.

**நளினாசினி — கோண்டாவில்**

**தோல்வியை ஏன் வெற்றியின் முதல்படி என சொல்கிறார்கள்?**

உன்னால் இன்று எந்த மேடு பள்ளத்திலும் சைக்கிளை நிலைகுலையாமல் ஓட முடிகிறது என்றால் நீ சிறுவயதில் இருக்கும் போது எத்தனை தடவைகள் வீழ்ந்திருப்பாய்.

இந்த மேடு பள்ளங்களில் ஒவ்வொரு முறை நீ விழும் போதும் உன்னுள் ஓர் ஓர்மம் வருமே. அந்த ஓர்மம், அடுத்த தடவை வீழக் கூடாது என்பது தானே? வீழ்தல் என்ற தோல்வி விழாது ஓடுதல் என்ற வெற்றியைப் பெற்றுத் தருகின்றது.

**சுகிர்தமலர் — உரும்பிராய்**

**நீங்கள் பராசக்தி சினிமா படம் பார்த்தீங்களா?**

ஓ பார்த்திருக்கிறேன். நான் சிறுவயதில் பார்த்து விட்டு இனி இந்த யுகத்தில் சிவாஜி போல நடிகன் பிறக்க மாட்டான் என நினைத்தேன். அண்மைய எம் அரசியல்வாதிகளின் நடிப்பு அந்த நினைப்பைத் தகர்த்துவிட்டது. ச்சா... என்ன நடிப்பு சாண்சே இல்லப்பா!

**சோமசுந்தரம் — காரைநகர்**


**தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இயங்கு நிலையில் உள்ளதா?**

இயங்கு நிலையில் இருக்க வேண்டும் என்பதுதான் தமிழர்களின் விருப்பம். அப்படி இருக்க வேண்டும் என நினைப்பவர்கள் முதலமைச்சரை பகைக்க மாட்டார்களே. மாகாண அரசிற்கு குந்தகம் விளைக்கமாட்டார்களே.

**காசானா — வல்வெட்டித்துறை**

**ஆங்கிலத்திற்கும் தமிழுக்கும் இருக்கும் வித்தியாசம் என்ன?**

வீரபாண்டிய கட்டப்பொம்மன் படம் பாருங்கள் புரியும்.




## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இயங்கு நிலையில் உள்ளதா?

**குஷாந்தி — புளியங்கூடல்**

**வாழ்க்கையில் யாரிடமும் உண்மையான அன்பு கிடைக்காதவர்கள் என்ன பண்ணலாம்?**

மற்றவர்கள் உன்னில் அன்பு செலுத்தவேண்டும் என்ற கட்டாயம் ஏதும் இருக்கிறதா? என் உடல், என் இதயம், என்மனம் இப்படி எல்லாவற்றையும் என் என்று சொல்லிவிட்டு அன்பை மற்றவர்களிடமிருந்து ஏன் எதிர்ப்பார்க்க வேண்டும். உன்னை உணர்ந்துகொள். உன்னில் நீ அன்பு செலுத்து. மற்றவர் உன்னிடம் சரணடைவார்.



"நம் அரசர் வாளால் சாக மாட்டார் என்று எப்படி உறுதியாகச் சொல்கிறாய்?"

" 'வாள் எடுத்தவன்தானே வாளால் சாவான்' என்று சொல்லியிருக்கிறார்கள்!"

**கரன் — கரணவாய்**

**மதுவை ஒழிக்க அரசால் மட்டுமே முடியும். பிறகு ஏன் மது ஒழிப்பு என நாம் கத்த வேண்டும்?**

" நாங்கள் குடித்துவிட்டு தள்ளாடுறபடியாத் தான் அரசாங்கம் தள்ளாடாமல் நிக்குது" என குடிகாரன் சொல்வது போல பேஸ்புக்கில் பார்த்த ஞாபகம்.

**கஜன் — திருநெல்வேலி**

**காதலித்துப்பார் உன்னைச் சுற்றி ஒளி வட்டம் தோன்றும் இது பற்றி?**

இப்படியான வரிகளை புகுத்துவதில் வைரமுத்து கில்லாடி. "வயிற்றுக்கும் தொண்டைக்கும் இடையில் உருவமில்லா ஒரு உருண்டையும் உருளுதடி" இப்படிப் பாடியவனும் அதே வைரமுத்துதான். இதற்கு பதில் உங்களால் கூறமுடியுமா?

## நீங்கள் பராசக்தி சினிமா படம் பார்த்தீங்களா?

**நந்தகுமார் — மானிப்பாய்**

**ஆசிரியர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

கஞ்சியில் பயறைத் தேடலாம். அதற்காய் அரிசியை எல்லாம் பயறாக்கிவிட முடியாது' என்பது எமது சிற்றறிவில் பட்டது.

**அஜித் — பளை**

**காதலால் பாதிக்கப்படுவது ஆண்களா? பெண்களா?**

உடலால் பெண்ணும் மனதால் ஆணும்.

**புஸ்பகுமார்**

**அதிகம் சந்தேகப்படுவது ஆண்களா? பெண்களா?**

நீ இரவு வீட்டுக்குவர லேற் ஆகிட்டா நோண்டி நோண்டி கேள்வி கேட்பது அம்மாவா? அப்பாவா?

**சிந்துஜன்**

**என்னை ஒரு பெண் ஏமாத்திட்டாளே?**

இதைச் சொல்லவே ஒரு தில் வேணும்டா நீதான்டா "டான்" "காங்லீடர்" அடுத்த தாக்குதலுக்கு ரெடி ஆகிடு.

**டனுசன் — சுண்டுக்குளி**

**கபாலி டீசர் பற்றி?**

"திரும்பிவந்திட்டான்னு சொல்லு இருபத்தைந்து வருசத்துக்கு முன்னாடி எப்படி போனானோ அதே கபாலி மறுபடி வந்துட்டாண்ணு சொல்லு..." நெருப்புடா

**லக்சி — கரணவாய்**

**பெண் மனதில் ஒரு ஆண் இருக்கிறான் என்று எவ்வாறு அறிவது?**

நாசமாப் போக. உன் தலையில இடி விழ. இதையெல்லாம் என்னிடமா கேட்கணும் போய் அவளிடம் கேட்க வேண்டியது தானே.

**ஜனனி — யாழ்ப்பாணம்**

**தளபதி பாடல்களை விட தல பாடல்கள் சிறந்தது தானே?**

அதுசரி இந்த தல, தளபதி என்பது யாரு என்று கூற முடியுமா?

**முரளி — யாழ்ப்பாணம்**

**"நெருப்புடா" எப்படி?**

ரஜினியை யாராலும் நெருங்க முடியாது என்பதற்கான ஒற்றை வார்த்தை "நெருப்புடா"

# கவிதைக் கலசம்



## இதென்ன பிறப்பு

ஆணாகப் பிறந்திடவோ
அருந்தவங்கள் செய்யவேண்டும்
பிறந்தது ஆணென்றால்
வீட்டுக் கூரைகளில் தட்டி
மனம் மகிழ்ந்தார் அன்று
வீரம், வலிமை சேர் ஆணென்று
உலவிடுவர் பின்னாலே
கைபிடிக்க ஏங்கிடுவர்
காத்திருப்பர் வனிதையரும்
ஆனால் இன்றோ...
அரிய பிறப்பை உதறிவிட்டு
பெண் பிறப்பாய் காட்ட எண்ணும்
தம்பியரை என்ன சொல்ல?
பெண்களை ஏமாற்ற
நீண்ட தலைமுடியை
தவமிருந்து வளர்க்கின்றார்
கவரும் நிறக்கல் தோடும்
காதிலே அணிகின்றார்
போதாதென்று
வளையங்களும் மாட்டுகின்றார்
கால்களிலும் மெட்டிவேறு
நெஞ்சில் நல் நோக்கில்லை
உடல் வலிமை தானுமில்லை
போதைகளுக்கு ஆட்பட்டு
உதவாக்கரைகள் ஆகிவிட்டார்
சுற்றித் திரியும் பிள்ளைகளுக்காய்
சார்ந்து பேசும் பெற்றோரே
இவர் பிறந்த பிறப்பென்ன?
ஆண் பிள்ளை என்ற இறுமாப்போ?

மானந்தன்
அல்வாய்

## நீயில்லா கணம்

நீ வந்த பொழுதுகளில்– என்
நிலை இழந்தேன் பல இரவுகளில்
நீ தந்த காதல் சிறகுகளில்
நிம்மதி கண்டேன் அவ்வரவுகளில்
நீயில்லாப் பொழுதுகள்
நிர்வாணமான என் இரவுகள்
நிசப்தமான என் உணர்வுகள்
நில்லாது வாட்டுது உன் நினைவுகள்
நீங்கா காவியமான நம் காதல்
நிலைமாறிப் போனதோ உன் மனச்சாரல்
உனை நினைத்து பாடும் பாடல்
உன் பாதையிலே தினம் என் தேடல்
உருகுகிறது பனியாய் மனம்
உலருகிறது தனிமையில் தினம்
உறக்கம் தொலைத்த மனம்
நீயில்லாத சில கணம்
உயிருள்ள ஜடமான பிணம்...

ஞா.கட்டைக்கவிதன்
நெடுந்தீவு

## எங்கள் ஏழைக் குடிசைகள்

தூரம் அதிகமில்லாத
தூக்குமேடைகளால்
ஒவ்வொரு பொழுதும்
பல யுகங்களாக
திணிக்கப்படுகின்றது
நாம் ஏழைகள்தான்
ஆனால் பூமியை துளைக்கும்
வேரினும் வீரியமானவர்கள்
நல்லதைச் சொல்லி
எம்மை வாழவைக்க
இங்கு மனிதரே இல்லையா
எங்கள் மீது வெளிச்சம்
பாய்ச்சுங்கள்
எமக்கும் நாகரிகம்
கற்றுத் தாருங்கள்
நாமும் மனிதர்கள்தான்
எங்கள் ஏழைக்குடிசைகளில்
மட்டும் ஏன் வசந்தம்
உட்கார மறுக்கிறது

த.சர்மினி
வவுனியா

## புஸ் வாணம்

ஐயா சாமி
எங்கள் அவலங்கள்
தீர்க்க வந்தவர்கள்
நீங்களாம்...
மெய்யா சாமி?

மெய்யோ முறையோ
பொய்யோ சரியோ
ஓட்டுப் பிச்சை கேட்க
எம் வீடு தேடி
வந்தரெல்லோ நீர்?

ஏனையா இப்படி
எதுக்கையா இது
நீர் விட்ட வாணங்கள்
இன்னும் வெடிக்காமல்
கிடக்குது வீதியிலே

பாரையா தமிழர் நிலை
கூறையா மன்றில்
இதைவிடுத்து நீர்
போமிட்டு வேண்டுமென்று
போராட்டம் நடத்துகிறீர்

விளங்கிடும் நம்மினம்
விளங்கிவிட்டது உம் குணம்
இனி வந்து விடாதீர்கள்
எம் வீடு தேடி– உலையில்
கொதித்திருக்கு சுடுதண்ணி

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்– 308



## வாடிடும் ஏழை

உல்லாசமாக வண்டியிலே
உட்கார்ந்திருக்கும்
கனவான் நெஞ்சில்
கருணை இல்லையோ
உன்னுள் இருக்கும்
இறுமாந்த குணத்தை
உடன் இருக்கும்–அந்த
இளமகனும் கற்றல் நன்றோ
வாட்டிடும் வறுமையை விரட்டிட
வாடிய ஏழை வண்டியை இழுக்கின்றான்
ஏங்கி நிற்கும் அவன் ஏழ்மையைப் போக்கிட
ஏற்றம் கொண்டோர் நெஞ்சம்
எண்ணுமோ இன்று
கூலிக்காய் வண்டி இழுத்தாலும்
குமுறும் அவன் வேதனையை
போக்கி இவன் வறுமையை நீக்கி
தேற்றிட யார் தேடியிங்கு வருவார்

சி.திவ்வியா
யா/ பண்ணாகம்
மெய்கண்டான் ம.வி

## சுமைதாங்கி

வயிற்றுப் பசி போக்க
வாலிபன் ஒருவன்
சுமைகளைத் தாங்கி
வலிகளைப் பொறுத்து
வண்டியை இழுக்கின்றான்
வழியிலே வருகின்ற
தடைகளை வெற்றியோடு
தாண்டிக் கடந்தால்–தன்
வாழ்க்கை வண்டியையும்
நேர்சீராகக் கொண்டு
செல்லமுடியும் இவனால்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## கட்டிய மனைவி காத்திருக்கும் பிள்ளைகள்

ஒட்டிய வயிறு– நரை
தட்டிய சிரசு– வியர்வை
கொட்டிய தேகம்–நாளும் வாழ்வை
ஓட்டிட எண்ணம்
கட்டிய மனைவி காத்திருக்கும்
பிள்ளைகள்
எட்டியதூரம் எட்டணா என்றாலும்
கைதட்டினாற் போதும்
கால் ஏகிடும் இரட்டைச் சில்லு
வண்டியோடு

சந்நிதி
கதிர்ஷன்

## உழைப்பின் மகிமை

அந்தக் காலத் தமிழன் தன்
சொந்த மூளை வலுவைப் பயன்படுத்தி
சிந்தனைத் தெளிவோடு நிதானமாகக்
குந்திக் கூனியிருந்து தயாரித்த
விந்தையான வடிவந்தான்
இந்த றிச்சோ வண்டி
நடக்க முடியாதவரையும்
அவசரத் தேவையுள்ளோரையும்
றிச்சோ வண்டியிலேற்றித்
தனி ஒருவனாக
ஓடி இழுத்துச் சென்று
மாடாய் உழைத்த
மனித வாழ்வைப்
பாடாதிருக்க முடியவில்லையே

துரை
தென்மட்டுவில்

## உழைப்புக்கு வயசில்லை

தள்ளாத வயசு
தானாக முளைத்த ஏழ்மை
முள்ளாக தைக்கும்
வாழ்க்கைக்குள்
மூழ்கடிக்கும்
இல்லாமையை ஓரம்கட்ட
செய்யும் தொழிலின்
பிடிமானம்
எடுத்த தீர்மானம்
இயலுமட்டும்– உழைப்பு

அராலியூர் சோ.சிவகுமாரன்

## பாரம்பரிய பயணம்

எரிபொருளோடு
எண்ணற்ற வாகனங்கள்
எந்த வகையில் வந்தாலும்
பாரம்பரிய பயணத்தின்
பக்குவத்தை யாரறிவர்
வீட்டிலுள்ள உறவுகளும்
விருப்போடு வாழ்ந்திடவே
வண்டி கொண்டு
வலிந்துழைத்து
வாழ வழி செய்திடுவேன்

அணிஞ்சில்
புவபாலன்

## வாழ்வில் என்றும் வசந்தம்தான்

நிலையில்லா உலகிலே
நிலையானவை எவையும் இல்லை
என்பதைப் புரியாது
வாழப்பிறந்தவர்கள் நாமென்று
வண்டியில் ஏறி
வலம்வரும் இளம் சிட்டுக்களே!
வண்டியும் ஒருநாள்
ஓடத்தில் ஏறும்
ஓடமும் ஒருநாள்
வண்டியில் ஏறும்
என்பதைப் புரிந்தால்
வாழ்வில் என்றும்
வசந்தம்தான்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

# மௌனத்தின் தேடல் –309



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 06.07.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# மரணத்திற்குப் பின்பும் வாழும் தேவதை

# நெஞ்சை உருக்கும் சிறுமியின் கதை!





சராசரியான நான்கு வயது குழந்தைகளுக்கு பிறப்பு மற்றும் இறப்பு பற்றிய அடிப்படை புரிதல் இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. ஆனால் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டிருந்த அமெரிக்காவை சேர்ந்த ஐந்து வயது ஜூலியானா பலனளிக்காத சிகிச்சையை மேற்கொண்டு ஏற்றுக்கொள்ள விரும்பாமல் தன் இறப்பை தானே தீர்மானித்த நிகழ்வு பலரை சோகத்தில் ஆழ்த்தியதோடு தீராநோய் கொண்ட குழந்தைகளின் பெற்றோர் துயரத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

அமெரிக்காவின் வோஷிங்டனை சேர்ந்த ஜூலியானா சிறு குழந்தையாய் இருந்த போதே Charcot-Marie-Tooth எனப்படும் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டார். இந்த நோய் தாக்கப்படுபவர்களின் நரம்புகள் முழுமையாகப் பாதிக்கப்படுவதோடு தசைகளையும் மெல்ல மெல்ல பாதிக்கும். நோயின் கடைசி கட்டத்தை எட்டியிருந்த ஜூலியானாவிற்கு பல பிரச்சினைகள் ஏற்பட தொடங்கின. உணவை மெல்ல மற்றும் விழுங்க செயற்படும் திசுக்களை இந்நோய் கடுமையாகப் பாதித்தது.

மேலும் ஜூலியானாவின் நுரையீரலையும் பாதிக்க தொடங்கி இருந்தது. இவருக்கு அடிக்கடி நுரையீரலில் அதிகமான சளி படிந்து நிமோனியாவும் தாக்கி வந்தது. ஒவ்வொரு முறை இப்படி ஆகும் போதும் ஒரு டியூபை மூக்கின் வழியே தொண்டைக்குள் விட்டு நுரையீரல் வரை செலுத்தி 'நேசோட்ரேக்கியல் ஸக்ஷனிங்' எனப்படும் வலி மிகுந்த சிகிச்சை மூலம் நுரையீரலை சுத்தப்படுத்த வேண்டியிருக்கும். பெரியவர்களாலே பொறுத்துக் கொள்ள முடியாத வலி கொடுக்கும் இந்த சிகிச்சையை ஜூலியானா எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியாய் பொறுத்துக் கொள்வார். காரணம், கத்தி கூச்சல் போடும் அளவுக்கு கூட அவளது உடலில் சத்து இல்லாமல் இருந்ததுதான்.

நாட்கள் செல்ல செல்ல ஜூலியானாவின் உடல் நிலை மோசமானது. மூச்சை உள்ளிழுக்க சிரமப்படும் போதெல்லாம் பெரிய ஒட்சிசன் மாஸ்க் வைத்து சிகிச்சை பெற வேண்டி இருந்தது. ஒரு சராசரியான குழந்தை பருவம் ஜூலியானாவிற்கு கிடைக்காமலே போனது.

நிலைமை நாளுக்கு நாள் மோசமாகவே மருத்துவர்கள் ஜூலியானாவின் பெற்றோரை அழைத்து பேசினர். அடுத்த முறை ஜூலியானாவிற்கு உடல்நலம் குன்றும் போது அவளைக் காப்பாற்றுவது கடினம் என்றும், அப்படியே காப்பாற்றினாலும் பலவீனமடைந்த உடலுடன் வாழ்வதே ஒரு கடினமான போராட்டமாக மாறிவிடும் என மருத்துவர்கள் கூறியிருக்கின்றனர். எனவே மிகவும் வலிமிகுந்த இந்த சிகிச்சையை மேற்கொள்ளலாமா அல்லது சிகிச்சை எதுவும் தராமல் ஜூலியானாவை வீட்டிலேயே வைத்து, அவள் எவ்வளவு நாட்கள் சிகிச்சை இல்லாமலே வாழ முடிகிறதோ அவ்வளவு நாட்கள் வீட்டிலேயே பார்த்துக்கொள்ளலாமா என்ற முடிவையும் ஜூலியானாவின் பெற்றோரையே எடுக்க சொல்லி இருக்கின்றனர்.

தன் குழந்தையின் நோய் குறித்தும், சிகிச்சை குறித்து அவர்கள் சேர்ந்து எடுத்த முடிவை குறித்து ஜூலியானாவின் தாய் ஒரு வலைப்பக்கம் தொடங்கி, பதிவு செய்ய தொடங்கினார். தொடர்ந்து சிகிச்சை அளிக்கலாமா வேண்டாமா என்பது குறித்து மகள் ஜூலியானாவிடம் தான் பேசியவற்றை மூன் தன் வலைப்பக்கத்தில் இவ்வாறு பதிவு செய்திருக்கிறார்.

"ஜூலியானா, அடுத்த முறை உடம்பு சரியில்லாமல் போனால் மருத்துவமனை போகனுமா"

"வேண்டாம் மா"

"சரி. மருத்துவமனை வேண்டாம். ஆனால் வீட்டிலேயே இருந்தால் உடல்நலம் இன்னும் மோசமாகும். கொஞ்ச நாட்களிலேயே சொர்க்கத்திற்கு போக வேண்டும். உனக்கு புரிகிறதா ஜூலியானா ? சொர்க்கத்திற்கு போகும்முன் இறப்பை சந்திக்க நேரிடும்."

"ம்ம் . புரிகிறது. பரவாயில்லை."

"அப்படியென்றால் இப்போதைக்கு நீ மட்டும் தனியாக தான் சொர்க்கம் செல்ல முடியும். அம்மா சில வருடங்கள் கழித்து பின்னால் தான் வருவேன் பரவாயில்லையா?"

"சொர்க்கத்தில் யாராவது இருப்பார்களா? நான் தனியாக இருக்க மாட்டேனே?"

"இல்லை. நீ தனியாக இருக்க மாட்டாய்."

"அம்மா..சில பேர் என்னை போல சீக்கிரமே சொர்க்கம் சென்று விடுவார்களா?"

"ஆம் ஜூலியானா. யாருக்குமே தெரியாது. யார் எப்போது எப்படி சொர்க்கம் செல்ல போகிறார்கள் என்று"

(தன் தம்பியை காட்டி) "அலெக்ஸ்ஸூம் என் கூட சொர்க்கத்திற்கு வருவானா?"

"இல்லை ஜூலியானா. அனைவரும் தனித்தனியாகத் தான் சொர்க்கம் செல்ல முடியும் . உனக்கு பயமாக இருக்கிறதா?"

"பயமா? இல்லை அம்மா. சொர்க்கம் பிடிக்கும். ஆனால் சாக பயமாக இருக்கிறது."

இவ்வாறான தன்மகளுடன்நடந்த உரையாடல்களை மூன் பதிவு செய்ய தொடங்கிய முதலே ஊடகங்களின் கவனம் ஜூலியானாவின் மீதும் அவளின் நிலை மீதும் விழுந்தது. நாடு முழுக்க இந்த பதிவுகள் பகிரப்பட்டன. பலரும் ஜூலியானாவிற்காக பிரார்த்தனை செய்து கொண்டனர்.

ஜூலியானாவின் பெற்றோர் தொடர்ந்து தன் மகளிடம் பேசி அவர்களால் முடிந்த வரை இறப்பு பற்றிய புரிதலை அவளுக்கு ஏற்படுத்தி வந்துள்ளனர். அதன் விளைவாக, அடுத்த முறை நோய் காரணமாக உடல்நிலை குன்றும் போது மருத்துவமனை செல்லக்கூடாது என்பதில் தெளிவாக இருந்தனர் ஜூலியானாவும் அவள் பெற்றோரும்.

இந்நிலையில் நோயின் தீவிரத்தால் ஜூலியானாவின் உயிர் பிரிந்தது.

இது குறித்து ஜூலியானாவின் தாய் மூன் தனது வலைப்பக்கத்தில் மிகவும் உருக்கமாக இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

"ஒரு குழந்தையைக் காப்பாற்ற தேவையான அனைத்தையும் நாங்கள் செய்யவில்லையோ எனும் ஆதங்கத்தில் பலர் எங்கள் முடிவை விவாதிப்பது புரிகிறது. ஆனால் நிச்சயம் குணப்படுத்த முடியாது என்று தெரிந்த பின்னர் குழந்தை ஒவ்வொரு நாளும் சிகிச்சையால் நலிவடைந்து வேதனை அடைவதை கண்முன்னே பார்த்துக் கொண்டிருக்கும் பெற்றோருக்கு நாங்கள் எடுத்த முடிவு எவ்வளவு மேலானது என்பது புரியும். மேலும் ஜூலியானாவின் விருப்பமும்இதுவே. எங்கள்கதையை நாங்கள் பகிர்ந்து கொள்ள காரணம், தீரா நோய்களுடைய குழந்தைகளின் பெற்றோர்களின் மனவேதனையை உலகிற்கு புரியவைக்கவே."

ஜூனியர் விகடன்

# கல்வி முறைமையில் ஒரு புரட்சி!



அந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆசிரியராவது என்பது கனவு. அது பெரிதும் கொண்டாடப்படும் பணி மட்டுமல்ல, மிகுந்த மதிப்பு வாய்ந்த பதவியும்கூட. ஆசிரியர்களின் சராசரி மாத வருமானம் டாக்டர்கள், என்ஜினியர்களுக்கு நிகரானது. அனுபவம், முதிர்ச்சி அடிப்படையில் அவர்களது வருமானமும் உயர்ந்து கொண்டே வரும்.

ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம். அந்த நாடு. பின்லாந்து. இன்னும் சிலபல ஆச்சரியங்கள் இருக்கின்றன.

பின்லாந்தில் ஒரு குழந்தை பள்ளியில் சேரும் வயது என்ன தெரியுமா? ஏழு. ஆம் ஏழுவயதில் தான் கல்வி கற்கவே தொடங்குகிறார்கள். அதுவரை குழந்தைகள், குழந்தைகளாகவே இருக்கின்றனர். கல்வி ஓர் எளிமையான விளையாட்டு போல அவர்களுக்குள் புகுத்தப்படுகிறது.

முக்கியமாக நாம் பின்பற்றும் மனப்பாட முறை கல்வி கிடையாது. முதல் ஆறு வருடங்களுக்கு கற்கும் திறமையை அளவிடுதல் இல்லை, தேர்வு இல்லை. அதுவும் தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி அளவில் வீட்டுப்பாடம் என்பதுகூட அறவே கிடையாது.

இவ்வாறு ஒன்பது வருடங்கள் வரை பள்ளிப்படிப்பைத் தொடர்கின்றனர். பதினாறு வயதாகும் போது தான்தேர்வு என்ற ஒன்றையே எதிர்கொள்கின்றனர். அதன் பின்னர் தனக்கான துறையை தேர்ந்தெடுத்து பயிலும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

மாணவர்கள் அறிவானவர்கள் / திறமை குறைந்தவர்கள் என தகுதி பிரிக்கப்படுவதில்லை. அனைவருக்கும் ஒரே கல்வி முறை / கல்வியறைதான். கற்கும் திறன் குறைந்த மாணவர்களுக்கு அதை மேம்படுத்தும் விதத்தில் சற்று அதிக உதவிகள் மட்டும் செய்து தரப்படும்.

முதல் ஆறு வருடங்களுக்கு ஒரே ஆசிரியர். அந்தக்குழந்தைகளின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு, நெறிப்படுத்தி, கல்வி யைப் புகுத்தி வழி நடத்துதல் அவரது கடமை!

அதிகபட்சம் ஒரு நாளில் நான்கு வகுப்புகள் மட்டுமே நடைபெறும். அதிலும் வகுப்புகளுக்கிடையே ஒரு மணி நேரம் இடைவெளி விடப்படும். ஆசிரியர்கள் வகுப்பறைகளில் செலவிடும் நேரம் எவ்வளவு தெரியுமா? வெறும் நான்கு மணி நேரம்தான்.

வகுப்பறையில் அதிகபட்சம் பதினாறு மாணவர்களே இருப்பர். வெறுமனே சொல்லித்தருதலை விட செயல்முறைக் கல்வியே அதிகம். எனவே, நிஜ உலகில் நாம் செய்யும் (!) சமைத்தல், சுத் தம் செய்தல் முதற்கொண்டு எல்லா அடிப்படை வேலைகளையும் கற்றுத் தெளிகின்றனர்.

படைப்பாற்றலுக்கே அதிக முக்கியத்துவம். கற்றுக்கொள்வதை தனித்திறமையுடன் மேம்படுத்த போதிய ஊக்குவிப்பு, ஆசிரியர்களால் வழங்கப்படும். மாணவர்களுக்குள் போட்டியை உண்டாக்காமல், குழுவாக இணைந்து வெற்றி காணும் வழிமுறைகளே போதிக்கப்படுகின்றன.

முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் மட்டுமே ஆசிரியராக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களில் சிறந்து விள்ங்கும் பத்து சதவிகிதத்தினரே ஆசிரியராக முடியும். ஆசிரியர்கள் தங்களது தகுதியை உயர்த்திக்கொண்டே இருத்தல் அவசியம். இதனால் அவர்களது தகுதி மேம்பாட்டுக்காக வாரத்தில் இரண்டு மணி நேரம் செலவிடுகிறார்கள்.

அனைத்துப் பள்ளிகளுக்கும் அரசால் நிதியுதவி செய்யப்படுகின்றன. ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சிகள், அரசினால் நிதியுதவி செய்யப்பட்டு அளிக்கப்படுகின்றன. மாணவர்களுக்கான உணவு, மருத்துவ வசதி போன்றவை முற்றிலும் அரசாலேயே அளிக்கப்படுகின்றன.

அரசின் பாடத்திட்டத்தில் வழிமுறைகள் மட்டுமே உண்டு. அதற்கான பயிற்சித் திட்டத்தை அந்தந்த ஆசிரியரே அவரது விருப்பப்படி வகுத்துக் கொள்ள வேண்டும். அவர் தம் மாணவர்களின் வளர்ச்சிக்கு அவர்களே பொறுப்பு. நம்பிக்கையே இந்த எளிமையான வழிமுறையை கட்டமைத்து வழி நடத்துகிறது!

யாருக்கும் யார் மீதும் சந்தேகம் இல்லை. இது நடக்குமா, ஒழுங்காக செய்கிறார்களா என சந்தேகக் கண் கொண்டு பார்க்காமல், அனைவரும் தன்னிச்சையாக வழிமுறைகளை பின்பற்றுகிறார்கள்.

மாணவன், தன் ஆசிரியர் தன்னை நல்ல முறையில் வழி நடத்துவார் என நம்புவது போல, மாணவன் முழு அர்ப்பணிப்போடு தன்னைத் தருவான் என ஆசிரியரும் நம்புகிறார். அதற்கேற்ற சூழ்நிலையும் சுதந்திரமும் அளிக்கப்படுகிறது. சமூகம், "இந்த அரசு நல்ல கல்வியை தர அடிப்படை வசதிகளை செய்து தரும்" என நம்புகிறது. இந்த நம்பிக்கை மிகச்சிறந்த முறையில் வேலை செய்கிறது.

ஜூனியர் விகடன்



**ஆ**ண் உட்பட எல்லா உயிர்களையும் படைத்து விட்ட கடவுள் இறுதியாக பெண்ணைப் படைக்க ஆரம்பித்தார்.ஒரு நாள் இரு நாள் அல்ல, தொடர்ந்து 6 நாட்களாக பெண்ணை படைத்துக் கொண்டிருந்தார் கடவுள்.

இதைப்பார்த்துக் கொண்டிருந்த தேவதை ஒன்று ஏன் இந்த படைப்புக்கு மட்டும் இவ்வளவு நேரம் என்றது.

அதற்கு கடவுள், இந்த படைப்புக்குள் நான் நிறைய விடயங்களை ஸ்டோர் செய்ய வேண்டும். இந்த பெண் படைப்பு பிடித்தது, பிடிக்காதது என்று எதையும் பிரிக்காமல் கிடைப்பதை சாப்பிட்டாக வேண்டும். அடம்பிடிக்கும் குழந்தையை நொடியில் சமாளிக்க வேண்டும்.

சின்ன காயத்திலிருந்து உடைந்து போன மனது வரைக்கும் எல்லாவற்றுக்கும் அவள் மருந்தாக இருக்க வேண்டும். அவளுக்கு உடம்பு சரியில்லாத போதும் அவளே அவளை குணப்படுத்திக் கொண்டு ஒரு நாளைக்கு 18 மணி நேரம் உழைக்க வேண்டும். இது அத்தனையும் செய்ய அவளுக்கு இரண்டே இரண்டு கைகள் மட்டும் தான் இருக்கும் என்று விளக்கமாகச் சொன்னார்.

இது அத்தனைக்கும் இரண்டே கை மட்டுமா என்று ஆச்சரியப் பட்டது தேவதை. ஆர்வத்துடன் இலேசாக பெண்ணைத் தொட்டுப் பார்த்து விட்டு ஆனால் இவளை ரொம்ப மென்மையாக படைத்திருக்கிறீர்களே? என்றது தேவதை.

அதற்கு கடவுள் இவள் உடலளவில் மென்மையானவள். ஆனால் மனதளவில் ரொம்ப பலமானவள். அதனால் எல்லா பிரச்சினைகளையும் சமாளித்து விடுவாள். அது மட்டுமல்ல அவளால் எல்லாப் பாரத்தையும் தாங்க முடியும். கஷ்டம், அன்பு, கோபம் என்று எல்லா உணர்வுகளையும் அவளுக்குள்ளேயே அடக்கிக் கொள்ளத் தெரியும்.

கோபம் வந்தாலும் அதை சிரிப்பு மூலமாக உணர்த்துகின்ற தன்மை இந்தப் படைப்பிடம் உண்டு. தனக்கு நியாயமாகப்படுகிற விடயத்துக்காக போராடி ஜெயிக்கவும் செய்வாள். மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்காமல் அன்பை மட்டும் கொட்டுவாள் என்றார்.

ஓ இந்தளவுக்கு பெண்ணால் யோசிக்க முடியுமா என்று தேவதை கேட்டது?

எல்லா விடயங்களைப் பற்றியும் யோசிக்க மட்டுமல்ல அவற்றுக்கு தீர்வையும் அவளால் சொல்ல முடியும் என்று விபரித்தார் கடவுள்.

அந்த தேவதை பெண்ணின் கன்னங்களை தொட்டுப் பார்த்து விட்டு இவள் கன்னத்தில் ஏதோ வழிகிறதே என்றது.

அது அவளுடைய கண்ணீர், அவளுடைய சந்தோஷம், துக்கம், கவலை, ஆச்சரியம் என்று எல்லா உணர்வுகளையும் வெளியே காட்டுகிற விடயம் அது என்று பதிலளித்தார் கடவுள்.

ஆச்சரியமான தேவதை "உங்க படைப்பிலேயே சிறந்தது இது தான். இந்த படைப்பில் எந்த குறையுமே கிடையாதா" என்றது தேவதை. தன்னுடைய மதிப்பு என்னவென்று அவளுக்கு எப்போதுமே தெரியாது!•

## வலைத்தள உலா



**காதலி :** எனக்கு ஒரு பெரிய பிரச்சினை டார்லிங்....

**காதலன் :**என்னடா செல்லம்?

**காதலி :**என் வீட்ல ஒரு எலியைப் பார்த்தேன்....

**காதலன்:** ஓ....அது சின்னப் பிரச்சினை!ஜஸ்ட் ஒரு எலிப் பொறி வச்சுட்டாப்போச்சு.....

**காதலி :**எங்க வீட்ல எலிப் பொறி இல்லையே ....

**காதலன்:**அதனால்என்ன.. .. புதுசா ஒண்ணு வாங்கிட்டாப் போச்சு....

**காதலி:**எங்கிட்ட இப்போ பணம் இல்லையே....

**காதலன்:** நான் வாங்கித்தாரேன்!

**காதலி:** சுப்பர்... தாங்ஸ்!

**காதலன் :** அதுல கொஞ்சம் பிரெட் துண்டு வச்சுடு.. .அப்பத்தான் எலி வந்து மாட்டிக்கும்!

**காதலி:** எங்க வீட்ல பிரெட் இல்லையே..!

**காதலன்:**நான் வாங்கித்தாரேன்...பிரெட் மேல கொஞ்சம் ஒயில் தடவி வச்சுடு....ஓகேவா?

**காதலி:** ஆனா எங்க வீட்ல ஒயில் இல்லையே.....

**காதலன் :** பரவாயில்ல ...கொஞ்சம் சோறு வடிச்ச கஞ்சிய ஊத்திடு. ஓகேவா?

**காதலி:** ஓகே தான் ...பட் , எங்க வீட்ல அரிசி இல்லையே..!

**காதலன் :** (டென்சனாகி) ஒண்ணுமில்லாத அந்த வீட்ல அந்த அறிவு கெட்ட எலி அப்பாடி எந்த ஆணியப் புடுங்குதோ...!

---

**டீச்சர்:**வருண்நீபெரியவனானதும்என்னவாக ஆசைப்படுறே?

**வருண்:** டீச்சர் , நான் பெரிய பணக்காரனாக ஆசைப் படுறேன்...ஒவ்வொரு பெரிய நகரத்திலும் என்னோட பிசினஸ் நடக்கணும். எல்லா நாட்டிலும் விலையுயர்ந்த பங்களா வாங்கணும்....எப்பவும் ஃபிளைட்ல தான் போகணும்..... தங்கிறதெல்லாம் 5ஸ்டார் ஹோட்டல்ல தான் .....எனக்கு சேவகம் செய்ய எப்பவும் பத்து வேலையாட்கள் கூடவே இருக்கணும் ....உலகத்திலேயே விலை மதிப்பில்லாத வைரக்கல் என்கிட்ட இருக்கணும்...



**டீச்சர்:** போதும் வருண்! ஸ்ருடன்ஸ், இனிமே சுருக்கமா ஒரு வரியில தான் சொல்லணும்.....ஓகே? பூமிகா, நீ சொல்லு ...நீ என்னவாக ஆசைப்படுறே?

**பூமிகா:**வருணுக்கு மனைவியாக வரணும்.




○ **மி**கப்பெரிய முட்டை நெருப்புக்கோழியின் முட்டை

○ மிகச்சிறிய முட்டை ஹம்மிங் பறவையின் முட்டை

○ ஈமு கோழி இடும் முட்டையின் நிறம் பச்சை

○ கோழி முட்டைகளை செயற்கையாக அடைகாக்க தேவைப்படும் வெப்பம் 37.5 டிகிரி செல்சியஸ்

○ முதலை ஒரு.தடவை இடும் முட்டைகளின் எண்ணிக்கை சுமார் நாற்பது.

○ முதல்முதலாக விண்வெளிக்கு முட்டைகளை எடுத்துச் சென்ற விண்கலம் டிஸ்கவரி (1969)

○ ஆசியாவின் முட்டைப் பாத்திரம் எனப்படும் பகுதி ஆந்திரம்.

○ உலகில் மிக அதிகம் முட்டை உற்பத்தி செய்யும் நாடு சீனா

○ முட்டைகளைப் பற்றிய அறிவியல் படிப்பு (OOLOGY)

○ கோழி முட்டை விரிந்து குஞ்சு பொரித்து வெளியில் வர ஆகும் காலம் 21 தினங்கள்

○ அழுகிய முட்டையின் துர்நாற்றத்துக்குக் காரணம் ஹட்ரஜன் சல்ஃபைடு •

## என்னங்க என்றால்...

↗ **எ**ன் மனைவி என்னை பாத்றூமில் நின்று என்னங்க என்று அழைத்தால் பல்லி அடிக்க என்று அர்த்தம்.

↗ ஹோட்டலில் என்னங்க என்று அழைத்தால் பில்லைக் கட்டு என்று அர்த்தம்

↗ கல்யாண வீட்டில் என்னங்க என்றால் தெரிந்தவர் வந்திருக்கிறார் வா என்று அர்த்தம்.

↗ துணிக்கடையில் நின்று என்னங்க என்றால் தேடிய புடைவை கிடைத்து விட்டது என்று அர்த்தம்.

↗ வண்டியில் செல்லும் போது என்னங்க என்றால் பூ வாங்க வேண்டும் என்று அர்த்தம்

↗ வைத்தியசாலையில் என்னங்க என்றால் டாக்டரிடம் பேச வேண்டும் என்று அர்த்தம்

↗ வெளியே பார்த்து என்னங்க என்றால் அறியாத ஆள் வாசலில் என்று அர்த்தம்

↗ பீரோ முன் நின்று என்னங்க என்று அழைத்தால் பணம் வேண்டும் என்று அர்த்தம்

↗ சாப்பாட்டை எடுத்து வைத்து என்னங்க என்றால் சாப்பிட வர்றியா? இல்லை லப்டொப்பை உடைக்கவா என்று அர்த்தம்

↗ கண்ணாடி முன் நின்று என்னங்க என்றால் நகை அழகா என்று அர்த்தம்

↗ நடக்கும் போது என்னங்க என்றால் விரலைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அர்த்தம்

↗ கடைசி மூச்சின் போது என்னங்க என்றால் என்னையும் அழைத்துச் செல்லுங்கள் என்று அர்த்தம் •

# உலகின் மிக பயங்கரமான தலைவர்கள் !

தனி மனிதர் மோசமாக நடந்து கொண்டால் அது அவரைத் தவிர்த்து ஓரிரு வரைப் பாதிக்கலாம். ஆனால் நாட்டை ஆளும் தலைவர்களே மோசமாகநடந்துகொண்டால் அதன் பாதிப்பு எப்படியிருக்கும் என்பதற்கு மக்கள் மீது இழைக்கப்பட்ட பல்வேறு கொடுமைகளை வரலாறு வழியே அண்மைக் காலம் வரை காணலாம். முட்டாள்த்தனமும் மூர்க்கத் தனமுமாய் ஈவு இரக்கமற்றவர்களாக செயற்படும் தலைவர்களின் ஆட்சியில் கொடுமைகளுக்கும் படுகொலைகளுக்கும் பஞ்சமிராது. காட்டாட்சி நடத்திய தலைவர்களின் அணிவகுப்பு இதோ...

**அட்டிலா தி ஹன் (கி.பி-434-453**

ஹங்கேரி நாட்டின் ஒரு பகுதியில் ஆட்சி செய்த தன் சொந்த சகோதரனையே



கொன்று தன்னை மகாராஜாவாக உயர்த்திக் கொண்டவர் அட்டிலா! பிறகு முழு ஹங்கேரி, ஜேர்மனி,ரஷ்யா, உக்ரைன், பால்கன் போன்ற பகுதிகளையும் கைப்பற்றி கொடுங்கோல் ஆட்சி நடத்தி இவர் அரங்கேற்றிய அட்டூழியங்கள் ஏராளம்! நான் கடந்து சென்ற பகுதிகளில் புல்லின் பச்சைத் தளிர் கூட அதன்பின் வளராது என திகில் பஞ்ச் பேசி நாட்டை டர்ரியலாக்கியவர் அட்டிலா.

**செங்கிஸ்கான் (கி.பி.1206-1227)**

இளம் வயதில் பல ஆண்டுகள் அடிமையாக வாழ்ந்தவர் பிறகு மங்கோலிய மலை ஜாதிக்குழுக்களை இணைத்து அவர்களின் தலைவ



ராகி சிறிது சிறிதாக மத்திய ஆசியாவின் பல பகுதிகளையும் சீனாவையும் கைப்பற்றி ஆட்சி செய்தவர்! முரட்டுத்தனத்துக்கு மறுபெயர் இவர் தான்.மக்களை சவட்டமாக நிறுத்தி அசால்ட்டாக கொன்று தள்ளுவது இவருடைய பொழுது போக்குகளில் ஒன்று என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

**தைமூர் (கி.பி-1370-1405**

மேற்கு ஆசியாவில் தனது இராணுவ வலிமையால் இன்றைய ஈரான், சிரியா முதல் ஆப்கானிஸ்தான் வரை பல பகுதிகளை ஆட்டி வைத்த மனிதர்.மனிதர்களை ஒருவர் மீது ஒருவர் நிற்க வைத்து சீமெந்து பூசி கோபுரம் எழு



ப்பி டெரர் காட்டியவர். அது மட்டுமா? தனக்கு எதிரான புரட்சியாளர்களை படுகொலை செய்து 70 ஆயிரம் மனிதத் தலைகளை வைத்து ஒரு கோபுரம்அமைத்துதான் வேறரேஞ்ச் என நிரூபித்தார்.

**ராணி முதலாம் மேரி (கி.பி.1553-1558)**

மன்னர் எட்டாம் ஹென்றியின் ஒரே மகள்! இவர் பதவிக்கு வந்த போது பிராட்டஸ்டண்ட் மற்றும் கத்தோலிக்கர்களிடையே கடும் மனக்கசப்பு நிலவி வந்தது. மேரி பதவி ஏற்கும் வரை இங்கிலாந்து பிராட்டஸ் டன்ட் நாடாகத்தான் இருந்தது. ஆனால் மேரி



தீவிர கத்தோலிக்க வெறியர் அதிகாரம் கிடைத்த உடனே பிரிட்டனை கத்தோலிக்க நாடாக அறிவித்து செயற்பட்டார். இதனால் இரு பிரிவினரிடையே நடந்த நீயா? நானா? போராட்டத்தில் இரத்தக் களேபரம் நிகழ்ந்தது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் இதை வைத்தே மேரி ஏராளமான பிராட்டஸ்டன்ட்டுகளைக் கொன்றொழித்தார். அதன் பின் இவரை Bloody mary என அழைக்கலாயினர்.

**ஜோசப்ஸ்டாலின் (கி.பி-1922-1953)**


ஸ்டாலின் தொழிற் புரட்சியையும் தொழிலகத்தையும் மையமாக வைத்து செயற்பட்டார். அவற்றிற்காக மகா கெடுபிடியாக நடக்க ஆரம்பித்ததில் நாட்டில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. இதனால் கடும் எதிர்ப்பு கிளம்பிய போது பல்லாயிரம் மக்களை இராணுவ முகாம்களில் அடைத்துக் கொடுமை செய்ததாக புகார் எழுந்தது. அறிவு ஜீவிகள் அரசு இராணுவம் என எல்லா



மட்டத்திலும் பெரும் களையெடுப்பு என்ற பெயரில் மரண பயத்தை மக்கள் மனதில் ஏற்படுத்திய மிரட்டல் நாயகன் இவர்.

**அடால்ப் ஹிட்லர் (கி.பி.1933-1945)**

1941 இல் ஹிட்லரின் படைகள் ஐரோப்பாவில் அநேகமாக எல்லா நாடுகளையும் மற்றும் வட ஆபிரிக்காவில் பல பகுதிகளையும் கைப்பற்றின.யூதர்கள், ஸ்லோவாக்கியர்கள், ஜிப்சிகள், ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் அரசியல் எதிரிகள் என பலரையும் வதைமுகாம்களுக்கு



அனுப்பி அங்கு நிகழ்த்தப்பட்ட கொடுமையில் பலர் இறந்தனர். சைவஉணவு மட்டுமே உண்ணும் ஹிட்லரின் ஆட்சியில் மட்டும் 11 மில்லியன் மக்கள் இப்படி கொல்லப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

**இடி அமீன் (கி.பி-1971-1979)**

உகண்டாவில் தேர்த லில் ஜெயித்து வந்த மக்கள் அரசை டிஸ்மிஸ் செய்துவிட்டு இரா



ணுவப் புரட்சி மூலம் ஆட்சியைப்பிடித்தார். அடுத்த 8 ஆண்டுகள் உகண்டாவை உண்டு இல்லையென ஆக்கினார். 3இலட்சம் மக்களை ஈவு இரக்கமில்லாமல் கொன்றார். இந்தியர் மற்றும் பாகிஸ்தானியர்களின்சொத்துக்களைபிடுங்கிக் கொண்டு நாட்டை விட்டு விரட்டினார். இராணுவத்திற்காக அதிகம் செலவழித்தால் நாடு கடுமையான பொருளாதாரத் தட்டுப்பாட்டில் திணறியது.

**அகஸ்டோபினோசெட் (கி.பி.1973-1990)**

1973 இல் சிலி அரசைத் தூக்கி எறிந்து விட்டு அமெ



ரிக்கா உதவியுடன் ஆட்சியை பிடித்தார். இவர் ஆட்சியில் பலர் காணாமற்போயினர். 35 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். மனித வுரிமை மீறல்களுக்காக சர்வ தேச நீதிமன்றத்தால் விசாரிக்கப்படவிருந்தார். ஆனால் அதற்கு முன் இறந்து விட்டார்.



இப்படி செய்ய யாருக்கு தில் வரும்?






**கணவன்:**-பேப்பர்ல படிச்சியா? நலப்பிரச்சினைகளுக்கான 15 சதவீத பெண்கள் மருந்து எடுத்துக்கறாங்கலாம்!
**மனைவி:**-அதுக்கு என்ன இப்போ?
**கணவன்:**-இது எவ்வளவு டேஞ்சரான நியூஸ் தெரியுமா?
**மனைவி:**-ஏன்?
**கணவன்:**-மீதி 85 சதவிகித பெண்கள் மருந்தே எடுத்துக்காம திரியுறாங்களே!



இந்த இரவு நேரத்தில் மேடையில் நான் மட்டும் தனியாக இருக்க பயமாய் இருக்கிறது...ஆதலால் நான்கைந்து பேராவது எங்கிருந்தாலும் உடனே மேடைக்கு முன்வாருங்கள் பிளீஸ்...



உனக்கு ஏன் லைசென்ஸ் தரமாட்டேன்னு சொன்னாங்க..?எட்டு போட்டுக் கிட்டே செல்பி எடுக்க ட்ரை பண்ணேன்!



தலைவரோட பேச்சுக்கு எவனும் கை தட்ட மாட்டேங்கறானே..ஏன்?
அவருக்கு சவுண்ட் அலர்ஜின்னு எவனோ வதந்தியைக் கிளப்பி விட்டிருக்கான்




எதுக்கு டாக்டர் ஜுரத்துக்குப் போய் ஹார்ட்டை செக் பண்றீங்க...?
நான் சொல்ற பீஸை உங்களால தாங்க முடியுமான்னு செக் பண்ண வேண்டாமா...?



நான் நாட்டுக்காக பெற்றோலை மிச்சப்படுத்துறேன்...?எப்படி...?
தினமும் ஆபீஸுக்கு யார் வண்டியிலயாவது லிஃப்ட் கேட்டுட்டு போயிடுவேன்!

**மகன்:**-கல்யாணம் செஞ்சா எவ்வளவு செலவாகுமப்பா?
**அப்பா:**-தெரியலப்பா... இன்னமும் செலவு செஞ்சுகிட்டு தான் இருக்கேன்!!!





ஒரு வருடமாக நீங்க வாடகை கொடுக்கல... ஞாபகம் இருக்கா?
எனக்கு உங்களையே ஞாபகம் இல்லை. நீங்க யாரு...?
அடப்பாவி நான்தான்யா உங்க ஹவுஸ் ஓனர்!

தலைவர் இன்னைக்கு பேசற கூட்டத்துல என்ன ஸ்பெஷல்?
மேடையில எதிர்க்கட்சிக்காரங்க வீசிற முட்டைய எல்லாம் சுடச் சுடச் ஆம்லெட்டா போட்டுத் தர்றாங்களாம்...!

நோயாளி:- தினமும் ஒரு பச்சை முட்டை சாப்பிடணுமா என்னால முடியாது டாக்டர்.
டாக்டர்:-ஏன் முடியாது?
நோயாளி:-ஏன்னா எங்க கோழி வெள்ளை முட்டைதான் போடும்.



# பெயர்(......)

## சிறுகதை

வைத்தியசாலையின் இருபத்தி நான்காவது இலக்க விடுதியின் முன்பாக அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்த புகழரசியின் எண்ணம் ஒரே நிலையில் இருக்கவில்லை.உள்ளே அவர் எப்படி இருக்கிறார் என்ற பதை பதைப்பில் மனம் அலைந்து கொண்டிருந்தது.

கடவுளே என்ர அவருக்கு ஒண்டும் நடக்கக்கூடாது.நான் அவரில் உயிரையே வைச்சிருக்கன். என்ர வயித்தில இருக்கிற குழந்தை தன் அப்பாவைப் பார்க்கோணும். எப்படியாவது கடவுளே அவரைக்காப்பாத்து. வைத்தியசாலையின் சுவரில் கொழுவியிருந்த மணிக்கூட்டில் நேரத்தை சரி பார்த்தாள் புகழரசி. எனினும் பார்வையாளர்கள் பார்வையிடும் நேரம் பிற்பகல் நான்கு மணியாக இருந்தது.

இன்னும் நேரங்கிடக்கு. மூத்த மகளும் பள்ளிக் கூடத்தால வரப்போறாள். அம்மாவை காணல்ல எண்டு தேடப்போறாள்.மனம் பதை பதைத்தது. தனது தாய்க்கு தொலைபேசியில் இருந்து அழைப்பு எடுத்தாள். அம்மா நான் ஆஸ்பத்திரில நிக்கிறன்.அவரை ஐசியூல வைச்சிருக்கிறாங்கள்.என்ர மகள் தமிழினி பள்ளிக் கூடத்தால



வரப்போகிறாள். ஒருக்கா பள்ளிக்கூடத்துக்கு போய் கூட்டிற்று வாங்கோ. நோயாளர்களை பார்வையிடுவதற்கு நேரம் இருப்பதால் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இருக்கும் கதிரையில் அமர்ந்து கொண்டாள்.

"அங்கேதான் புகழரசியின் ஆரம்பப்பள்ளி தோழியாக இருந்த கயல்விழியும் அந்த வைத்தியசாலையில் மருத்துவ தாதியாக வேலை செய்கின்றாள்.கயல்விழி புகழரசியை கண்டுவிட்டு ஏன் புகழரசி யாருக்கு சுகமில்லை? என்ரை இவருக்குத்தான் வேலைக்கு போயிற்று வாறன் எண்டு போனவர் கிபிர் அடிச்சதில இவருக்கும் பலத்த காயம். ஐசியூவில வைச்சிருக்கிறாங்கள்.யார் நிலவன் அண்ணாவுக்கோ?ஓம் கயல்விழி. நேற்றும் நிலவன் அண்ணாவைக் கண்டனான். அண்டைக்கு இரணைப்பாலைக்கு வந்திருந்தவர்.மரம் நடுகை நாள் என்பதால் வந்து எங்கட நூலகத்துக்கு பக்கத்தில் மரம் நட்டுவிட்டு போனவர். நிலவன் அண்ணா எவ்வளவு நல்ல அண்ணா,பெரிசா ஒருதரோடும் கதைக்கமாட்டார். ஏதாவது கதைச்சாலும் ஒன்று ரெண்டு வசனத்தோட கதையை நிறுத்தி போடுவார்.யாரோடும் கதைக்கேக்க சுத்த தமிழ்ல தான் கதைப்பார்.அவற்ர பேச்சில் நேர்மை இருக்கும். எல்லாச்சிறுவர்களும் கல்வி கற்கோனும் எண்டு விரும்புறவர்.எங்கட தேசம் எப்பவும் பசுமையா இருக்கோனும் எண்டு அடிக்கடி எங்களுக்கு சொல்லுவார்.சாதிப்பாகுபாடுகளை அவர் வெறுத்தார். யாரோடும் பழகும்போது தம்பி,தங்கச்சி,அக்கா, அண்ணா எண்டுதான் அழைச்சு பழகுவார்.நிலவன் அண்ணாவை எனக்கு தெரியும். மெல்லிய உருவம் தான். ஆனால் அவர் சுமந்த கனவுகளும் இலட்சியங்களும் வித்தியசமானவை. அவருடைய முகநூலை ஒருநாள் தட்டிப்பார்த்த போது தான் அவருடை பாதையை என்னாலும் புரிந்து கொள்ள முடிந்தது. எப்போதும் எங்கள சந்திக்கேக்க சொல்லுவார், நாங்கள் எப்பவும் கஷ்டப்பட்டவங்களுக்கு உதவி செய்ய வேணும்.போரால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வி வளர்ச்சிக்காய் பாடுபட வேண்டும்.எங்களுடைய தேசத்தில் இருக்கின்ற வறண்ட நிலங்களை கொத்தி, பண்படுத்தி தன்னிறைவு காண வேணும். அந்நிய நாடுகளிட்ட நாங்கள் தங்கியிருக்கக் கூடா. ஒரு அப்பளுக்கற்ற நேர்மையான இலட்சியவாதி, வார பத்திரிகைகளில் அவருடைய படைப்புகள் பாமர மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை.அவர் பயணிக்கின்ற பாதை வித்தியாசமானவை.

கடவுளே நிலவன் அண்ணாவுக்கு ஒண்டும் நடக்கக் கூடாது. புகழரசி கவலைப் படாதே. நிலவன் அண்ணாவுக்கு ஒன்றும் நடக்காது. நேரம் மதியம் 12 மணியாகி விட்டது. புகழரசி வாவன் முன்னுக்கு இருக்கின்ற 'ஒளியரசி' சாப்பாட்டுக் கடையில சாப்பிடுவம். அவற்றை உடல் நலத்தைப் பற்றி ஒண்டும் தெரியல. எனக்கு பசிக்கேல்ல நிலவனைப் பற்றி நினைக்கவே தலை விறைக்குது கயல்விழி.

ஆஸ்பத்திரி வீதியால் ஒரு சில வாகனங்கள் மட்டுமே செல்கின்றன. வீதி வெறுச்சோடிக்கிடக்கிறது.இடையிடையே நாய்களின் ஊளையிடல்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. அம்புலன்ஸ் வண்டிகள் அடிக்கடி ஓடித் திரிகின்றன.

அம்மா கையில என்ர மகள் தமிழினியை கூட்டிற்கு வாசல்ல வாற போல! கயல்விழி ஒருக்கா கூட்டிற்றுவா. அம்மா, அம்மா அப்பாக்கு என்ன நடந்தது? நான் அப்பாவைப் பார்க்கோணும். தமிழினியின் அழுகைச் சத்தத்தால் நோயாளர்கள் எல்லாம் தமிழினியை திரும்பிப் பார்த்தார்கள்.

அம்மா நான் பள்ளிக் கூடத்துக்கு வெளிக்கிடேக்க அப்பா சொன்னவர் நான் வேலையால வரேக்க உனக்கு கறுத்த கொழும்பான் மாம் பழம் வாங்கிற்று வாறன் எண்டு. அப்பாவுக்கு என்ன நடந்தது? ஏன் அம்மா என்னோட கதைக்காமல் இருக்கிறீங்கள்? தமிழினியின் அழுகையை புகழரசியால் அடக்க முடியவில்லை. மௌனமாக இருந்த புகழரசி மௌனத்தைக் கலைத்தாள். அப்பாவுக்கு சுகம் வரும் ஒண்டுக்கும் கவலைப்படாதே. ஆனால் தமிழினியால் அழுகையை நிறுத்த முடியவில்லை. விக்கலுடன் விம்மி விம்மி அழுதாள். தமிழினி அழுகையால் அவள் அணிந்திருந்த பள்ளிக் கூட வெள்ளைச் சீருடையை கண்ணீர்த் துளியும் மூக்கு நீரும் நனைத்து விட்டிருந்தது. அவள் தாயின் மடியில் படுத்துக் கொண்டாள்.சிந்திய கண்ணீர்த் துளியை தனது சேலைத் தலைப்பால் துடைத்து விட்டாள் புகழரசி.

நேரம் இரண்டு மணியாகியிருந்தது.புகழரசி சாப்பிடாட்டியும் பறவாயில்லை.இந்த சோடாவைக் குடியடி. தமிழினிக்கும் குடு.கடவுள் உன்னைக் கைவிட மாட்டார். கயல்விழி நிலவன் என்னில நல்ல பாசம். நாங்கள் புதுக் குடியிருப்பில,இருக்கேக்க இரண்டு பேரும் காதலிச்சுத் தான் கலியாணம் கட்டினனாங்கள். அவற்ர உதடு மூடிய புன் சிரிப்பும், அழகிய தமிழ்ப் பேச்சும் , இரக்க குணமும் தான் அவர் மீது எனக்கு ஈர்ப்பையும் மரியாதையையும் உண்டு பண்ணியது.அதைவிட அவர் எழுதுகின்ற புத்தகங்கள் எனக்கும் பிடிக்கும்.

எப்பவும் தமிழை பற்றித் தான் கதைப்பார். எங்கட மொழி பண்பாட்டை நாங்கள் எப்பவும் கட்டிக் காக்கோனும் புகழரசி. எனக்கு இப்பவும் ஞாபகம் இருக்கு.

நிலவன் ஒரு நாள் கதைக் கேக்க எங்கட வாழ்வு நிச்சயம் மற்றது. ஆனால் வாழும் போது எனது மண்ணையும் மக்களையும் இயற்கையையும் அதிகம் காதலிக்கின்றேன்.

நீ எப்போதும் உன் குழந்தைகளுக்கு எல்லாவற்றையும் சொல்லிக் குடு.புத்தகக் கல்வி மட்டும் வாழ்க்கையல்ல. அனுபவக் கல்வியையும் சொல்லிக்குடு. பிறப்பில் இருந்து இறப்பு குறுகிய காலம். நாம் தனிப்பட என்னத்தை செய்தோம் என்பது முக்கியமல்ல. சமூகத்துக்கு என்னத்தை செய்தோம் என்பது தான் முக்கியம். புகழரசி உன்னோடு பழகுகின்ற உன் சினேகிதிகளோடு கதைக்கின்ற போது உனது தாய் மொழியில் கதை, கலப்படமற்ற தமிழில் பேசு நிலவனின் சிந்தனைகள் வித்தியாசமானவை.

நிலவன் எங்களுக்கு ஒரு குறையும் வைக்கல. என்ன வீட்டுக்கு தேவையோ அதெல்லாம் வாங்கிற்றுவருவார். தமிழினியை கவனமாப் படிப்பிச்சு சமூகத்தில உயர்த்திக் காட்டோனும் எண்டு விரும்பினவர். எனக்கு ஒரு மகன் பிறந்தால் நான் நேசிக்கின்ற அந்த வழிகாட்டியின்ர பெயரை...வைக்கோணும்.இந்த பெயர் ஒரு வழிகாட்டியின்ர பெயர். இது தான் என்ர கனவும் இலட்சியமும் என்று சொன்னவர்.

உன்னோட கதைக்கக் கொண்டிருந்ததில நேரம் போனது தெரியல.என்னை ஒருக்கா 16 ஆம் வாட்டுக்கு வரட்டாம். நான் போயிட்டுவாரன் புகழரசி. ஒண்டுக்கும் கவலைப் படாத , ஒண்டுக்கும் யோசிக்காத. கடவுள் சில பேரை சோதிக்கிறது கூட. ஆனால் ஒருக்காலும் கைவிடமாட்டார்.நாங்கள் எப்பவும் மற்றவர்களுக்கு துன்பம் செய்யக்கூடாது எண்டு நினைக்கிற மனது கொண்டவர் நிலவன் அண்ணா. அவருக்கு ஒண்டும் நடக்காது. நான் போயிற்று வந்து 5.00 மணிக்கு வந்து சந்திக்கிறன்.

வைத்தியசாலையின் வாசலில் ஆட்கள் நிறைந்திருந்தனர்.தள்ளுப்படாம வரிசையில் நில்லுங்கோ. உங்களை ஒருத்தர் ஒருத்தராக உள்ளுக்கு விடுறன் என்று ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தரின் குரல். காற்று மெல்ல சிலு சிலுத்து மேனியைத் தழுவுகிறது. வாசலில் நிற்கின்ற வேப்ப மரம் மெல்ல அசைந்தாடு கிறது.வீசுகின்ற காற்று மண்ணை அள்ளிச் செல்கிறது.

இருபத்தி நான்காம் விடுதிக்குள் நகர்கின்றேன். தோளில் தமிழினியை சுமந்தபடி நிலவன் பேச்சு மூச்சு இல்லாம படுத்தி வைக்கப்பட்டிருந்தார்.நிலவன், என்ர நிலவன் புகழரசியால் அழ மட்டுமே முடிந்தது. வைத்தியர்களால் எதையும் கூற முடியவில்லை.நீங்கள் வணங்குகின்ற கடவுளை மட்டும் வணங்குங்கள் என்று சொல்லி விட்டார்கள்.திடீர் என நிலவன் வாய் திறந்து இரண்டு வார்த்தைகள் பேசினான். புகழரசி கவனம். பிள்ளை தமிழினியை கவனமாப் படிப்பி. எனக்கு ஒரே ஒரு ஆசை உன்ர வயித்தில இருக்கிற என்ர மகனுக்கு நான் நேசிக்கிற அந்தப் பெயரை வை. மண்ணையும் மக்களையும் நேசித்த பெயர். அதற்கு மேல் நிலவனால் எதையும் கதைக்க முடியவில்லை. கண் இமைகள் இரண்டையும் மூடிக் கொண்டான்.

திடீரென மருத்துவ தாதி புகழரசியின் முதுகில் தட்டினாள்.அப்போது தான் புகழரசிக்கு தனது கணவன் நிலவன் பற்றிய பழைய ஞாபகத்திலிருந்து விடுபட முடிந்தது.அப்போது மருத்து தாதி, பிள்ளைக்கு என்ன பெயர வைக்கப் போறீங்கள் புகழரசி? என்ர அவர் நிலவனுக்கு பிடிச்ச இந்தப் பெயரையே .... வைக்க போறன் அந்தப் பெயர்...எண்டா? அவர் ஒரு வழி காட்டி என சொல்லியபடி தன் குழந்தையை தூக்கி நெற்றியிலே முத்தமிட்டாள்.''நிலவன் அண் ணா மாதிரியே இருக்கு புகழரசி அக்கா'' மருத்துவ தாதியின் குரலைக் கேட்டபடி புன்னகைத்துக் கொண்டே வீடு நோக்கி புறப்பட தயாரானாள்...

ஆ.முல்லைதிவ்யன்

# கண்ணீரோடு முடிவுக்கு வந்தது

# மெஸ்ஸியின் சர்வதேச காற்பந்தாட்டம்



இந்த உலகின் தலைசிறந்த காற்பந்து வீரர் ரொனால்டோதான். ஏனெனில் மெஸ்ஸி வேற்றுகிரகத்தில் இருந்து வந்தவர் என்று தான் மொத்த உலகமும் அந்த ஐந்தரை அடி கோல் மெஷினைப் போற்றி வந்தது. எவராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவிற்கு 5 பாலன் டி ஓர் விருதுகள் வாங்கி காற்பந்து ஏணியின் உச்சாணிக் கொம்பில் நிற்பவர் இந்த லியோனல் மெஸ்ஸி. இவரது நுணுக்கங்களும் ஸ்டைலும் வீடியோ கேமில் கூட நம்மால் செய்ய முடியாதவை. காற்பந்தின் ஹிஸ்டரி தெரியாத நம்ம ஊரு யூத்ஸ் கூட மெஸ்ஸியின் பெயர் போட்ட ஜெர்சியை போட்டுக் கொண்டு அளப்பறை செய்வார்கள். காற்பந்து வெறியர்களின் ஒரு தீராக் கனவு மெஸ்ஸியை ஒருமுறையாவது தொட்டுப் பார்க்க வேண்டுமென்பதாகத்தான் இருக்கும்.

ஆனால் மெஸ்ஸியின் சொந்த ஊரான ஆர்ஜென்டீனா மக்களுக்கோ வேறு கனவுகள் உலகையே லயிக்க வைக்கும் மெஸ்ஸி, பார்சிலோனா அணியை ஒவ்வொரு பதக்கத்தையும் பல முறை வெல்ல வைத்த அவர்கள் மெஸ்ஸி, அவர்களுக்காக, அவர்கள் தேசத்துக்காக ஒரேயொரு கோப்பையை வென்று தர வேண்டும் என்பது தான் அது. அந்தக் கனவு தான் மக்களின் அந்தத் தீராத ஆசை தான், தனது காற்பந்து வாழ்க்கையில் பல ஆண்டுகள் மீதமிருந்தும், உச்சக்கட்ட ஃபார்மிலிருந்த போதும் அந்த ஜாம்பவானை விடை பெற வைத்திருக்கிறது. 2007 இல் தொடங்கியது அந்தக் கனவுக்கான வேள்வி. கோபா அமெரிக்கா இறுதிப் போட்டியில் பிரேசிலிடம் தோல்வியுற்ற போது, '1993 இற்குப் பிறகு கோப்பை வாங்காத தங்கள் அணிக்கு என்றாவது ஒரு நாள் இந்த இளம் புயல் கோப்பை வென்று தரும்' என்றே நம்பினார்கள். ஆனால் அந்தக் கனவை 2014 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில், 2015 கோபா பைனலில் இறுதியாக நடந்த கோபா நூற்றாண்டுக் கோப்பை பைனலிலும் நிறைவேற்ற முடியாத விரக்தியில் விடைபெற்றுள்ளார் மெஸ்ஸி.

**உச்சக்கட்ட பிரஷர்**

டீகோ மரடோனா என்னும் மகத்தான வீரனைக் கண்ட ஆர்ஜென்டீனா மக்களுக்கு அவரது வாரிசாய்க் கிடைத்தார் மெஸ்ஸி. 2008 ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற போது, மெஸ்ஸியின் நிழலில் டீகோவைக் கண்டுவிட்டார்கள் போலும், "மெஸ்ஸி எங்களுக்கு உலகக் கோப்பையை வென்று தர வேண்டும்" என்று ஒவ்வொரு முறையும் முழங்கிக்கொண்டே இருந்தார்கள். ஆனால் உண்மையில் ஆர்ஜென்டீனா மெஸ்ஸி என்ற தனிமனிதனைச் சுற்றியுள்ள அணி இல்லை என்றே சொல்ல வேண்டும். காரணம், அவ்வணி வீரர்கள் அனைவருமே முன்னணி கிளப்புகளுக்காக விளையாடி வரும் நட்சத்திர வீரர்கள். ஹிகுவெய்ன் சீரி அ தொடரில் இந்த சீசனில் மட்டும் 36 கோல்கள் அடித்து சாதனை படைத்தார். அகுவேரோ மான் செஸ்டர் சிட்டி அணிக்காக வெறும் 30 போட்டிகளில் 24 கோல்கள் அடித்து அசத்தினார். டி மரியா பி.எஸ்.ஜி வீரர்களுக்கு 18 அசிஸ்டுகள் செய்து லீக் 1 இல் புதிய சாதனை படைத்தார். இவர்கள் மட்டுமல்ல ஓடாமெண்டி, பேஸ் சோர், மாசரானோ, ரோஜோ என அனைவருமே ஃபார்மில் இருக்கும் வீரர்கள் தான். சொல்லப் போனால் தற்போதைய நிலைமையில் நடப்பு சம்பியன் ஜேர்மனியை விட வலுவான அணி ஆர்ஜென்டீனா தான். ஆனாலும் ஏன் இந்த ஏமாற்றம்? பிரஷர் தான் இதற்கெல்லாம் முக்கிய காரணம். நாளுக்கு நாள் எகிறும் பிரஷர் ஆர்ஜென்டீனா அணியில் கெமிஸ்ட்ரி செட் ஆகவே விடவில்லை.

இத்தகைய நட்சத்திரம் பலர் இருந்தாலும், மெஸ்ஸி என்ற சூரியனைச் சுற்றியே ஆர்ஜென்டீனா காற்பந்து வலம் வந்தது. அது மெஸ்ஸியின் மீது அழுத்தம் தந்தது. பார்சிலோனாவிற்காக மெஸ்ஸி கலக்குகிறார் என்றால், அங்கு அவர் கப்டன் இல்லை. ஆனால் தேசிய அணியின் கப்டன் என்பதே அவர் மீதான பிரஷரை பல மடங்கு அதிகரித்து விடுகிறது.

அதுமட்டுமின்றி பார்சிலோனாவின் ஜாவி ஹெர்னான்டெஸ், இனியஸ்டா போன்ற வீரர்கள் இல்லாததும் அவருக்கு சற்று ஏமாற்றம் தான். "ஜாவி, இனியஸ்டா இல்லன்னா மெஸ்ஸி ஒண்ணும் இல்ல" என்று ரொனால்டோ வெறியர்கள் சொல்லக் கேட்டிருப்போம். அதை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும், மெஸ்ஸியின் வெற்றியிலிருக்கும் அவர்களின் பங்கை ஒதுக்கிவிட முடியாது. சற்றும் சுயநலம் இல்லாமல், மெஸ்ஸி கோல் அடிக்க அசிஸ்டுகள் அடுக்கிய அவர்களைப் போல் ஆர்ஜென்டீனா அணியில் குவாலிடியான மிட் பீல்டர்கள் இல்லை. அவர்களோடு ஒத்துப்போகக் கூடிய ஒரே வீரரான டி மரியாவும் காயத்தால் அவதிப்பட்டதால், இறுதிப் போட்டியில் மெஸ்ஸியால் சோபிக்க முடியவில்லை. என்னதான் மைதானம் முழுதும் ஓடியாடினாலும் கம்பெனி கொடுக்க ஒரு ஆள் வேண்டுமல்லவா?

ஹிகுவெய்ன், அகுவேரோ போன்றோர் அவுட் அண்ட் அவுட் ஸ்டிரைக்கர்கள் என்பதால், அவர்கள் மெஸ்ஸிக்கு அசிஸ்டுகள் செய்ய முற்பட மாட்டார்கள். அது மட்டுமன்றி பார்சிலோனாவின் ஃபார்மேஷனுக்கும், ஆர்ஜென்டீனாவின் ஃபார்மேஷனுக்கும் ஒரு சிறு வேறுபாடு இருக்கிறது. இரு அணிகளும் 4-3-3 செட் அப்பில் தான் விளையாடுகிறார்கள். மெஸ்ஸி இயற்கையாகவே ஸ்டிரைக்கராக விளையாடுபவர். ஆனால் அவ்விரு அணிகளிலும் இருக்கும் இன்னொரு உலகத்தர ஸ்டிரைக்கரால் (சுவாரஸ் - பார்சிலோனா, ஹிகுவெய்ன்- ஆர்ஜென்டீனா) மெஸ்ஸி ரைட் விங்கில் ஆட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இங்கு தான் இரு அணிகளின் அணுகுமுறையும் மெஸ்ஸியின் ஆட்டத்தைப் பாதிக்கிறது. பார்சிலோனா பயிற்சியாளர் ஜோசே என்ரிக், மெஸ்ஸியை வலப்புறம் அமர்த்தினாலும், அவர் களம் முழுதும் இயங்கும் சுதந்திரத்தைக் கொடுத்துள்ளார். அதற்கேற்றாற்போல் சுவாரசும் அவுட் அண்ட் அவுட் ஸ்டிரைக்கராக இயங்காமல் ஒரு 'ஃபால்ஸ் 9' ஆக விளையாடி மெஸ்ஸிக்கு அற்புதமாக கம்பனி கொடுக்கிறார். மெஸ்ஸி கோல்நோக்கிச் செல்லும் போது சுவாரஸ் மெஸ்ஸியின் பொசிஷனை கவர் செய்து விடுகிறார். இந்த அற்புத பார்ட்னர்ஷிப் தான் தேசிய அணியில் அவருக்கு கிடைப்பதில்லை. அதற்காக ஹிகுவெய்னையும் குறைகூற முடியாது. அது அவரது ஸ்டைல்.

ஆர்ஜென்டீனா அணியின் பயிற்சியாளர்களாக இருந்த மரடோனாவோ, ஜெரார்ட் மார்டினோவோ, அலெக்சாண்ட்ரோ சாபெல்லாவோ, மெஸ்ஸிக்கு அந்த சுதந்திரத்தை வழங்கியிருந்தால், பார்சிலோனா அணிக்காக விளையாடியதை விடவும் மெஸ்ஸி சிறப்பாக விளையாடியிருப்பார்.

இப்படியான டெக்னிக்கல் விடயத்தைப் புரிந்துகொள்ளாத பலரும், "மெஸ்ஸி பார்சிலோனா அணிக்காக மட்டும் தான் விளையாடுகிறார். தேசிய அணிக்காக அவர் விளையாட விரும்புவதில்லை" என்று வசை பாடத் தொடங்கிவிடுகின்றனர். இது இன்று நேற்று கூறப்படும் கருத்து அல்ல. 2010 உலகக்கோப்பையில் மரடோனா பயிற்சியாளராக இருந்த போதிலிருந்தே தொடங்கிவிட்டது. அத்தொடரில் ஆர்ஜென்டீனா அணி காலிறுதியோடு வெளியேறிய போது "மெஸ்ஸியால் மரடோனா ஆக முடியாது" என்று தூற்றத் தொடங்கிவிட்டனர். மெஸ்ஸிக்கு உலகளவில் எவ்வளவு ரசிகர்கள் இருக்கிறார்களோ, அதே அளவிற்கு அவரை வெறுப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களுள் பெரும்பாலோனோர் மாட்ரிட் ரசிகர்கள். அவர்கள் அவரை வசைபாடுவதை அவர் ஒருநாளும் பெரிதாய் எடுத்துக் கொண்டதில்லை. ஆனால் தனது சொந்த நாட்டு ரசிகர்களே அவரைத் தூற்றுவது தான் அவரால் ஏற்றுக்கொண்டிருக்க முடியாது. அந்த விரக்தி தான் அவரை இவ்வளவு சீக்கிரத்தில் ஓய்வு முடிவை அறிவிக்க வைத்துள்ளது.

மைதானத்தில் கண்ணீரோடு வெளியேறிய மெஸ்ஸி கூறிய வார்த்தைகள் "பலமுறை ஆர்ஜென்டீனா அணியோடு சம்பியனாக முயன்றேன். ஆனால் முடியவில்லை. இப்போது எனது ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருகிறேன். இது முடிந்தது. அவ்வளவு தான்" என்று கண்ணீரோடு விடைபெற்றார். அந்தக் கண்ணீர் அவரது தோல்வியை எடுத்துக் காட்டியிருக்கலாம். ஆனால் வரலாறு அவரை ஒரு வெற்றிநாயகனாகவே கொண்டாடும்! காற்பந்து அவரை ஒரு சம்பியனாகவே பார்க்கும்! (க)

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: வசந்த ஊஞ்சலிலே...
இசை: ரி.ராஜேந்தர்
பாடியவர்: ரி.எம்.சௌந்தரராஜன
பாடலாசிரியர்: ரி.ராஜேந்தர்
படம்: ரயில் பயணங்களில்




வசந்த ஊஞ்சலிலே..ஏ.....
அசைந்த பூங்கொடியே.....
உதிர்ந்த மாயம் என்ன...
உன் இதய சோகம் என்ன...
உன் இதய சோகம் என்ன...அ...

நூலும் இல்லை வாலும் இல்லை
வானில் பட்டம் விடுவேனா...
நாதி இல்லை தேவி இல்லை
நானும் வாழ்வை ரசிப்பேனா..ஆ.....
நானும் வாழ்வை ரசிப்பேனா..ஆ.....
நூலும் இல்லை வாலும் இல்லை
வானில் பட்டம் விடுவேனா...
நாதி இல்லை தேவி இல்லை
நானும் வாழ்வை ரசிப்பேனா..ஆ.....
நானும் வாழ்வை ரசிப்பேனா..ஆ.....

நினைவு வெள்ளம் பெருகி வர
நெருப்பெனவே சுடுகிறது
படுக்கை விரித்து போட்டேன்
அதில் முள்ளாய்.. அவளின் நினைவு
பாயும் உலகை வெறுத்தேன்
அதில் ஏனோ இன்னும் உயிரு
படுக்கை விரித்து போட்டேன்
அதில் முள்ளாய் அவளின் நினைவு
பாவி உலகை வெறுத்தேன்
அதில் ஏனோ இன்னும் உயிரு
மண்ணுலகில் ஜென்மம் என
என்னை ஏனோ இன்று வரை
விட்டு வைத்தான்...
கண்ணில் ரெண்டும் திராட்சை
கொடி இன்னும் வைத்து
கண்ணீரை பிழிந்தெடுத்தான்
இறைவா....ஆஅ.....
கண்ணீரை பிழிந்தெடுத்தான்
நூலும் இல்லை வாலும் இல்லை
வானில் பட்டம் விடுவேனா...
நாதி இல்லை தேவி இல்லை
நானும் வாழ்வை ரசிப்பேனா..ஆ.....
நானும் வாழ்வை ரசிப்பேனா..ஆ.....

நிழல் உருவி இணைந்திருக்க
நிஜம் வடிவில் பிரிந்திருக்க
பூத்தால் மலரும் உதிரும்
நெஞ்சில் பூத்தால் உதிரவில்லை
நிலவும் தேய்ந்து வளரும்
அவள் நினைவோ தேய்வதில்லை
பூத்தால் மலரும் உதிரும்
நெஞ்சில் பூத்தால் உதிரவில்லை
நிலவும் தேய்ந்து வளரும்
அவள் நினைவோ தேய்வதில்லை
காடு தன்னில் பாவி உயிர்
வேகும் வரை பாவை உன்னை
நினைத்திடுவேன்
பாடையிலே போகையிலும்
தேவி உன்னை தேடி உயிர் பறந்திடுவேன்
உறவை... தேடி உயிர்
பறந்திடுவேன்....
நூலும் இல்லை வாலும் இல்லை
வானில் பட்டம் விடுவேனா...
நாதி இல்லை தேவி இல்லை
நானும் வாழ்வை ரசிப்பேனா..ஆ.....
நானும் வாழ்வை ரசிப்பேனா..ஆ.....
நானும் வாழ்வை ரசிப்பேனா..ஆ.....

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
விமல், சிந்து, சிவகுமார் குடும்பம், பாலகுமார் குடும்பம், சசி, அருணா, ஜீவா, திருமதி ஜோர்ச் வில்மன்,

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரி யுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவ ரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

## தரமான இயக்குநர்கள் சங்கமிக்கும் கூட்டாளி




தமிழ் சினிமா இயக்குநர்கள் பலரும் ஈழத்தின் மேல் தனிக்கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் குறும்பட முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர்.

அந்த வகையில் ஈழம் தனிநாடாக உருவாக வேண்டும் என்ற நோக்கில் உருவாகியுள்ள படம் அறிமுக இயக்குநர் நிரோஜன் இயக்கியுள்ள கூட்டாளி. இந்த படத்தின் சிறப்பு காட்சி சென்னை வட பழனியில் உள்ள சு.மு.ஏ. ஸ்ரூடியோவில் திரையிடப்பட்டது. இந்த விழாவுக்கு பாரதிராஜா, ஜனநாதன், சீமான், சேரன், மனோபாலா, பேரரசு, வசந்தபாலன், மிஷ்கின் உட்பட பல தரமான இயக்குநர்களும் புலவர் புலமைப்பித்தன், நடிகர்கள் சத்யராஜ், விதார்த், கஞ்சாகறுப்பு, சு.மு. சுரேஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த படைப்புக்கு சினி உலகம் ஊடக அனுசரனை வழங்கியது. உங்களுடைய படைப்புகளுக்கும் இலவச ஊடக அனுசரணை வேண்டும் என்றால் pr@cineulagam.com மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.

## பிபிசி ஆசிய வானொலியில் ஒலிபரப்பாகிய கிள்ளி நுள்ளி பாடல்



மதீசன் தனபாலசிங்கம் இசையமைத்து வெளியான பாடல் கிள்ளி நுள்ளி. ஜனகராஜ், கோபிராம், ஹரீஷ், ஜேசன் மற்றும் மதீசன் ஆகியோர் பாடி, லங்காசிறி இணையத்தின் ஊடக அனுசரணையில் வெளியானது.

வழக்கொழிந்து போன எங்கள் சிறுவர்களின் விளையாட்டுப் பாடல்களின் நவீன தொகுப்பாக வெளிவந்து பலரது பாராட்டுக்களைப் பெற்ற பாடல், மேலும் ஒரு மைல் கல்லை அடைந்துள்ளது. பிரபல வானொலியான பிபிசி ஆசிய ஒலிபரப்பில் இந்தப் பாடல் ஒலிபரப்பாகியிருக்கிறது. ஈழத்தமிழர்கள் அனைவரையும் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள் இந்த இளைஞர்கள்.

## அஜந்தனின் வித்தியாசமான கதைக்களத்தில் சிப்பி சோகி



முன்பெல்லாம் ஒரு படைப்பை வெளியிடுவது கடினமான ஒரு விடயமாக இருக்கும். ஆனால் இப்போதெல்லாம் ஒரு படைப்பை இயக்கி வெளியிட்டாலும், வித்தியாசமான கதைக்களத்தை கொண்ட படைப்பிற்கு தான் மக்கள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அந்த வகையில் அஜந்தன் என்ற கலைஞனின் வித்தியாசமான கலைநோக்கில் தயாராகி வெளியாகி இருக்கும் படைப்பு சிப்பி சோகி. ஆரம்பத்தில் கதை என்னவாக இருக்கும் என்று யோசிக்க வைத்தாலும் இறுதியில் நல்ல கருத்தோடு முடிக்கின்றனர்.

## முற்றிலும் மாறுபட்ட கதைக்களத்தில் ஒருவன்




ஈழத்தின் பிரபல நடிகர் டேன்ஸ் நடிப்பில் தயாராகும் பாடல் ஒருவன். தர்சன் இயக்கி, ஒளிப்பதிவு செய்துவரும் இந்த படைப்பிற்கான படப்பிடிப்புகள் தற்போது 50% முடிவடைந்துள்ளது.

படப்பிடிப்பில் பிஸியாக இருக்கும் நிலையில் படக்குழுவினர் ஒரு போஸ்டர் வெளியிட்டுள்ளனர். இந்த ஒருவன் மக்களுக்கு என்ன சொல்ல போகிறான் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# ஈழத்து கவிதைகள்

## எழுகை

ஏகப் பெருவெளியில்
எல்லை இல்லாச் சூனியத்தின்
மூடற்பெருமிருட்டு மொய்ப்பிடையே...
ஓடிவரும்
காற்றுருண்டை ஒன்றிருந்த காரணத்தாலே,
சில பேர்
மூச்சு விடலானோம் முளைத்து
காற்றிலே தூசு கலந்திருக்கும் காரணத்தாலே
நேற்றும் இன்றும் நாளையும்
நீலமாய்த்
தோற்றம்
தருகின்ற வானத் தனிப்பந்தல் மூட
உருளும் பெரிய உலகு
பல்லாயிர கோடிப் பந்து நெருப்புகளில்
சொல்வார்கள்
சூரியனும் ஒன்று
என்று
செய்யாமற்
செய்த உதவி சிறிதோ?
அச் சூரியனால்
பைய நகரும் பகல்
உருளும் பெரிய உலகில் உயிர்கள் பெருகும்
பெருகிப் பலவாய்
நிரையாகி
கும்பலாய்ப் பய்)ம்பலாய்க் கோடிகளாய்ப் பல்கிவிட
இன்பதுன்பம் கூடும் எழுந்து
பைய நகரும் பகலெல்லாம்
பல்லுயிர்கள்
உய்ய விழையும் உழைப்பாலே
மெய்வருந்தி
உண்டி பெறவும் உடை பெறவும் பாடுபடும்...
பண்டங்கள் எய்தும் பல.

## எண்ணம்

பின்னர் ஒரு நாள்...
பிணமானார் அண்ணனார்
என்ன இனிச் செய்வான்?
எழுந்திரான்
மண்ணோடு
மிஞ்சாது மண்ணுவான் அண்ணன்
மரந்தடிபோல் எஞ்சுமோ
அஞ்சாறெலும்பு
மாண்டவனைக் கொண்டோர் மரநிழலிற்போட்டார்கள்
நீண்டபொழுதாய் நினைந்திரங்கிச்
சோர்ந்து கதறி அழுதார்கள்
காட்டொதுக்கில் வீசி
இதயம் குலைந்தார் இடிந்து
அண்ணன் மறைந்தான்
அவனை நினைந்த தம்பி
எண்ணத்தில் மூழ்கி இருந்து விட்டான்
கண்ணீர் வழியும் முகத்தனாய்
வாழ்வைக் கருதி
அழியும் அசுத்தனே ஆய்
மூச்சுக்காற்றன்றே முயல் எலியை ஓடவைக்கும்
ஆச்சரிய சக்தி?
அதுபோலவே
மேற்சாதி
ஆனாலும் அண்ணருக்கும் அப்படியோ?
அக்காற்றுத்தானோ
இயக்கி வைக்கும் தான்?
உய் என்று வீசும்...
உயர்ந்த மரங்களையும்
கொய்து முறித்துக்கொலை செய்யும்
வையகத்தைத்
தூளாக்கி நீக்கித் தொலைக்கின்ற காற்றன்றே
ஆளாக்கும் எம்மை அசைத்து?
பற்றும் நெருப்பைப் பரந்து படரவைக்கும்
தொற்றித் தொடுத்துத் தொடரவிடும் முற்றும்
எரிக்க நெருக்கும்–நெருப்பை விரிக்கும்
சுருக்க உதவி செய்யும் காற்று
காற்றே உயிர்ப்பு
கருத்துகளின் தோற்றுவாய்
ஆற்றல் அதுவன்றே?
ஆதலால் ஏற்றமுடன்
மேம்பட்ட சித்தமிளிர்வுக்கே ஆதாரம்
நாம் பெற்ற வாழ்க்கை நலம்
இந்த வகையாக எண்ணி இருந்த அவன்
சொந்த உடம்பை வந்து தொட்டிருந்த இன்பத்
தளிர்க்கை விரல் கண்டு தன் நெஞ்சிழந்து
குளிர்ச்சி கொண்டான், கூடிக் குழைந்து

**1986 இல் வெளிவந்த கவிஞர் முருகையனின் அது– அவர்கள் எனும் நூலில் இருந்து...**

# மெட்ரோ

## திரைவிமர்சனம்

படம் வருவதற்கு முன்பே பலரின் கவனத்தையும் ஈர்த்த ஒரு படம் மெட்ரோ.

சென்ஸார் போர்டே படத்தை ரிலீஸ் செய்யக் கூடாது, இந்த காட்சியை கட் செய்யுங்கள், அந்த காட்சியை கட் செய்யுங்கள் எனக் கூறியது. இப்படி பல தடைகளை மீறி இன்று உலகம் முழுவதும் இப்படம் வெளிவந்துள்ளது.

ஒரு சில இயக்குநர்கள் நல்ல படம் இயக்கியும் வெளியே தெரியாமல் இருப்பார்கள்.

அந்த வகையில் விதார்த் நடித்த ஆள் படத்தின் இயக்குநர் ஆனந்த கிருஷ்ணா தான் இந்த மெட்ரோ படத்தின் இயக்குநர்.

ஆசைப்படுவதில் தவறில்லை, பேராசைப்படுவது ஒருவனை இத்தனை மோசமான உலகத்திற்கு அழைத்து செல்கிறது என்பதே மையக் கரு. அழகான குடும்பத்தில் சிரிஷ் இருக்க, இவருடைய தம்பிக்கு சொகுசு வாழ்க்கை வாழ ஆசை வருகிறது.

இருப்பதை வைத்து நிம்மதியாக வாழ் என்று அப்பா, அம்மா, அண்ணன் எவ்வளவோ அறிவுரை கூறினாலும், கேட்காமல் பைக், ஐ போன் வாங்குவதற்காக தன் நண்பனின் மூலம் நகை பறிக்கும் வேலையில் ஈடுபடுகிறார்.

தனக்கு தேவையான அத்தனை பணமும் வர, ஒரு கட்டத்தில் பணத்திற்காக தன் சொந்த அம்மாவையே கொலை செய்கிறார்.

இதன் பின் சிரிஷ் தன் தம்பி தான் கொலை காரன் என்று தெரியாமல் இந்த கும்பலை பிடிக்க புறப்பட, என்ன ஆகின்றது என்பதை மிகவும் உணர்ச்சி பூர்வமாக கூறியிருக்கின்றார் ஆனந்த கிருஷ்ணா.



படத்தின், முதல் ஹீரோ திரைக்கதை தான். அதை விட இப்படி ஒரு கதையை தேர்ந்தெடுத்ததற்காகவே ஆனந்த் கிருஷ்ணாவிற்கு ஒரு பாராட்டு. சென்னை போன்ற மெட்ரோ சிட்டிகளில் நடக்கும் வழிப்பறிகளை கண்முன் கொண்டு வந்துள்ளார்.

ஒரு மாணவன் எப்படி பணத்திற்காக இத்தனை குற்றங்களை எல்லாம் செய்கிறான் என்பதையும் வெட்ட வெளிச்சம் போட்டு காட்டியுள்ளனர். அதிலும் செயின் பறிப்பு எப்படி நடக்கின்றது என்பதை இத்தனை ஆழமாக வேறு எந்த படத்திலும் கூறியது இல்லை என்றே கூறலாம்.

இப்படத்திற்கு சென்ஸார் பல தடைகள் விதித்ததாக கூறுகிறார்கள், உண்மையாகவே இப்படத்தை பார்த்த பிறகு பல பெண்கள் விழிப்புணர்வுடன் தான் இருப்பார்கள்.

ஏனெனில் பெண்கள் எப்படி வெளியே வந்தால் செயின் பறிப்பு நடக்கும் என்பதை மிகவும் டீட்டெயிலாக கூறியுள்ளனர்.



நாம் பார்க்காத ஓர் உலகத்தில் டோச் அடித்து வெளிச்சத்துடன் வெளியே காட்டியுள்ளார் இயக்குநர். இதற்கு முன் இப்படி ஒரு இருண்ட உலகத்தை காட்டியது பொல்லாதவன் படமாக தான் இருக்கும். ஆனால், பல இடங்களில் குறும்படம்பார்ப்பது போலவே ஒரு எண்ணம் வருவதை தவிர்க்க முடியவில்லை.

இது கண்டிப்பாக நடித்த நடிகர்கள் தான் காரணம் என்று கூறலாம், ஹீரோ அவருடைய தம்பி இருவருமே யதார்த்தத்தை மீறி நடித்துள்ளது கொஞ்சம் செயற்கை தனமாக உள்ளது.

பாபிசிம்ஹா எப்போது இந்த படத்தில் நடிக்க சம்மதித்தார் என்று தெரியவில்லை. ஏனெனில் படத்தின் ஆரம்பத்தில் பெரிய பில்டெப்புடன் மிரட்டினாலும் கிளைமேக்ஸில் கிச்சு கிச்சு மூட்டி செல்கிறார்.

படத்தின் திரைக்கதை, ஆரம்பத்திலிருந்து இறுதி வரை ஒரு பதற்றத்துடனே நம்மை உட்கார வைக்கின்றது.

படத்தின் வசனம் 'ஒரு பையனின் ஆசையை நிறைவேற்றுவது அப்பாவின் கடமை, பேராசையை இல்லை' திருடனாக இருந்தாலும் பேராசை வரக்கூடாது போன்ற வசனங்கள் கவனிக்க வைக்கின்றது.

ஜோஹனின் இசையில் பாடல்கள் மனதில் நிற்கவில்லை என்றாலும் பின்னணியில் மிரட்டுகிறார்.

படத்திற்கு மற்றொரு பலம் சேர்ப்பது உதயகுமாரின் ஒளிப்பதிவு, அதிலும் கிளைமேக்ஸில் அந்த இரவில் நடக்கும் காட்சியை லைவ்வாக பார்ப்பது போல் இருந்தது.


அட சென்ட்ராயன் அனைத்து கதைக்களத்திலும் கலக்குகிறார், காமெடி, சோகம் என அனைத்திலும் செம்ம ஸ்கோர் செய்கிறார்.

இன்னும் கொஞ்சம் யதார்த்தமாக ஒரு சில கதாபாத்திரங்கள் நடித்திருக்கலாம்.



அம்மாவை கொலை செய்த ஹீரோவின் தம்பியின் கைரேகையை எடுக்கிறார்கள், ஆனால் அது பற்றி எந்த ஒரு தகவலும் வராதது லொஜிக் மீறல்.

மொத்தத்தில் மெட்ரோ போன்ற ஹைஃபை சிட்டிகளின் மற்றொரு இருண்ட பக்கத்தை வெளிச்சம் போட்டு காட்டியதற்காகவே கண்டிப்பாக இந்த மெட்ரோவை பார்க்கலாம்.



# தகவல் அறியும் உரிமைச்சட்டம் கொண்டுள்ள பலவீனமான அம்சங்கள்

தகவலறியும் உரிமைச் சட்டமானது (RTI) கடந்த மாதம் 24 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. இச்சட்டமானது கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தயாரிக்கப்பட்டு வநதது. அரசின் தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்ட அடுக்குகளோடு அரசசார்பற்ற நிறுவனங்களையும் இணைத்து இறுதி வடிவம் பெற்றிருப்பதானது மகிழ்ச்சி தருகின்றது.

**தகவலறியும் உரிமைச் சட்டத்தின் தோற்றம**

1990 களின் பிற்பகுதியில் ஏற்பட்ட ஆசிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து வளரநதுவரும் ஆசிய பொருளாதார நாடுகள் பலவற்றில தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் நிதிப்பொறுப்புச் கூறல் சட்டம் என்பன தோற்றம் பெற்றன. புதிதாக கைத்தொழில் மயமான நாடுகளான இந்தோனேஷியா, மலேசியா, தாய்லாந்து போன்ற (அடம் ஸ்மித் கூறுவது போல மிலேச்சத்தன மான போக்கினை கொண்ட நாடுகள்) நாடுகளை கீழ்ப்படியச் செய்வதற்காக இச்சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. உலகெங்கிலும் தகவல அறியும் உரிமை (RTI) அல்லது தகவல் அறியும் சுதந்திரம் (FOI) என்பன பல் நாடுகளில் பாவனையாளர் பாதுகாப்பு உரிமைச் சட்டங்களின் இயற்கையான பின் விளைவுகளாகவுள்ளன.

1990 களின் இறுதிப் பகுதியில் நிகழ்ந்த ஆசிய நிதி நெருக்கடியானது, குறிப்பாக நிதிநெருக்கடியால பாதிக்கப்பட்ட அநேக நாடுகளின் நிதிச்சந்தைகள் பற்றிய போதிய தகவல்கள் இனமையாலேயே நிகழ்ந்த தென்பதனை நிரூபிப்பதற்கு தக்க சான்றுகள் உளளன.

இலங்கையிலும் கூட பாரிய பொருளாதார தாராளமயமாக்கலின் இரண்டாவது அலை 1990 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களான ரெலிகொம், ஸ்ரீலங்கன் எயார்லை ன்ஸ், மற்றும் சிலோன் காஸ் என்பன 1990 களின் பின்னரைப் பகுதி களில் பகுதியாக தனி யார் மயமாக்கப்பட்டன. தனியார் மயமாக்கல் செயற்பாடுகளினபோது அரச நிறுவனங்களின் சொத்துகள் குறை மதிப்பிடப்படல் மற்றும் பாரிய ஊழல் குற்றச்சாட்டுக்கள் என்பன முன்வைக்கப்பட்டன. மேலும் சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கை முதல் தடவை யாக 2001 ஆம் ஆண்டில் அரசின் அதிகரித்த செலவீனம் காரணமாக எதிர்மறை (-1.5%), வளர்ச்சியினை எதிர்கொண் டது. (2000 ஆம் ஆண்டளவில் ஆனையிறவின் வீழ்ச்சிக்குப் பின்னர் உக்கிரமடைந்த உள்நாட்டுப் போர் அச் செலவீன அதிரிப்புக்கான தேவையை பகுதியளவில் ஏற்படுத்தியிருந்தது.)

2001 ஆம் ஆண் டின் இறுதிப் பகுதிகளில் இடம் பெற்ற பாராளுமன்றத் தேர்தல்களின் போதான பாரிய ஊழல்கள் மற்றும் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக நிதி பொறுப்புக் கூறல் சட்டம் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பனவற்றுக்கான பிரேரணைகளை அப்போதைய எதிர்க்கட்சியாகவிருந்த ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்தது. 2001 ஆம ஆண் டின் இறுதியில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல்க ளில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றது. இப்போதும் ஐக்கிய தேசியக்கட்சி பதவியில் உள்ளது. ஐக்கிய தேசியக கட்சி அரசானது நிதி (முகாமைத்துவ) பொறுப்புக் கூறல் சட்டத்தினை 2003 ஆம் ஆணடில் இயற்றியது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முதல் வரைவானது 2003 ஆம் ஆணடில் இவ்வரசினால் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் தகவல் அறியும் உரிமைச் சட்ட மூலமானது பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தேர்தல்களில்அரசு தோல்வியைத் தழுவியது.



**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படைக் குறைபாடுகள்**

இலங்கையில் நல்லெண்ணம் கொண்டு இயற்றப்படும் ஏனைய அநேக சட்டங்களைப் போல நிதி (முகாமைத்துவ) பொறுப்புக் கூறல் சட்டமானது இன்று வரை முற்றுமுழுதாக அமுல் செய்யப்படவில்லை. உதாரணத்துக்கு நிதி (முகாமைத்துவ) பொறுப்புக் கூறல் சட்டமானது, வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை அரசு 2006 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5% வரை குறைக்க வேண்டும் என நிர்ணயித்திருந்தது. இது முன்னைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங் கங் களாலோ (2004-2014) தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசினாலோ இற்றை வரை எய்தப்பட்டிருக்கவில்லை. மேலதிகமாக இவ் இலக்கானது எதிர்காலத்தில் அடையப்படும் என்பதற் கான எந்தவொரு உறுதிப்பாடும் அறிகுறியும் கூடத்தென்படவில்லை.

1987 ஆம் ஆண்டின அரச கரும மொழிகள் சட்டமானது அரசியல் விருப்பங்கள், அக்கறையின்மை மற்றும் பொதுச சேவையில் உள்ள அதிகாரிகளின் அர்ப்பணிப்பின்மை போன்ற காரணங்களால் இன்னமும முற்றுமுழுதாக அமுல் செய்யப்படவில்லை (30 வருடங்களாக அமுலில் இருந்தும்) என்பது மிகவும் மோசமான உண்மையாகவுள்ளது.

அதனைப் போலவே 2003 ஆம் ஆண்டில் அப்போது ஆட்சியில் இருந்த அரசானது பாவனையாளர் விவகார அதிகாரச் சட்டத்தினை (CAA) செயற்படுத்தியது. இச்சட்டமானது இற்றைவரை பாவனையாளர் பாதுகாப்பில் மிகக் குறைந்த தாக்கத்தினையே செலுத்தி வருகின்றது.

நீதித்துறையைப் பொறுதத வரை தாமதிக்கப்படும நீதியானது எப் போதும் மறுக்கப்படும் நீதியாகவே கருதப்படுகின்றது. எனவே நாட்டின் ஆளுகையில் சாதகமான மாற்றத்தினை உண்டு பண்ண வேணடுமானால் தகவல் அறியும் உரிமைச் சட்ட மூலத்தில் முன்மொழியப்பட்டுள்ள அபராதமானது துரிதமாக வழங்கப்பட வேண்டும். இந்தியாவில் தகவல் அறியும் உரிமை மீறப்படுமிடத்தில், நீதிமன்றின் உதவி பெறப்படாம லேயே அபராதம் விதிக்கும் அதிகாரம் தகவல் அறியும் உரிமை ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

**பொருளாதார தகவலகளுக்கான விலக்களிப்பு ஒரு பாரிய குறைபாடாகும**

தகவல் பெறும் உரிமைசசட்டத்தின் 5 ஆவது சரத்து, தகவல் பெறும் உரிமைகளுக்கான விலக்களிப்புகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. இச்சரத்தானது எந்தவொரு தனிநபர், தேசிய பாதுகாப்பு, இலங்கையின் சர்வதேச விவகாரங்களுக்கு "தீவிரமாக கேடு விளைவிக்கக் கூடிய" தகவல்கள், நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய குந்தகத்தினை ஏற்படுத்தக் கூடிய தகவல்கள் புலமைச் சொத்து பாதுகாப்பு, பிரத்தியேக மருத்துவ தரவுகள், மற்றும் ஏனையவற்றுடன் தொடர்புடையதாக அமைகின்றது. மேற்கூறப்பட்ட அனேக விலக்களிப்புகள் செல்லுபடியானவையாக இருந்தபோதும் இவ் விலக்களிப்புகள் நெருடலுக்குரியனவாகக் காணப்படுகின்றன.


நிர்வாகம், விலை, நாணயமாற்று வீதம், அல்லது வட்டி வீதம் அல்லது சீராக்கல்கள், மாற்றங்கள், என்பன பற்றிய உரிய காலத்துக்கு முன்னரான வெளிப்படுத்தல்கள் சந்தையில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதனையும்அதன மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் என்பதனையும் கட்டுரையாளர் ஏற்றுக்கொண்டாலும், வங்கிக் கட்டுப்பாடுகள், வரிவிதிப்பு, கடல் கடந்த வர்த்தக ஒப்பந்தங்கள், பற்றிய தகவல்கள் எவ்வாறு நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதனை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. இங்கு "உரிய காலத்துக்கு முன்னர்" எனும் பதமானது, தெளிவற்ற தற்சாரந்த ஒரு பதமாகவுள்ளது. இது பொது மக்கள் முக்கிய பொருளாதார மற்றும் நிதிசார் தகவல்களை அறிந்து கொள்வதைத் தடுக்கும் எதேச்சாதி காரத்தனம் மிக்கதாகவே காணப்படுகின்றது. இதன் மூலம் பொருளாதாரத் தின் மீதான பிடி இறுகுவதோடு, மக் களின் நலனிலும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும். உதாரணத்துக்கு மேற்கூறப்பட்ட விலக்களிப்புகள், அரச பத்திரங்கள் மற்றும் அரச முறிகள் என்பனவற்றின் உள் வர்த்தக நடவடிக்கைளை ஊக்குவிப்பதாகவே அமையும். அவ்வாறான உள் வர்த்தக நடடிவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டுமுதல் இடம் பெற்று வருவதான குற்றச்சாட்டுகள் 2015 ஆம ஆண்டு முதல் முன்வைக்கப்படுகின்றன.

விலக்களிப்புகள் பொருளாதாரச் சரிவு அல்லது வீழ்ச்சி தொடர்பான தகவல்களை பொதுமக்களிடம் இருந்து மறைப்பதற்கும் பயன்படுத்தப்படலாம். 1990 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற் பட்ட ஆசிய நிதி நெருக்கடிக்கான முக்கிய காரணமாகவிருந்தது, அநேக ஆசிய அரசாங்கங்கள் பொருளாதாரம் மற்றும் நிதித்துறை தொடர்பான தகவல்களை மக்களி டையே வெளிப்படுத் தாமையே யாகும்.

சர்வானந்தா

facebook

# நோ காகம் அண்ணா!



அந்த கல்யாண சத்திரத்தில் விதவிதமான உணவு பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. எந்த உணவை சுவைக்கலாம் என யோசித்த நேரத்தில், சமையல்காரன் வந்து விடவே தப்பித்தோம், பிழைத்தோம் என மண்டபத்தை விட்டு வெளியே ஓடி வந்தது எலி.

அந்த நேரத்தில் தெருவோரமாக இருந்த மதில் மீது ஒரு காகம் அமர்ந்திருந்தது. அந்தக் காகம் எலியைக் கண்டுவிட்டது. எலியைக் கண்ட மகிழ்ச்சியில் அந்தக் காகமானது, எலியின் அருகே பறந்து வந்து அதனை விரட்டிப் பிடிக்க முயன்றது. தனது தடித்த அலகினால் எலியைக் கொத்திப் போனது.

காகம் தன்னைத்தாக்க வருவதைக் கண்ட எலி கீச்... கீச்... என்று அலறியபடி பரிதாபமாகக் காகத்தைப் பார்த்தது.

காகம் அண்ணா! நீங்கள் செய்வது சரிதானா? மண்டபத்தில் உள்ளே வந்த மனிதருக்குப் பயந்து தெருவில் ஓடிவந்தேன். இங்கே தெருவில் நீங்கள் என்னைப் பிடித்துக் கொல்ல நினைக்கிறீர்களே... என் மீது கொஞ்சமாவது கருணை காட்ட மாட்டீர்களா? என்று அன்போடு கேட்டது.

அதனைக் கேட்ட காகம், எலியே! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. என் பசிக்கு இப்போது உணவு தேவைப்படுகிறது. அதனால் உன்னை இரையாகக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். அதனால், அடம்பிடிக்காமல் எனக்கு இரையாகிவிடும்! என்று கண்டிப்புடன் கூறியது.

காகம் அண்ணா! உங்கள் பேச்சிலும் ஒரு வித நியாயம் இருப்பதாக உணர்கிறேன். ஆனால், உங்கள் குஞ்சுக்கு இதைப்போல் ஓர் ஆபத்து நேர்ந்து அது வேறு ஏதாவது பறவையிடமோ, விலங்குகளிடமோ சிக்கிக் கொண்டால் அது என்ன பாடுபடும். உங்கள் குஞ்சு போன்று என்னை நினைத்து எனக்கு உயிர்ப் பிச்சை கொடுங்களேன்! என்று பரிவோடு கெஞ்சியது எலி.

எலியின் சாமர்த்தியமான பேச்சினால் காகத்தின் மனது இளகிவிட்டது. சிறிது நேரம் யோசனை செய்த காகம் எலியைப் பார்த்து, எலியே! உன்னைப் பார்த்த போது எப்படியாவது உன்னை சாப்பிட்டு விட வேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றியது.

உன் அன்பான வார்த்தைகளைக் கேட்கிற போது அந்த எண்ணம் என் மனதைவிட்டு அகன்றுவிட்டது. நீ உன் சாதுர்யமான பேச்சினால் என் மனதினுள் இருக்கிற பாச உணர்ச்சியினைத் தட்டி எழுப்பிவிட்டாய். இனிமேல் நீ பயமில்லாமல் செல்லலாம்! என்று கூறியபடி வேறு இரையைத தேடிப் பறந்து சென்றது.

எலியும் உயிர்பிழைத்த மகிழ்ச்சியில் தன் இருப்பிடத்தை நோக்கி வேகமாக ஓடியது. அன்பான பேச்சினால் எதிரியின் மனதைக் கூட மாற்றிவிடலாம் என்பதை அந்த எலி மிக நன்றாகவே அன்று புரிந்து கொண்டது. அன்புக்கு இத்தனை பெரிய சக்தியிருப்பதையும், அது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தின் மூலமாக அறிந்து கொண்டது. தானும் பிறரிடம் அன்போடு இருக்க வேண்டும் என்று அன்று முதல் அது உறுதி பூண்டது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 767

Search for people, places and things

### சாரோன்




### கோபிகிருஸ்ணா




### கஜரூபன்




### றொகான் நாகலிங்கம்




### தர்மலிங்கம்

சகித்துக் கொண்டு வாழாமல், கஷ்டத்திலும் ரசித்துக்கொண்டு வாழும் வாழ்க்கை கிராமத்து வாழ்க்கை ..



### சசி கண்ணா

உலகின் தலைசிறந்த 10 அறிஞர்களுக்கு சிலைவைத்துள்ள சிங்கப்பூர் MDIS பல்கலை கழகத்தில், பத்து அறிஞர்களில் ஒருவராக நம் திருவள்ளுவருக்கும் சிலை வைக்கப்பட்டுள்ளது.

தமிழா பெருமைக் கொள்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 40

## முதுமையும் மன ஆரோக்கியமும்



மனம் அல்லது உள்ளம் என்ற ஒன்று உயிருடனும் உடலுடனும் பின்னிப் பிணைந்தது. ஒருவருடைய உடல் ஆரோக்கியத்தைக் காட்டிலும் உள ஆரோக்கியமே அவரது வாழ்வில் கூடியளவு செல்வாக்குச் செலுத்துகிறது எனலாம். பண்டைக் காலந்தொட்டு இவ் உள அல்லது மன சம்பந்தமான கோட்பாட்டை தொட்டு வைக்காத வர்களே இல்லை.

பொய்யாமொழியார் உலகப்பொதுமறையாம் திருக்குறளில் "மனத்துக்கண் மாசிலன் ஆதல்" என்பது அறத்திலே சிறந்தது என்றும் "வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு" என்றும் மனம் அல்லது உளம் என்ற இருகருப் பொருட்களையும் விபரிக்கின்றார்.

இந்தமனம் வயது முதிரும் போது அனுபவத்தில் திளைத்து முழு நிறைவடைகின்றது. ஆனால் பல காரணங்களால் அது முதியவர்களில் அழுத்தத்திற்கு உள்ளாகின்றது அல்லது சோர்வடைகின்றது. இதனால் பொக்கிசமானஅவர்கள் பெற்ற அனுபவங்கள் அவர்களைச் சார்ந்தோரிடம் சென்றடைய முடியாது போகின்றது. மாறாக சிலவேளைகளில் பராமரிப்பாளர்களுக்கு சுமையாகவும் ஆகிவிடுகின்றது.

முதியவர்களின் மனஅழுத்தம் ஒரு பொதுவான பிரச்சினை. மன அழுத்தம் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் அல்லது அதைநிவர்த்தி செய்வதற்கும் பல வழிமுறைகளுண்டு. இவற்றில் பிள்ளைகளுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் நிறையவே பங்குண்டு.

ஏன் இந்த மன அழுத்தம் முதியவர்களுக்கு ஒரு பொதுவான பிரச்சினை என்பதை உற்று நோக்கினால் பல காரணங்களை மனவள மருத்துவர்களும் ஆராய்ச்சியாளர்களும் முன்வைக்கின்றனர். உண்மையில் இது மூளையில் ஏற்படும் நரம்புக் கலங்களுக்கு இடையேயான தொடர்பாடலில் உண்டாகும் ஒரு இரசாயன மாற்றமாகும். இது தற்செயலான ஒருநிகழ்வு அல்ல. இந்த மாற்றங்களுக்கு பலகாரணங்கள் உள்ளன. பரம்பரையில் யாராவது மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பின் அது ஒருமுக்கியமான காரணியாக அமைகின்றது.

முதியவர் ஒருவரின் மிக அன்புக்குரிய நெருக்கமான ஒருவரின் இழப்பு அல்லது பிரிவு திடீரென ஏற்படும் ஒரு பாரதூரமான மருத்துவ பிரச்சினை குறிப்பாக மாரடைப்பு, பாரிசவாதம், புற்றுநோய் என்பனவும் முக்கிய ஏதுக்களாக கருதப்படுகின்றது.

இதைவிட நீண்ட நாட்கள் சேவையிலிருந்து ஓய்வுபெறல், அதனால் ஏற்படும் நிதி நெருக்கடியும் மற்றவர்களில் வாழ்வாதாரத்திற்கு தங்கவேண்டிய தேவை, அளவுக்கு அதிகமான மதுபாவனை, இடமாற்றம் போன்ற சமூக , பொருளாதார பிரச்சினைகளும் மிகுந்த செல்வாக்கைச் செலுத்துகின்றன.

### இந்த மன அழுத்தத்தின் குணங் குறிகள் என்ன?

இவற்றை ஆரம்ப கட்டத்திலேயே இனங்காணல் ஒரு முக்கியவிடயமாகும். குடும்ப அங்கத்தவர்களே பொதுவாக இக்குணங்குறிகளை இனங்கண்டுகொள்ள முடியும்.

காரணமில்லாத கவலை, எளிதில் கோபமடையக் கூடியதன்மை, களைப்பு (துஞ்சக்கேடு), கிரகிக்கும் தன்மையில் குறைவு, நித்திரையின்மை, பசியில் மாற்றம், அழுதல் மற்றும் தற்கொலை எண்ணங்களை வெளிப்படுத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். முதியவர்களில் பொதுவாக உடம்பில் வேறுபட்ட பல இடங்களில் நோ அல்லது வலி ஏற்படுவதை ஒருமுக்கியமான நோய் அறிகுறியாகக் கொள்ளலாம்.

நித்தரையின்மை, களைப்பு, உடம்புவலி என்பனவையே பொதுவாக மன அழுத்தத்திற்குள்ளான ஒரு முதியவரை மருத்துவரிடம் அழைத்துச் செல்லும் குணங்குறிகளாகும்.

### மன அழுத்தத்திற்குரிய பரிகாரத்தை இனி உற்று நோக்குவோம்.

எவ்வாறு மனஅழுத்தம் ஒரு காரணியால் மட்டுமல்லாது பல காரணங்களால் ஏற்படுகின்றதோ அதே போன்றே அதற்குரிய பரிகாரமும் ஒன்றல்ல. மாறாக பல வழிமுறைகளைக் கையாள்வதே ஆகும்.

இது மூளையின் நரம்புக் கலங்களுக்கிடையில் ஏற்படும் இரசாயன சமச்சீரின்மை. ஆதலால் மருந்துகள் ஒரு முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது. இம் மருந்துகள் பல ஆண்டுகாலங்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டு மிகப்பாதுகாப்பானவை என்று நிரூபிக்கப்பட்ட பின்னரே பாவனையில் உள்ளன. இம்மருந்துகள் பொதுவாக மன அழுத்தத்தை குறைக்க அல்லது குணப்படுத்த 4 அல்லது 5 வாரங்கள் கூட ஆகலாம்.

முதியவர்கள் இம்மருந்தை தாமே உள்ளெடுப்பார்கள் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. எனவே பராமரிப்பாளர்களே பொறுமையாகவும் ஒழுங்காகவும் இம் மாத்திரைகளை நோயாளிக்கு அளிப்பதனால் நிச்சயமாக பலன் கிட்டும். இம் மாத்திரைகளில் பலவகை உண்டு. முதியவர்களுக்கு நித்திரை ஒருதேவையாக உள்ளதா, வேறு ஏதாவது மருத்துவ நோய்கள் உள்ளனவா என பல காரணிகளை ஆராய்ந்து ஒரு மருத்துவர் அந்த முதியவருக்குரிய மருந்தை தேர்ந்தெடுப்பார்.

மருந்துகள் மட்டுமல்லபல வாழ்க்கை முறை மாற்றங்கள் மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதை ஊக்குவிக்கின்றன. உடற்பியற்சி இவற்றில் முக்கியமானது. அரைமணி நேரமாவது முதியவர்கள் ஒரு பாதுகாப்பான இடத்தை தேர்ந்தெடுத்து நடைப்பயிற்சி செய்யலாம்.

தங்களுக்கு ஏற்ற ஒரு பொழுதுபோக்கை அவர்கள் தேர்ந்தேடுக்க வேண்டும். கோயில் முன்றலிலோ, சனசமூக நிலையங்களிலோ, சகமுதியவர்களுடன் உரையாடல், மன்றங்களிலும், பரிபாலனசபைகளிலும் அங்கத்துவம் பெறுதல், இசைக்கச்சேரிகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தலும் பங்குபற்றலும் போன்றன முதியவர்களை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் பொழுதை இனிமையாக களிப்பதற்கும் உதவும்.

முதியவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் அதாவது தமது பிள்ளைகளுடனும், பேரப்பிள்ளைகளுடனும் கிரமமாக தமது நண்பர்கள் வீடுகளுக்கோ உறவினர் வீடுகளுக்கோ சென்றுவருவது சாலச்சிறந்தது. இதன் மூலம் பல நீண்டகால சுவாரஸ்யமான சம்பவங்கள் மீட்கப்படுகின்றன. புதிய உறவுகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

நித்திரை முதியவர்களுக்கு இன்றியமையாதது. ஆனால் இந்த நித்திரை தொடர்ச்சியாக பல மணித்தியாலங்களுக்கு அவர்களுக்கு கிடைப்பதில்லை. மாறாக சில சில மணித்தியாலங்களாக பலமுறை அவர்கள் படுத்துறங்குவ துண்டு. எனவே முதியவர்கள் பகல் தூக்கம் கொண்டால் அது சாதாரண சுகமான தூக்கமே. நித்திரைகொள்வதற்கு அவர்களுக்கு ஒரு அமைதியான சூழலும் நேரமும் ஒதுக்கப்படவேண்டும்.

குழந்தைகளுக்கு எவ்வாறு ஒரு சீரான உணவு வளர்ச்சிக்கு அவசியமோ அதுபோன்று ஒரு சரியான போசணையான உணவு முதியவர்களுக்கு தேவைப்படுகின்றது.

குறிப்பாக புரத உணவு இன்றிமையாதது. விற்றமின் B12, விற்றமின் D என்பன குறிப்பாக வயது முதிர்ந்தவர்களிடம் தேவைக்கு குறைவாக காணப்படுவதாக ஆராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன. எனவே மேலதிக விற்றமின்களும் கனியுப்புக்களும் நிறையுணவுடன் சேர்க்கப்படவேண்டும்.

எனவே மன அழுத்தம் என்பது முதுமையால் உடலில் ஏற்படும் உபாதைகளுக்கும் மற்றும் பல நெருக்கடிகளுக்கும் முகம்கொடுக்கும் எமது குடும்பத்தின் தூண்களான மூத்த உறுப்பினர்களுக்கு ஒரு நேர்மாறான விளைவை ஏற்படுத்துகின்றது.

இதைமிக இலகுவாக கண்டுபிடிப்பது என்பது சிரமம். அப்படி கண்டறிந்தாலும் அதற்குசிகிச்சை அளிப்பது ஒரு சவாலான காரியமாகும். ஆம், மன அழுத்தம் குடும்பத்தின் மற்றைய அங்கத்தவர் வாழ்விலும் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணுகிறது. எனவே குடும்ப அங்கத்தவர்கள் தான் இதில் உரிய அக்கறை செலுத்தி தமது அன்புக்குரியவர்களின் ஓய்வான காலங்கள் வளமாக இருப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

வைத்திய கலாநிதி திருநாவுக்கரசு குமணன்
பொதுவைத்தியநிபுணர்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.